பொதுத் தராதரப்பத்திர பரீட்சை (G. C. E.) பாடபுத்தகம் — 1957

# உரைநடை விருந்து

சுன்னாகம்:

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

# உரை நடை விருந்து

KOKUVIL HINDU COLLEGE
BOOK SHOP

இப் புத்தகம்

இலங்கை வித்தியாபகுதியின் வித்தியா பிரசுர சபையினரால் இலங்கைப் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் உபயோகிக்கப்படத் தகுந்ததென 30–7–53 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் :
வட – இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம்

உரிமை பதிவு] 1957 [விலை ரூ. 1-50

முதற் பதிப்பு — — 1953
ஆறும் பதிப்பு (மறுபிரசுரம்) 1957

சுன்னாகம் :
திருமகள் அழுத்தகம்

[உரிமை பதிப்பகத்தார்க் குரியது]

# முன்னுரை

**உரைநடை விருந்து** என்னும் இத் தொகுப்பு நூலில், அறிஞர்கள் சிலரால் அவ்வப்போது எழுதப்பட்ட பத்துக் கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன.

கட்டுரை யாசிரியர்கள் ஒவ்வொருவரும் பேராசிரியர்கள். அவர்களது கட்டுரைகள் ஒவ்வொன்றுங் கவர்ச்சிகரமானவையாயும், உயரிய பொருள் பொருந்தியனவாயும் அமைந்துள்ளன. எத்தன்மையினரும் இந் நூலாற் பயனடைய முடியுமெனினும், விசேஷமாக உயர்தர (**S. S. C., H. S. C.**) வகுப்பு மாணவர்களுக்குப் பாட புத்தகமாக உபயோகப்படுதற்கு இந் நூல் மிகவும் பொருத்தமானது.

இந் நூலைத் தொகுக்கும்போது முக்கியமாக மனத்துட் கொள்ளப்பட்ட விஷயங்கள் இரண்டு. ஒன்று இது: **விருந்து**ணவிற் பல வேறு சுவையமைந்த உணவுப் பொருள்கள் ஒருங்கே கூடி விருந்தின் சுவையை மிகுவித்தல்போல, பலவித கட்டுரைச் சுவையமைந்த கட்டுரைகள் சேர்ந்து **உரைநடைச்** சுவையை மிகுவிப்பது. மற்றொன்று: பல்வேறு சம்பவங்களும், பல்வேறு வகையான கட்டுரைகளும் (இலக்கியம், இதிகாசம், பிரயாணம், விஞ்ஞானம், ஆராய்ச்சி, கலாசாரம், கதை) இயைந்து மாணவர்களுக்குக் கட்டுரை எழுதும் ஆற்றலை அளிப்பது என்பது.

இந் நூலாற் பெறும் பயன் இவையிரண்டும் மாத்திரமல்ல. தமிழ் அறிஞர்களது வாழ்வில் உயர்ந்த தன்மை,

தமிழ் மக்களது வாழ்க்கைச் சிறப்பு, மனிதன் சிந்திக்க வேண்டியதன் அவசியம், சிந்திப்பின் பயனுய் உல்கடைந்த முன்னேற்றம், இன்றைய தமிழ் மக்கள் மறந்துவிட்ட அண்மைக்கால யாழ்ப்பாணத் தமிழ் அறிஞர்களின் சேவை என்பனவும் இந்நூல் மூலம் மாணவர்களறியச் சந்தர்ப்பம் ஏற்படும். அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பல்வேறு துணை நூல் மேற்கோள்களுடன் மாணவர் இந் நூலைக் கற்க ஆசிரியர்கள் உதவிபுரிதல் அவசியம்.

இக் கட்டுரைகளை இந் நூலிற் சேர்க்க அநுமதி யளித்த கட்டுரை யாசிரியர்களுக்கும், கட்டுரைகளை வெளியிட்ட பத்திரிகை அதிபர்களுக்கும் தமிழ்த் தெய் வத்தின் ஆசீர்வாதம் என்றென்றும் உளதாகுக !

இந் நூல் சிரேட்ட வகுப்பு மாணவர்களுக்கும், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் பெரும் பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

வணக்கம்

20-2-53 **பதிப்பகத்தார்**

இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர்

**டொக்டர் க. கணபதிப்பிள்ளை அவர்கள்**

அளித்த

# அணிந்துரை

சுன்னுகம் வட – இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தார் தொகுத்து வெளியிட்டுள்ள உரைநடை விருந்து என்னும் நூல் பார்வைக்குக் கிடைத்துளது. இதில் விபுலானந்த அடிகள், பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, சுத்தானந்த பாரதியார், பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை, திரு. சு. நடேசபிள்ளை முதலிய அறிஞர்களின் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

இக் கட்டுரைகள் யாவும் மாணவர் அறியவேண்டிய புத்தம் புதிய கருத்துக்களைக் கொண்டு மிளிர்கின்றன. இக் காலத்துக்கேற்ற முறையான தமிழ் நடையிலும் அமைந்துள்ளன. இந்நூல் கொண்டுள்ள உட்பொருளைக் கூர்ந்து நோக்குமிடத்து இதற்கு ‘உரைநடை விருந்து’ என்னும் பெயர் தகும் என்றே கூறுதல் வேண்டும்.

**க. கணபதிப்பிள்ளை**

இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதெனிய,
10–3–53

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை ... ... | iii |
| | அணிந்துரை .... ... | v |
| 1. | ஈழநாடுந் தமிழகமும் .... ...<br>(பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்) | 1 |
| 2. | ஊரைக் காத்த பாட்டி ... ...<br>(சுத்தானந்த பாரதியார் அவர்கள்) | 11 |
| 3. | இரண்டு மனுஷர்கள் ... ...<br>(பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள்) | 23 |
| 4. | சிந்தனை சக்திப் பயிற்சி – I ... ...<br>(பொ. திருகூடசுந்தரம், எம். ஏ., பி. எல். அவர்கள்) | 45 |
| 5. | சிந்தனை சக்திப் பயிற்சி – II ... ...<br>(பொ. திருகூடசுந்தரம், எம். ஏ. பி. எல். அவர்கள்) | 52 |
| 6. | இலங்கை ஆற்றுப்படை .... ...<br>(சு. நடேசபிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள்) | 58 |
| 7. | எனது யப்பான் யாத்திரை ... ...<br>(ச. பேரின்பநாயகன், பி. ஏ. அவர்கள்) | 71 |
| 8. | இமயம் சேர்ந்த காக்கை ... ...<br>(சுவாமி விபுலாநந்தர் அவர்கள்) | 85 |
| 9. | கம்பர் காட்டும் பெண்கள் ... ....<br>(வித்துவான், பண்டித கா. பொ. இரத்தினம் பி. ஏ., பி. ஓ. எல். அவர்கள்) | 91 |
| 10. | யூலியஸ் சீசர் ... ...<br>(பண்டிதர் வ. நடராஜன் அவர்கள்) | 100 |

ஓம்

# உரை நடை விருந்து

## ஈழநாடுந் தமிழகமும்

தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் பழமையான தொடர்புண்டு. தமிழ் இலக்கியமே இதற்குச் சான்று. பண்டமாற்று முறையிலும் பண்பாட்டு முறையிலும் தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கு மிடையே இருந்த உறவு சங்கநூல்களிலும் பிற்காலத்துப் பெருநூல் களிலும் பேசப்படுகின்றது. சங்கத் தமிழில் இலங்கை நாட்டை ஈழநாடு என்று போற்றியுள்ளார்கள். பட்டினப்பாலை என்னும் பழந்தமிழ்ப் பாட்டிலே சோழநாட்டுக்கும் ஈழநாட்டுக்கும் இடையே இருந்த வாணிக உறவு குறிக்கப்படுகின்றது. அந்நாளில் பட்டினம் என்பது தமிழகத்திற் காவிரிப்பூம் பட்டினத்தையே குறித்தது. தமிழ்நாட்டை ஊட்டி வளர்க்கும் காவேரியாறு கடலோடு கலக்குமிடத்திற் காவிரிப்பூம் பட்டினம் அமைந்திருந்தது. அதன் அழகையுஞ் செழுமையையுங் கண்டு மகிழ்ந்த செந் தமிழ்ப் புலவர்கள் பூம்புகார் என்றும் அதனைப் போற்றுவாராயினர். சிலப்பதிகாரம் பாடிய இளங் கோவடிகள், 'பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்' என்று பாடினர். இத்தகைய நகரத் தின் துறைமுகத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும்

இடையருது நிகழ்ந்தன. கடல் வழியாகப் பிற நாடுகளிலிருந்து அத்துறைமுகத்தில் வந்திறங்கிய பண்டங்களைப் பட்டினப்பாலை தொகுத்துக் கூறுகின்றது. அந்த வரிசையில் ஈழநாட்டுப் பண்டமும் இடம் பெற்றுள்ளது. "ஈழத் துணவும் காழகத்து ஆக்கமும்" பட்டினத் துறைமுகத்தில் வந்திறங்கிய பண்டங்களென்று அப்பாட்டுக் கூறுகின்றது. ஈழநாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு இறக்குமதியான உணவுப் பொருள்கள் இன்னவை என்று இப்போது தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் பண்டமாற்று முறையிலே சோழவளநாடும் விரும்பி ஏற்றுக்கொள்ளத்தக்க உணவுப் பொருள்கள் இலங்கையிலிருந்து வந்தன என்பது ஒரு பெருஞ் சிறப்பன்றோ?

## காப்பியத் தொடர்பு

இனி, சேரநாடு என்று பழங்காலத்திற் பெயர் பெற்றிருந்த மலையாள நாட்டிற்கும் ஈழ நாட்டிற்கும் பலதுறைகளிற் தொடர்பிருந்தது. மலையாள நாட்டில் இன்று ஈழவர் என்று வழங்கப்படுகின்ற வகுப்பார் இலங்கையிலிருந்து அந் நாட்டிற் குடியேறியவரேயாவர். ஈழவர் என்ற சொல்லே அவர் ஈழநாட்டிலிருந்து வந்தவர் என்பதை உணர்த்துகின்றது. இன்னும் செங்குட்டுவன் என்னுஞ் சிறந்த சேரமன்னன் மலையாள நாட்டில் அரசு வீற்றிருந்த பொழுது தமிழ் நாட்டில் அரும்பெருஞ் செயலொன்று நிகழ்ந்தது. கற்பின் செல்வியாகிய கண்ணகி பாண்டி மன்னனைத் தன் கற்பின் திண்மையால் வென்று சேரநாட்டிற் சென்று தெய்வீகமுற்றுள். இந்த நிகழ்ச்சி மூன்று தமிழ்நாட்டையும் அதிரச் செய்தது.

சேரநாட்டில் வந்து தெய்வீகமுற்ற வீரமா பத்தினியாகிய கண்ணகிக்குச் சிறந்த திருக்கோயில் ஒன்று அமைத்தான் அந்நாட்டு மன்னவன். அக் காட்சியைக் காண்பதற்கு அயல்நாட்டு மன்னர் பலரை அழைத்திருந்தான். அன்னவருள் ஒருவன், ஈழநாட்டு மன்னன். "கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்" என்று சிலப்பதிகாரத்தில் அவ் வரசன் குறிக்கப்படுகின்ருன். எனவே, தமிழ்நாட்டுப் பெருநிகழ்ச்சிகளில் இலங்கை மன்னர் பழங்கால முதலே கலந்து நேசப்பான்மையை வளர்த்துவந்த தன்மை இதனுல் நன்கு விளங்குவதாகும். இலங்கை வரலாற்றில் கஜபாகு என்ற பெயருடைய மன்னர் இருவர் இருந்தனர் என்றும், அவருள் முதல் கஜபாகு மன்னனே செங்குட்டுவன் அழைப்பை யேற்றுக் கண்ணகி விழாவிற் கலந்துகொண்டவ னென்றும் வரலாற்று நூல்வல்லோர் கூறுவர். பத்தினிக் கடவுளின் பெருமையையுங் கருணையையுங் கண்கூடாகக் கண்ட கஜபாகு மன்னன் இலங்கையிலுங் கண்ணகிக்கு ஆலயம் அமைத்துச் சிறப்புச் செய்தானென்றும், அதனுல் மழை தவருது பெய்து ஈழநாடு "வளம்பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று" என்றுஞ் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. இன்றும் கண்ணகி வழிபாடு கண்டி முதலிய இடங்களில் நடைபெறுவதாகத் தெரிகின்றது. முன்னமே வாணிபத்தால் இணைக்கப்பெற்றிருந்த தமிழகமும் இலங்கையும் கண்ணகி காலந்தொட்டு வழிபாட்டு முறையிலும் இணக்கமுற்றன.

இனி, பாண்டிய நாட்டுக்கும் ஈழநாட்டுக்குஞ் சமுதாய உறவும் உண்டு. தென் பாண்டி நாடாகிய

திருநெல்வேலியிலிருந்து இலங்கையிற் குடியேறிய தமிழ் மக்கள் யாழ்ப்பணத்திலே திருநெல்வேலி என்று ஓர் ஊருக்குப் பெயரிட்டு அங்கே வாழ்ந்து வருகின்றார்கள். அவ்வூர் இன்றும் தன் வரலாற்றை எடுத்து உரைத்துக்கொண்டிருக்கின்றது.

### நாவலர் புகழ்

இன்னும் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் ஆன்ம நேய ஒருமைப்பாடும் உண்டு. தமிழகத்திலே பிறந்து தேவாரம் பாடிய பெரியோர்கள், இலங்கையிலுள்ள சிறந்த ஸ்தலங்களையும் பாடியுள்ளார்கள். கடலருகேயுள்ள திருக்கோணமலையைப் பாடினார் திருஞானசம்பந்தனார். மாதோட்டம் என்னும் நன்னகரில் அமைந்த மாதொருபாகனைத் தொழுது பாமாலை பாடினார் திருஞானசம்பந்தரும், சுந்தரரும். தமிழ்நாட்டிலுள்ள முருகனடியார்கள் இலங்கையிலுள்ள கதிர்காமத்தை நினைக்குந்தோறும் காதலாகிக் கசிந்து கண்ணீர் பெருக்குவர். அப்படியே ஈழநாட்டிலுள்ள சிவனடியார்க்குச் சிதம்பரமே தலைசிறந்த திருக்கோயில். அன்னார் தில்லைமன்றிலே திருநடம்புரியும் 'செல்வன் கழலேற்றும் செல்வமே செல்வம்' என்று சிந்தையாரப் போற்றுவர்; முருகப்பெருமானுடைய படைவீடுகளாகப் போற்றப்படும் ஆறுபதிகளையும் அகனமர்ந்து ஏத்துவர். அவற்றுள் 'உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்' என்று திருமுருகாற்றுப்படையிலே புகழப்பெற்ற திருச்செந்தூரை நினைந்து நெக்குநெக்குருகுவர். எனவே சமயநெறியிலும் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் நேசமுண்டென்பது இனிது விளங்கும்.

இனி, செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பேணிவளர்த்த பெருமையும் ஈழநாட்டிற்கு உண்டு. மெய்வருத்தம் பாராது பழைய ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து தொல்காப்பியம், இறையனாரகப்பொருள், வீரசோழியம், இலக்கண விளக்கம் ஆகிய இலக்கண நூல்களையும், கலித்தொகை, சூளாமணி முதலிய இலக்கிய நூல்களையும் முதன்முதலாக அச்சிட்டுத் தமிழகத்தாருக்கு உதவிய பெருமை யாழ்ப்பாணத் திலே தோன்றிய தாமோதரம்பிள்ளை யவர்களுக்கே யுரியதாகும். இன்னும் அருந்தமிழ்ப் புலமையும் கட்டுரை வன்மையும் வாய்ந்து தமிழ்மொழிக்கும் சிவ நெறிக்கும் அரும்பெருந் தொண்டு செய்த ஆறுமுக நாவலரை அறியாதார் இத் தமிழுலகில் உளரோ? அந் நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்து தில்லையம்பதியிலே திருத்தொண்டு புரிந்து எல்லையற்ற புகழ் எய்தினர். அங்கு அவர் நிறுவிய கல்லூரியும் அறநிலையங்களும் இன்றும் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணத்திலே தோன்றிய மற் றொரு புலவர் சபாபதி நாவலர். தமிழகத்திலுள்ள திருவாவடுதுறை மடம் அவரை ஆதீன வித்துவானாக நியமித்துச் சிறப்புச் செய்தது. இன்னும் முத்தமிழ் நடுநாயகமாக விளங்கும் இசைத் தமிழுக்கு இந் நாளில் இணையற்ற தொண்டுசெய்த புலவர் பெருமா னும் இந் நாட்டவரேயாவர். பழந் தமிழ் நாட்டிற் சிறந்த இசைக் கருவியாக விளங்கிய யாழின் திறத்தையும் இசையின் நலத்தையும் ஆராய்ந்து யாழ்நூல் என்னும் பெயரால் இசையுலகத்திற்கு அரியதோர் விருந்தளித்த விபுலாநந்த அடிகளை அறியாதார் அறியாதாரே.

## இலக்கிய உறவு

இவ்வாறு முன்னாள் முதல் இந்நாள் வரை வாணிபம், சமயம், சமுதாயம், இலக்கியம் ஆகிய முறைகளில் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பு பெற்று விளங்குவது இலங்கை.

யாழ்ப்பாணம், தமிழர் வாழும் தொன்னகரம். தமிழ் மணங் கமழும் நன்னகரம். தமிழ்ப் பண்பாடு யாழ்ப்பாணம் என்ற சொல்லிலே விளங்குகின்றது. யாழ்ப்பாணரென்பார் பழந் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு வகுப்பார். முன்னாளிலே பண்ணோடு இசை பாட வல்லவர் பாணர் என்று வழங்கப்பெற்றனர். அன்னவருள் யாழிலே வல்லவர்கள் யாழ்ப்பாணர் என்று பெயர் பெற்றார்கள். சிலப்பதிகாரத்தில் இவர் பெருமை குறிக்கப்படுகின்றது. கண்ணகி வாழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில்,

"குழலினும் யாழினும் குரல்முதல் எழும்
வழுவின் றிசைத்து வழித்திறன் காட்டும்
அரும்பெறன் மரபின் பெரும்பாண் இருக்கையும்"

என்று அவர் இருந்த வீதி புகழப்படுகின்றது. தேவாரம் எழுந்த காலத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழிசையில் வல்லவராயிருந்தார். அவர் திருஞான சம்பந்தரோடு பல தலங்களுக்குச் சென்று அப்பெருமான் பாடிய தமிழ்ப் பாட்டை யாழிலே இசைத்துக் கேட்போர் செவிக்குஞ் சிந்தைக்கும் இனிய இசை விருந்து அளித்தாரென்று திருத்தொண்டர் புராணந் தெரிவிக்கின்றது. இத்தகைய சிறந்த மரபு இப்பொழுது தமிழகத்திலே தூர்ந்துபோயிற்று.

பாணர் என்ற இனத்தார் இன்று தமிழ் நாட்டில் இல்லை. அன்னார் கையாண்ட இசைக்கருவியாகிய யாழும் இப்பொழுது காணப்படவில்லை. எனவே முன்னொரு காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து மறைந்து போன இன்னிசைக் கருவியையும், அக் கருவியிலே தமிழ்ப் பாட்டிசைத்த ஒரு பழங்குலத்தின் பெருமை யையும் இக்காலத்தாருக்குப் பாதுகாத்து வைத் திருப்பது ஈழநாடேயாகும்.

## இலங்கையின் மாண்பு

இலக்கிய முறையிலே இலங்கையின் பெருமை யைக் கவியரசராகிய கம்பர் பேசுகின்றார். இலங் கையிற் சிறையிருந்த சீதையைத் தேடிவந்த அநுமன் வாயிலாகக் கம்பர் இலங்கையின் சீர்மையை எடுத் துரைக்கின்றார். பசியும் பிணியும் இன்றி வசியும் வளமும் சுரந்துநின்ற இலங்கைமா நகரைக் கண் ணுற்ற அநுமன் அடைந்த வியப்பிற்கோர் அள வில்லை.

'பளிக்கு மாளிகைத் தலந்தொறும் இடந்தொறும், பசுந்தேன்
துளிக்குங் கற்பகத் தண்ணறும், சோலைகள் தோறும்
அளிக்குந் தேறலுண்டு, ஆடுநர் பாடுந ராகிக்
களிக்கின் றாரலால், கவல்கின்று ரொருவரைக் காணேன்,'

என்று அநுமன் வியந்து மகிழ்ந்தான். இலங்கை யின் மாடமாளிகைகளையும், சாலை சோலைகளையும் சுற்றி நோக்கிய அநுமன், இலங்கையர் முகத்தில் இன்பமே நடம்புரியக் கண்டான்; எவரிடமுங் கவலை யைக் கண்டானல்லன். எல்லோரும் ஆனந்தக் களிப்பினல் ஆடல் பாடல் நிகழ்த்தக் கண்டான்.

அத்தகைய நாடே சிறந்த நாடு என்று கம்பர் கருதுகின்றார். இவ்வுலகத்தில் இன்று துன்புற்றுத் தயங்கும் நாடுகளுக்கு இத்தகைய நிலை என்று வருமோ என்று அறிஞர்கள் ஏங்கி நிற்கின்றார்கள்.

பாரதநாட்டின் தென்பாலமைந்த தமிழ்நாடும், அதை அடுத்துள்ள இலங்கையும் ஒன்றற்கொன்று இன்றியமையாதது. முன்னொருகாலத்தில் இலங்கையிலுள்ள கண்டியில் அரசாண்ட பரராசசிங்கன் என்னும் மன்னவன், தன் நாட்டிற் பஞ்சம் வந்துற்ற போது சிறிதும் நெஞ்சங் கலங்கினனல்லன். ஈழ நாட்டின் துயர் தீர்ப்பது சோழநாட்டின் கடமை என்று எண்ணினன். அந்த நாட்டிற் பெருஞ் செல்வராகவும், வல்லவராகவும் வாழ்ந்த சடையப்பருக்குத் தன் நாட்டின் துயரைத் தெரிவித்தான். அந் நிலையிற் காவிரிநாட்டில் விளைந்த செந்நெல் மரக்கலங்களின் மூலமாக இலங்கைத் துறைமுகத்தை வந்தடைந்தது. பஞ்சத்தின் கொடுமை பறந்தது. இலங்கையர் நெஞ்சம் குளிர்ந்தது.

காலத்தில் உதவிசெய்த வள்ளலுக்கு மனமார்ந்த நன்றி செலுத்தினன் பரராசசிங்கன். அம் மன்னன் எழுதி விடுத்த பாட்டு இலக்கியத்திலே இடம்பெற்றுவிட்டது. காவிரி ஆற்றின் கருணையால் வளம்பெறும் சோழ நாட்டையும் அந் நாட்டிலே கோயில்கொண் டருள்புரியும் அம்பலவாணனையும் அரங்கநாதனையும் மனமார வாழ்த்துகின்ற அப் பாட்டுச் சடையப்ப வள்ளலைத் தரும தேவதை என்று போற்றுகின்றது.

## தமிழின் தொன்மை

நமது தாய்மொழியாகிய தமிழ் இவ்வுலகிலுள்ள செம்மை சான்ற தொன்மொழிகளில் ஒன்று. மன்னரும் முனிவரும் அம் மொழியைப் பேணி வளர்த்தார்கள். அறிவு வளர்ச்சிக்கும் ஆன்ம வளர்ச்சிக்கும் சாதனமாகிய நூல்கள் தமிழ்மொழியிலே சாலச் சிறந்து விளங்குகின்றன. இத்தகைய விழுமிய மொழியைத் தாய்மொழியாகப் பெற்றுள்ளவர் இவ்வுலகிலுள்ள எந்நாட்டார்க்கும் குறைந்தவர் ஆகார். ஆதலால், தமிழ்ச் செல்வமே தலையாய செல்வமென்று தமிழ் மக்கள் உணர்ந்து வாழ்தல் வேண்டும். எந்நாட்டில் இருந்தாலும் எத்தொழிலைச் செய்தாலும் தமிழ் மக்கள் நெஞ்சில் தமிழார்வம் குடிகொண்டிருத்தல் வேண்டும். இன்று தமிழ்ச் சமுதாயம் பல்வேறு நாடுகளிற் பரவியுள்ளது. இவ்வுண்மையை அறிந்து பாடினார் பாரதியார்:

"சிங்களம் புட்பகம் சாவக மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியு நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு"

என்ற பாட்டிலே விரிந்து பரந்து தமிழகம் குறிக்கப்படுகின்றது. இன்று பர்மா, மலேயா, ஆபிரிக்கா, அமெரிக்கா முதலிய அயல்நாடுகளிலும் தமிழர் வர்த்தகம் புரிந்தும் வளம் பெருக்கியும் வாழ்ந்து வருகின்றார்கள். அன்னவர் அனைவரும் தமிழ்த்தாயின் சேய்கள் என்று உணர்ந்து ஒன்றுபடல் வேண்டும்.

சுதந்தர இந்தியாவில் நாட்டு மொழிகள் தலையெடுத்து வளரத் தொடங்கியுள்ளன, நாமிருக்கும் நாடு

நமது என்ற உணர்ச்சி தமிழ் மக்களிடம் பெருகி வருகின்றது.

"நாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்"

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை"

என்ற பாரதியார் பாட்டின் பயனுணர்ந்து பண்டைத் தமிழ்ப் பனுவல்களைத் தமிழ்நாட்டு இளைஞர்கள் பாராட்டிப் படிக்கின்றார்கள். இத்தகைய ஆர்வந் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரவுதல் வேண்டும். "தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அதற்கொரு குணமுண்டு" என்று பாடினார் ஒரு புலவர். அவர் பாடிய தமிழ்ப் பண்பு பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே பரக்கப் பேசப்பட்டிருக்கின்றது. ஆதலால், தமிழிலக்கியம் தமிழினத்தாருக்குத் தனிப் பெருஞ் செல்வம். அச்செல்வத்தை நாம் துய்த்தலும் பிறர்க்கு வழங்குதலுமே தமிழின் உயர்ந்த நோக்கமாக வேண்டும். இந் நோக்கம் நிறைவேறுமாறு தமிழ்ப் பெருந் தெய்வம் திருவருள் புரிக.

## 2. ஊரைக் காத்த பாட்டி

அதிலன் (Atila) என்ருல் அழுதபிள்ளை வாய் மூடும். அந்த ஹூண மன்னன் அவ்வளவு கொடிய போர்வீரன்; அரக்கன். ஐந்தாவது நூற்ருண்டில் அவன் ஐரோப்பாவை அதலகுதலப்படுத்தினன். ரோமை வென்ருன். பிறகு கால் (Gual) தேசத்தைப் படையெடுத்தான். கால் (Gual) என்பது தற்போது பிரான்ஸாக விளங்குகிறது. இப்போதுள்ள பாரிஸ் அக்காலம் லூதேஸ் என்னும் ஊராக விளங்கியது. அதிலன் லூதேஸைப் படையெடுத்தான். 'ஊர் பிழைக்காது' என்று எல்லோரும் குடல் நடுங்கி ஓடத் தலைப்பட்டனர். அப்போது ஒரு வீராங்கனை எழுந்தாள். "நான் இருக்குமட்டும் லூதேஸ் அழியாது; அதிலன் உங்களை யாதும் செய்யாது நான் பாதுகாக்கிறேன்" என்று கோட்டை வாயிலில் நின்ருள்; அதிலனை விரட்டி அடித்தாள். இந்த வீராங்கனையின் பெயர் 'ழேன்வியேவ்' (Gnenevieve) என்பர். 'ழேன்வியேவ்' என்ருல் 'பாரிஸைக் காத்த தெய்வம்' என்று பிரெஞ்சுக்காரர் கும்பிடுவர். ஜனவரி மாதம் மூன்ருந் திகதி 'வியேவ்' திருவிழாவைப் பிரெஞ்சுக்காரர் சிறப்பாகக் கொண்டாடுவர். அவள் சிலையை வணங்குவர். அதே மாதிரி நமது நாட்டிலிருந்த ஒரு வீரப்பாட்டி கதையைக் கேளுங்கள்.

ஏறக்குறைய 140 ஆண்டுகளுக்கு முன்பு தென்னுட்டில் ஊமையன் சண்டை நடந்தது; நாட்டில் ஒளித்துக்கொண்டு அந்த வீரப்புலி பெரிய புரட்சி

நடத்தியது. அக்காலம் ஊரெங்கும் திருட்டுங் கொள்ளையும் மிகுந்தன. மனிதருள் ஒரு புரட்சிக்காரன் இருக்கிறானல்லவா? 'பசி' என்பவன்! அவனுக்குக் கப்பங்கட்டாவிட்டால் ஒன்பது வாசற் கோட்டை பிழைக்குமா? போரும் பஞ்சமும் முற்றுக்கையிடுங் காலத்தில் இந்தப் பசிப்புரட்சியைத் தீர்க்கக் கொள்ளைக்காரர் கிளம்பினர். 'எங்கே பணம், எங்கே உணவு?' என்று மோப்பம்பிடித்து அங்கே சென்று கொள்ளையடிப்பதுதான் அவர்கள் கண்ட வழி. சுற்றியுள்ள ஊர்மக்கள், வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பர். கொள்ளைக்காரர் வந்தால், உள்ளதைத் தந்தொழிக்கவேண்டும்; இன்றேல் உயிரைத் தரவேண்டும்; வேறுவழியில்லை. கிராமங்களில், ஊர் காவலர், கண்ணில் திரிபோட்டுச் சுற்றிப் பார்ப்பர். 'டடடோய்' என்று அரற்றுவர். 'டொம் டொம்' என்று முரசடிப்பர். வீடுகளில் தகரங்களையும், தாளங்களையும், மணிகளையும் அடித்துச் சத்தஞ் செய்வர். ஊர் கவனமாய்த்தான் இருக்கும்; மறுநாள் பார்த்தால் அது அல்லோலகல்லோலப்படும்! "ஐயோ மாடு போயிற்றே! வெள்ளி போயிற்றே! களஞ்சியநெல் போயிற்றே! அந்த வீட்டிற் கன்னம்! இந்த வீட்டிற் கொலை! இன்னொரு வீட்டிற் கொள்ளை!" என்று இந்த மாதிரிப் புகார்கள் கிளம்பும்.

பனையூர் சிவகங்கைக்கு அருகேயுள்ள ஒரு சிற்றூர். அதில் ஏறக்குறைய 500 பேர் வசித்தனர். நாயக்க மன்னர் காலத்திற் குடியேறிய தெலுங்கரும், தமிழ் அந்தணரும் ஒற்றுமையாகவே அக்கிரகாரத்தில் வசித்தனர். அவர்களிடையே பிரிவினை உணர்வில்லை.

பனையூர் அக்கிரகாரத்தில் 'காமாக்ஷி' என்ருல் 'ஊருக்கு உத்தமி' என்பர். அதோ தெரிகிறதே தெருமுனையில், அதுதான் காமாக்ஷி வீடு. அது சிறிய வீடுதான். அதில் இரண்டு பிள்ளைகள் இரண்டு பெண்கள் குடித்தனஞ் செய்கிருர்கள். மூத்தபிள்ளை சுப்பையர் திண்ணைப் பள்ளிக்கூடம் போட்டிருக்கிருர். அவர் தம்பி வைதிகம் பார்க்கிருர். மாப்பிள்ளைகள் இருவரும் கொஞ்சம் நிலம் வைத்துக்கொண்டிருக்கிருர்கள். எல்லாஞ் சேர்ந்து ஒருவாறு குடும்பத்திற்குப் போதும். காமாக்ஷி அம்மாள் இருக்குமட்டும் தாம் ஒன்ருகவே இருப்பதென்ற கட்டுப்பாட்டுடன் அக் குடும்பம் நடக்கிறது. நாட்டுப் பெண்களிடம் நல்ல பெயர் வாங்கின மாமியார் யார் என்ருல் "இதோ காமாக்ஷி அம்மாள்" என்றே ஊரார் காட்டுவர். காமாக்ஷி அம்மாள் கப்பலாய்க் காரியஞ் செய்வாள். காரியஞ் செய்யும்போதே கீதை, தாயுமானவர், கைவல்யம், இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய பாடல்களைப் பாடுவாள்; நல்ல கதை சொல்லுவாள்; வேடிக்கையாகப் பேசிப் பெண்களைத் திருத்துவாள்; நோய் வந்தால் பச்சிலைகளைக்கொண்டு அதைத் தீர்ப்பாள். காமாக்ஷியம்மாள் மந்திரம் அறிந்தவள்; விஷகடிகளுக்கு மந்திரம் போடுவாள்; ஊரிற் பிரசவம் பார்த்தல், குழந்தை நோய் தீர்த்தல், தேள், பூரான் கடிகளுக்கு மந்திரித்தல், அம்மை பார்த்தல், பெரிய காரியங்களுக்குத் துணைசெய்தல் இவையெல்லாங் காமாக்ஷியம்மாளால் நடக்கும். இத்துடன் அக்கிரகாரத்திற்கு வரும் அதிதிகள் காமாக்ஷியம்மாள் வீட்டை விசாரித்துக்கொண்டு சம்பந்தி வீடுமாதிரித் தாராள

மாக நுழைவர். "வாருங்கள்; இதோ சமையல் ஆகும்; அனுஷ்டானத்தை முடியுங்கள்" என்று முகமலர்ந்து உபசரிப்பாள் காமாக்ஷி. தெருக்கோடியிற் பிச்சைக்காரன் வரும்போதே பழைய சாதம் கரைத்துத் தயாராக வைத்துக்கொண்டிருப்பாள் காமாக்ஷி. "அப்பா! வா, கையலம்பிக்கொள்; இந்தா பச்சை மிளகாயும் உப்பும்; இந்தச் சோற்றைச் சாப்பிடு" என்று போடுவாள். எச் சாதியானாலும் வேறுபாடில்லாமற் காமாக்ஷி அம்மாள் சோறு போடுவாள். "பசி எல்லாருக்கும் உள்ளதுதானே" என்பாள். "அம்மா, மகராசி; உங்கள் கையினாலே இட்ட கூழும் அமுதமாயிருக்குதம்மா" என்று புகழ்வர் ஏழை எளியவர்கள். காமாக்ஷிக்கு நாற்பது வயதிற் கணவன் தவறிப்போனான். அவன் சம்பாதித்தவை ஒருவீடும், நாலு காணியுந்தான். இறுதிக் காலத்தில் அவன் பிள்ளைகளிடம், "நீங்கள் பாடுபட்டுச் சம்பாதித்தே உண்ணவேண்டும். நான் இருக்குமட்டும், அதிதி, பரதேசிகளுக்கு அன்னமிட்டு வந்தேன். அந்தத் தருமத்தை இனிக் காமாக்ஷி நடத்த வேண்டும். எனது நிலவரும்படியிலிருந்து அது நடக்கட்டும். நீங்கள் எனக்குச் சிரார்த்தம் வைப்பதைவிட, பசி என்று வந்தபேருக்கு அன்னம் அளிப்பது மிகச் சிறந்த கடமை" என்றார்.

குடும்பமென்றாற் செலவுதான். கடைசிப் பெண் கலியாணம் பாதிநிலத்தை விழுங்கியது; மீதியிருப்பதைக்கொண்டு, காமாக்ஷியம்மாள் தனது விரதத்தை நிறைவேற்றி வந்தாள். கணவனுக்குப் பிறகு காமாக்ஷியம்மாள் பஞ்சாட்சரஜபம், பரோப

காரம்—இரண்டிலேயே காலம் கழித்தாள்; தாமரை இலேமேல் தண்ணீர்த் துளிமாதிரி மனப்பற்றில்லாமல், குடும்பத்தில் வசித்தாள். 'ஊருக்கு உத்தமி' என்பதுடன் 'யாருக்கும் உபகாரி' என்று அவளைச் சனங்கள் புகழ்ந்தனர். இப்போது காமாக்ஷி அம்மாள் எழுபது வயதாகிச் காமாக்ஷிப் பாட்டியானுள்!

இச்சமயம் ஊரிற் கள்வர் பயம் அதிகரித்தது. "அந்தத் தெருவிற் கொள்ளை; இந்தத் தெருவிற் சூறை" என்று விடிந்தால் ஊரிற் செய்தி பரவும். திடீரென்று "தீவர்த்திக் கொள்ளைக்காரர் வரப் போகிறுர்கள்" என்ெரூரு வதந்தி பிறந்தது. பிறகு "கறுத்தச் சாமியாம், பெரியமருது ஆட்களாம், ஊமையன் படைகளாம், கிராமங்கள் நாசமாம்...." என்றெல்லாஞ் செய்திகள் வந்தன. அதனுற் பனையூர் மஹாஜனங்கள் ஊர்க்காவலைப் பலமாக்கினர்.

"திருடன்" என்று கனவு கண்டாலும் "எங்கடா .......ளளள" என்று அஞ்சி உளறிக்கொண்டு தெருப் பக்கம் ஓடுவார் சுப்பையர். உண்மையாகவே ஊரிற் தீவர்த்திக் கொள்ளைக்காரர் புகுந்தால் அவர் பயத்திற்குக் கேட்கவேண்டுமா? பெண்கள் காதில் மூக்கில் இருப்பதெல்லாம் அவர் வாங்கி ஓரிடத்திற் புதைத்து விட்டார். தன்னிடமிருந்த உரொக்கத்தை ஒரு பணக்காரரிடம் கொடுத்துவைத்தார். பள்ளிப் பிள்ளைகள் "ஐயா! அங்கே கொள்ளை; இங்கே திருட்டு" என்று செய்திகளைச் சொல்லுவர். பிள்ளைகளை ஐந்து மணிக்கே வீட்டிற்கனுப்பிவிட்டுக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள்வார் சுப்பையர்.

காமாக்ஷியம்மாளுக்கு மட்டும் பயமில்லாமல் 'இரும்புநேர் நெஞ்சக் கள்வனுனுலும் உனை இடைவிட்டு நிற்பதுண்டோ ?' என்று தாயுமானவர் சொல்லுகிறுர். "வரட்டுமே கள்வன் ; நீதான் நகை நாணயம் பாத்திரம் பண்டமெல்லாம் பத்திரப்படுத்தி யிருக்கிறுயே ; 'அப்பா நாங்கள் ஏழைகள் ; வீட்டைப் பார்த்து என்னவேண்டுமோ எடுத்துக்கொண்டு போ' என்போம் ; அவனுக்கும் ஒரு கொஞ்சம் உணர்ச்சி யுண்டல்லவா !" என்பாள்.

இருட்டுக் காலம்; 'அக்கிரகாரத்துக்குத் தீவர்த்திக் கொள்ளைக்காரர் வரப்போகிறுர்கள்' என்ற வதந்தி பலமாக இருக்கிறது. ஒருநாட் காலை, அந்தத் தெரு வில் இரண்டு பிச்சைக்காரர் வந்தனர். பிச்சை கேட்பதுபோல ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலும் நின்று உள்ளே குறிப்பாகப் பார்த்தனர். காமாக்ஷி யம்மாள் கோயிலுக்குச் சென்று வந்தபோது இவர் களைக் கவனித்தாள். இவர்களில் ஒருவன் அதோ இருக்கும் மாடிவீட்டுச் சுவரில் ஒரு கரிக் கோடு போட்டான். அதையும் காமாக்ஷியம்மாள் பார்த் தாள். காமாக்ஷியம்மாள் வீட்டுக் கொல்லைக் கொட் டகை விசாலமானது. அதை ஒருவன் வீட்டுப் புறத்திலிருந்து பார்த்ததைக் கண்டாள். மறு நாளும் இப்படியே புதிய பிச்சைக்காரர் வந்தனர். "தடிப் பயல்களுக்குப் பிச்சை என்ன? விறகு வெட்டிப் பிழையுங்களேன்" என்று எரிந்து விழுந் தார் செல்வர். அதே பிச்சைக்காரருக்குக் காமாக்ஷி யம்மாள் இரண்டுபிடி அரிசி போட்டாள். அப்போது அவர்கள் ஏதோ ஊமைச் சாடை காட்டிப் பேசிக் கொண்டதையும் கவனித்தாள்.

பாட்டியின் பஞ்சாட்சர ஜபமும் வேதாந்தப் பாடல்களும் அதிகரித்தன. அவள் கொல்லைக் கொட்டிலிலேயே நிலையாய் இருந்தாள். கொல்லைக் காரர் பயத்தால் நடுங்குவர். "பயப்படாதேயுங்கள்; பசிவரும்போது பூனையும் புலிபோலப் பாய்கிற தல்லவா? பசிக்கொடுமையால் மனிதன் திருடுகிறன். வரட்டும் கள்வர்; நானிருக்கிறேன்; என் கையிருக் கிறது; மனம் இருக்கிறது; பஞ்சாக்ஷரி இருக்கிறது" என்ருள் பாட்டி. "கிழவிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது" என்ருர்கள், தம்மை உஷார்ப்படுத்திக் கொள்ளும் ஊரார்.

ஓர் இரவில், பாட்டி கொல்லைச் சுவரைக் கவ னித்தாள். "நாளை இங்கே" என்ற பேச்சுமட்டும் கேட்டது. பிறகு ஒன்றுங் காணும்; ஆட்கள் மறைந்தனர். கொள்ளைக்காரர் வீட்டைக் குறி வைத்து வருகின்றனர் என்று ஊரிற் சத்தம் கிளம் பியது.

இன்றிரவு பாட்டி அரிசி பருப்பை எல்லாம் கொல்லைக்கொட்டிலிற் கொண்டுபோய் வைக்கிருள். வெங்காயந் தொடாதவள் இன்று ஒரு வீசை வெங் காயம் வாங்குகிருள். நாரத்தங்காய் ஊறும் கற்சட்டி யில் பச்சைமிளகாயை ஊறப்போடுகிருள். தேங்கா யும் பச்சைமிளகாயும் வைத்துத் துவையல் அரைக் கிருள். 50 அப்பளம் சுடுகிருள். "பாட்டி! உன் பேத்திக்குக் கலியாணமா? எதற்கு இத்தனை ஏற்பா டெல்லாம்?" என்று ஊரார் சிரிக்கிருர்கள். "வீட் டைப் பொட்டலாக்கி இதெல்லாம் என்ன! ஊரார் பைத்தியம் என்பது சரிதான்" என்று நாட்டுப்

பெண்கள் முணுமுணுக்கின்றனர். பாட்டி வேதாந்தப் பாடலுடன் தன் காரியத்தைப் பார்க்கிருள். இரவு பதினெரு மணி; தெருவெல்லாம் ஆழ்ந்து உறங்குகிறது. பாட்டி பெரிய அடுப்பு மூட்டி ஒரு பெரிய பானையிற் சாதம் வடித்தாள்; இன்னெரு பானையில் வெங்காயமும் பருப்பும் வேக வைத்து நிரம்பக் கத்தரிக்காய் பச்சைமிளகாய் போட்டுக் கருவேப்பிலை கொத்தமல்லி கூட்டி நிரம்ப எண்ணெய் விட்டுக் கடுகு தாளித்துக் கமகமவென்று வெங்காயச் சாம்பார்பண்ணி இறக்கினுள். இன்னெரு பானையிற் கருவேப்பிலை எலுமிச்சம்பழம் சேர்த்து மோர் தயாரித்தாள். காரமான ஊறுகாய் வைத்துக்கொண்டாள். இன்னெரு மடாவில் சுத்த நீர் நிரப்பினுள். அடுப்பை அணைத்து, பஞ்சாக்ஷர ஜபம் பண்ணிக்கொண்டிருந்தாள்.

நள்ளிரவு, கிராமக்காவலர் 'டடடேய்' என்று ஊர் சுற்றி வந்தனர். 'டண், டொ, டப், டமார்' என்று வீடுகளில் தகரங்களையும், பாத்திரங்களையும் போட்டடித்தனர். எல்லாம் எவ்வளவு நேரம்? ஒரு மணிக்கு எல்லாம் அடங்கியது. மீண்டும் உறக்க வலை ஊரைக் கவர்ந்தது.

இரண்டு மணி; நல்ல இருட்டு; கொல்லையில் காலடி கேட்டது; கொல்லைக் கதவுக்கடியில் 'கொரு கொரு' என்ற சத்தம்; பின்பு கதவுநிலை பெயர்ந்தது. ஒரு திருட்டுப் படை உள்ளே வருகிறது. இதோ தாழ்வாரத்துக்கு முன்னே எமபடர்போல இருபது கரிமூஞ்சிகள் நிற்கின்றன. "ஜாம்பார் வெகு ஜோர்குஜீற்ட்!" என்கிருன் ஒருவன்.

"வானம் பொழிகுது பூமி விளைகுது
மன்னவன் காணிக்கை ஏதுக்கடா?"

என்றொருவன் மெல்லப் பாடுகிறான். இப் பாட்டுப் பாடினால் 'அடி கொள்ளை' என்பதற்கு அடையாளம். திருடர் உள்ளே நுழையப்போகின்றனர். "அடே விளக்குடா" என்றான் ஒருவன். ஆம், நமது பாட்டி விளக்கேற்றினாள். "ஹ, ஹ, ஹ, — கிழவிடா, வானம் பொழியுது......... ஒரு போடு...... உள்ளே போ!" என்றான் தலைவன். திருடர் வாளையும் தடியையும் சுழற்றி வந்தனர். இதற்குள் பாட்டி இலை பரப்பி ஒரு செம்பில் தண்ணீர் கொண்டுவந்து "குழந்தைகளெல்லாரும் வாருங்கோ; உங்களுக்கெல்லாம் பசி; சாப்பிடுங்கோ; இந்தாருங்கள் தண்ணீர்; கையைக் கழுவிக்கொண்டு வாருங்கள்!" என்று அன்புடன் உருக்கமாகப் பேசினாள். திருடர் முதலிற் சந்தேகித்தனர்; பிறகு வியந்தனர். அதன்பின் இளகினர்; பணிந்தனர். அவர்களுக்குச் சரியான பசிதான். அத்தனை கரிமூஞ்சிகளும் கைகழுவிவந்து இலை முன் குந்தி "போடு, போடு" என்று அத்தனை சாம்பார்ச் சாதத்தையும் உண்டு தீர்த்து மோரையும் பருகினர். "அப்பா உண்டெனச் சாப்பிடு; ஐயோ பாவம்; வயிற்றுக்கில்லாத குறைதானே உங்களை இந்தத் தொழில் செய்யச் சொல்லுகிறது. பணக்காரன் ஏழைக்குச் சோறு போடாதே பூட்டிப் பூட்டி வைக்கிறான். அவன் புதையலைத் திருட இன்னொருவன் வருகிறான். 'போடு சோறு' என்றால் 'சீ போ' என்கிறான். 'போடு மண்டையிலே' என்றால் 'ஐயோ! உயிரை விட்டுவிடு' என்று பெட்டிச்சாவியைத் தருகிறான்" என்று பாட்டி

உருகினுள். இதைக் கேட்டதும் திருடர் தலைவனுக்குச் சந்தோஷம் உண்டானது.

**தலைவன்:** அதுதான் நியாயம் அம்மா! ஏழைக்குச் சோறும், பணக்காரனுக்கு ஈகையும் இரக்கமும் இருந்தால் நாங்களேன் கொள்ளையடிக்க வேண்டும்?

**பாட்டி:** அப்பா! ஒன்று கேட்கிறேன். கோபித்துக் கொள்ளாதே. உலகத்தில் எத்தனையோ தொழில் உண்டே. யோக்கியமான ஒருதொழில் செய்து கோடானு கோடி ஏழைகள் பிழைக்கவில்லையா? நீங்களேன் இத்தொழில் செய்து பாபத்தைச் சம்பாதிக்கவேண்டும்?

**தலைவன்:** நாங்களும் ஒரு தொழிலைச் செய்கிறோம் அம்மா; அது உயிர்போகிற தொழில்; காட்டிலிருந்து ஆபத்துடன் போராடுகிறோம். அந்தத் தொழிலுக்கு இந்த வழியிலேயும் சாப்பாடு சம்பாதிக்க வேண்டியிருக்கிறது. கருமிச் செல்வர் பணத்தையே நாங்கள் தொடுவோம்.

**பாட்டி:** அது என்ன தொழில்? ஏதோ ஊமையன், மருது, இஞ்ஞிதுரை சண்டையாமே.............. அதுவோ...........

**தலைவன்:** எல்லாம் விடிந்தால் தெரியும் அம்மா. இப்போது அதிகம் பேசக்கூடாது.

**பாட்டி:** ஆனல் சரி, அப்பா நான் பரம ஏழை; இதோ வீட்டுக்குள்ளே என் பிள்ளைகுட்டிகள் தூங்குகிறார்கள். வீட்டிலிருப்பது சட்டிபானை தான். ஏழையென்று வந்தால் என் சாப்பாட்

டைக் குறைத்து ஒரு பிடி போடுவேன். அது தான் எனக்கு முடிந்த தருமம். பசி எல்லாருக்கும் ஒன்றுதான். 'கொள்ளைக்காரர் வரப் போகிறார்கள்.' என்று ஊரெல்லாம் தடிக்கம்பு தயாரித்து வைத்துக்கொண் டிருக்கிறார்கள்; நான் சாப்பாடு தயாரித்தேன்; ஏழைக்கிழவி, ஏதோ தோன்றி இப்படிச் செய்தேன்.

**தலைவன் :** பெரியம்மா; நீங்கள் நல்லாயிருக்க வேணும்; மகராசி. இப்படி யாரும் அன்பாயிருக்கமாட்டார்கள். பசி எங்களைக் கொல்வதால் நாங்கள் பிறரைக் கொன்று கொள்ளையடித்துச் சாப்பிடத் துணிகிறோம். உங்கள் ஈகையை என்றும் மறவோம் அம்மா.

**பாட்டி :** அப்பா! இன்னும் ஏதாவது வேணுமா? உள்ளே சட்டிபானை இருப்பதை வேண்டுமானால் எடுத்துக் கொண்டு போ. ஆளைமட்டும் தொடாதே.

**தலைவன் :** அம்மா, தாங்கள் புண்ணியவதி. தங்கள் கையினாலே வயிறாரச் சாப்பிட்டுத் தங்கள் வீட்டிற்கே துரோகஞ் செய்யமாட்டோம்!

**பாட்டி !** அப்பா! என் வீடென்ன, இன்னொரு வீடென்ன? எல்லாம் ஒன்றுதானே. ஊர்க் குழந்தைகளும் என் குழந்தைகள்தானே! நீங்களும் என் குழந்தைகள் என்றுதான் சோறு போட்டேன். ஆகையால் என் வீட்டைப் போலவே இந்த ஊர் வீடுகளையும் நீங்கள் மதிக்கவேண்டும்.

**தலைவன் :** "அம்மா! புண்ணியவதி, தாங்கள் இருக்கும் ஊர்ப்பக்கமே இனி வரமாட்டோம்! ஒரு கிழவியின் அன்பால் ஊர் பிழைத்தது!" இவ்வாறு சொல்லிக் கள்வர் தலைவன் 'வானம் பொழிந்தது; பூமிவிளைந்தது; வயிறும் நிறைந்த தண்ணே' என்று மெல்லப் பாடினன்; வந்தவர் அனைவரும் வரிசையாக ஓடி மறைந்தனர்.

விடியற்காலம் ஊர் பிழைத்தெழுந்தது. சுப்பையர் கொல்லைக் கொட்டிலிற் சமையற் சட்டிகளையும் பலர் சாப்பிட்ட இடங்களையும் கண்டார். "என்னம்மா இது?" என்றார். "அப்பனே, அன்புடன் போட்ட சோறு, ஊருக்கு வந்த ஆபத்தைப் போக்கியது" என்று பாட்டி நடந்ததைச் சொன்னுள். அன்று முதல் ஊரில் திருட்டுப் பயமே கிடையாது. பக்கத்துக் கிராமங்களில் 'திருட்டு, கொள்ளை' என்று செய்தி வரும். பனையூர் அமைதியாயிருக்கும்.

ஊருக்கு உத்தமி உபகாரி என்பதுடன் ஊரைக் காத்த பாட்டி என்று காமாக்ஷியை அனைவரும் வாழ்த்தினர்.

# 3. இரண்டு மனுஷர்கள்

1917ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ஆந் தேதி என்று ஞாபகம். வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு வடகிழக்கில் தெற்கு வடக்காக ஒரு கட்டடம். அதன் வடபாகத்தில் ஸ்ரீமத் சி. பொன்னம்பல தேசிகர் அவர்கள் அக்காலந் தொட்டு வாசஞ்செய்து வருகின்றார்கள். மேற்கே ஒரு விறுந்தை; கிழக்கே முன்பின்னாக இரு அறைகள். விறுந்தை முகப்பில் ஒரு அழகான ஆத்திமரம்; எப்பொழுதும் புஷ்பமயமாயிருக்கும்.

விறுந்தையை அடுத்த அறை பெரியது. அதன் மத்தியில் நீள் சதுரமான ஒரு மேசை. மேசைக்குத் தெற்கருகில் ஒரு கதிரை. அதில் சுவர்ண விக்கிரகம் போன்ற ஒரு தோற்றம். விபூதி சந்தனத்துக்குப் புறம்பான ஓர் அழகு. இடையிடையே ஹாஸ்ய முறுவல். நீர்க்காவி ஏறிய வேட்டி. அதற்களவான ஒன்றரை முழ நீள அரை முழ அகலச் சால்வை. வடக்கு முகமாக ஷை நாவலர் வித்தியாசாலை மானேஜர் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்கள் ஆடாமல் அசையாமல் அந்தக் கதிரையில் இருந்தபடி இருக்கிறார். இம்மாதிரி அங்க சேட்டையின்றிச் சித்திரப்பதுமைபோல வைத்தகால் வைத்த படியே ஆறு ஏழு மணித்தியாலம் நின்ற நிலையில் யாருடனாவது பேசிக்கொண்டும் நிற்பார்கள் இந்தப் பழக்கம் நாவலர் அவர்கள் முன்னிலையில் நின்று வந்தது.

மேசைக்கு மேற்கருகிலும் ஒரு கதிரை. உயர்ந்து நிமிர்ந்த தோற்றம்; ஆழ்ந்து அகன்ற சிந்தனை. அலையடங்கிய சமுத்திரம்போலக் கிழக்கு முகமாகச் சுன்னுகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் வீற்றிருக்கின்றூர்கள்.

மேசைக்கு வடக்கிலும் கிழக்கிலும் இரண்டு நீண்ட வாங்குகள். பத்துப் பன்னிரண்டு மாணவர்கள் — அன்றுதான் புதுக்க வந்தவர்கள். இருவர் பழைய மாணவர்; எல்லாரும் அந்த வாங்குகளில் இருக்கிறூர்கள். புதுக்க வந்தவர்களுக்குப் பரீக்ஷை நடக்கின்றது. புலவர் அவர்கள் ஒவ்வொருவரையுங் கேள்வி கேட்கின்றூர்கள். என்னுடைய முறை வந்தது. நான் உள்ளவர்களுக்குள்ளே பெரிய ஆள். எனக்குப் பதினெட்டு வயசு பரிபூரணமாய் விட்டது. பத்து வயசுக்குப் பிறகு பள்ளிக்கூட வாசனை கிடையாது. காகிதப் பயிற்சி, தாயம் உருட்டுகிற பயிற்சிகளிற் போதிய அனுபவம். இடையிடையே திண்ணைப் பள்ளிகளில் இராக் காலங்களிற் புராணம் வாசித்ததுண்டு. அதைப் படிப்பு வகையிற் சேர்க்க முடியாது. இப்படிப் பட்ட நான் ஒன்றுக்கும் அஞ்சாமல், கேட்ட கேள்விகள் ஒருபுறமிருக்க மறுமொழிகள் சொன்னேன். புலவர் அவர்கள் ஏற இறங்கப் பார்த்துவிட்டு "கிறீஸ்த பாடசாலையில் வாசித்ததோ?" என்றூர்கள். நான் தடிபோல் அசையாமல் "ஆம்" என்றேன். புலவர் அவர்கள் "ளகர, ழகர பேதம்......" என்று சொல்லிக்கொண்டு மானேஜர் அவர்களைப் பார்த்தார்கள். அவ்வளவுதான். "இந்த வயசிலும்

படிக்கலாம் வா. எல்லாம் இலவசமாக நடக்கும்'' என்று சொல்லிக் கம வேலை செய்துகொண்டிருந்த என்னைக் கைப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டுவந்து அந்த இடத்தில் நிறுத்தின எனது நண்பரின் முகம் வாடிப்போய்விட்டது. அவர் மானேஜர் அவர்களைத் தனிமையிற் கண்டு "ஒரு ஆறு மாசத்திற்கு வைத்திருந்து பாருங்கள்'' என்று மன்றாடினார். இந்தப் படம் — அன்றைக்கு அந்த 11ஆந் தேதி நடந்தது — என் மனத்திரையில் அடிக்கடி தோன்றிக்கொண்டிருக்கின்றது.

ஏழாலையில் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தாபித்த வித்தியாசாலையிலும், பிறகு வண்ணார்பண்ணையில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் புலவர் அவர்கள் படிப்பித்தவர்கள். ஆனால் தெருக்கள், சந்திகள், ஒழுங்கைகள், புகையிரத ஸ்தானங்கள், புகைவண்டிகள் முதலிய இடங்களே புலவர் அவர்களின் உண்மையான மாணவர்கள் படித்த பாடசாலைகள். கொக்குவில் ஸ்ரீ சபாரத்தின முதலியார் பின்னேரங்களிற் கச்சேரியிலிருந்து குதிரை வண்டியில் வருவார். அந்தக் குதிரை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை வாசலில் தானகவே நின்றுவிடும். அந்தச் சமயம் புலவர் அவர்கள் பள்ளிக்கூடம் விட்டுப் புறப்படும் சமயமாயுமிருக்கும். முதலியார் புலவர் அவர்களைத் தமது வண்டியில் ஏற்றி அறிய வேண்டியவைகளைக் கேட்டுக்கொண்டு போவார். மருதனமடம்வரை போய் முதலியார் மீள, அப்பால் வேறு சிலர் சுன்னகம்வரை புலவர் அவர்களைப் பின்தொடர்ந்து

படித்துக்கொண்டு போவார்கள். இடையிலே வழியில் யாராவது புஸ்தகம் வைத்துக்கொண்டு நின்ருல் "ஏதும் சந்தேகமா?" என்று வினவிவிட்டுச் சிறிது நேரம் நிற்பார்கள். சந்தேகம் தெளிவித்த பின்பு அப்பாற் போவார்கள். வீட்டுக்குப் போன பிறகும் அங்கேயும் பலர் படிக்கிறதற்குக் காத்திருப்பார்கள். புலவர் அவர்களை 'நடக்கிற ஒரு புஸ்தகசாலை' என்று ஒருவர் எழுதினுர். அப்படியல்ல, அவர்கள் ஒரு 'நடக்கிற தமிழ்ச் சர்வகலாசாலை.'

புலவர் அவர்கள் பணத்துக்குப் படிப்பிக்கவில்லை. படிக்கிறவர்களுக்கு அளவறிந்து படிப்பித்தவர்கள். நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் வரவுசெலவுக் கணக்குகளுக்குப் பொறுப்பான ஓர் உபாத்தியார்—புலவர் அவர்களின் பெருந்தகையை அறிந்தவர் — 'போக்கு வரவுச் செலவுக்கு இருக்கட்டும்' என்று ஏதாவது புலவர் அவர்களுக்குக் கொடுக்க முயல்வதும் புலவர் அவர்கள் அதனை ஏற்கக் கூசுவதும் ஒரு சிறந்த இலக்கிய பாடமாயிருக்கும்.

•

அரைகுறை வித்துவான்கள் சிலர் புலவர் அவர்களைக் குறை கூறியதும் உண்டு. அது புலவர் அவர்களின் குற்றம் அன்று. முகம் சரியில்லாத ஒருவன் கண்ணுடியைக் கோபித்த கதை தெரிந்தவர்களுக்குப் புலவர் அவர்களைக் குறை கூறுபவர்களில் நூதனந் தோன்ருது. புலவர் அவர்கள் ஒரு சங்கப் பலகை. அந்தப் பலகை குண நாடிக் குற்றமும் நாடி மிகை நாடி மிக்கவற்ருல் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நூலையுங் கொள்ளுவதாயிருந்தது. தெரு

விலே போகிற ஒருவன் கல்வியறிவில்லாதவனு யிருந்தாலும் அவன் ஒன்று சொன்னுல் அதன் பிழை சரிகளைப் புலவர் அவர்கள் ஆராய்வார்கள். அது அவர்களது இயல்பு. தெருக்களிற் கூத்து விளம்பரம் கொடுக்கிறவர்கள் சில சமயங்களிற் புலவர் அவர்கள் கையிலும் ஒன்றைக் கொடுத்துவிடுவார்கள். புலவர் அவர்கள் அதனை வாங்கிப் பக்குவமாக மடித்துத் தமது புஸ்தகத்தோடு வைத்துக் கொள்ளுவார்கள். பிறகு பள்ளிக்கூடத்தில் அந்த விளம்பரத்தை எடுத்து மெல்ல விரித்து முதலி லிருந்து முழுவதையும் படித்துப் பிழைகளைத் திருத்தும்படி மாணவர்களிடம் கொடுப்பார்கள். மாணவர்களுக்கு இது பெரிய சிரிப்பா யிருக்கும். மாணவர்கள் செயலைக் கண்ட புலவர் அவர்கள் "மணற் சோற்றிற் கல்லாராய்கிறதாயிருந்தாலும் இதனுலும் பெரிய திருத்தம் உண்டாகும்" என்பார்கள்.

படிப்பிக்கிற நேரம், படித்தவர்களோடு சம்பாஷிக்கிற நேரம் தவிர்ந்த நேரங்களில் நடக்கிற போதுஞ் சரி கிடக்கிறபோதுஞ் சரி எந்த நேரத்திலும் புலவர்கள் ஏதாவது ஒன்றைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்தபடி இருப்பார்கள். அவர்கள் வாழ்ந்த உலகம் வேறு. சிந்தனையில் ஆழ்ந்திருக்குஞ் சமயங்களிற் சாதாரணமானவர்கள் யாராவது வந்தால் அவர்களோடு பேசவேண்டுமே என்ற சம்பிரதாயத்துக்காக அவர்களை ஏதாவதொரு கேள்வி கேட்டுவிட்டு அப்பால் தமது சிந்தனு உலகத்திற் சஞ்சாரஞ் செய்யத் தொடங்கி விடுவார்கள். இடையிடையே ஓரோர்கால் இந்த உலகத்துக்கும்

இறங்கி, எதிரில் இருப்பவர்களை முந்திக் கேட்ட கேள்வியைத்தானே மீட்டும் கேட்பார்கள்; பல முறை கேட்பார்கள். மறுமொழி சொல்லுகிறவர்கள் ஒன்றைத்தானே அடிக்கடி சொல்லி அலுத்து விடுவார்கள். மறுமொழி ஒன்றும் புலவர் அவர்களின் செவிகளில் ஏறுவதில்லை. அவர்கள் உண்டு; அந்தச் சிந்தனை உலகம் உண்டு. இதனாலே புலவர் அவர்களின் நிலையை அறியாத சிலர், அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று நினைக்கிறதுமுண்டு.

பெரிய மனிதர்கள் பெரிய சால்வையோடு சிறிய ஒரு துண்டுச் சால்வையையும் அணிந்துகொள்வது வழக்கம். புலவர் அவர்கள் பள்ளிக்கூடம் விடுகிற சமயத்தில் தாம் கொண்டுவந்த புத்தகங்கள் காகிதங்களை ஒன்று சேர்த்துத் துண்டுச் சால்வையில் வைத்துக்கொண்டு போகிறதற்குச் சௌக்கியமாக ஒரு முடிச்சுப் போடுவது வழக்கம். முடிகிற சமயத்திலே அவர்களுடைய மனம் சிந்தனை உலகத்திலே பிரவேசிக்கத் தொடங்கிவிடும். முடிந்த பிறகு முடிச்சிலிருக்கும் பொருள்களிற் புலவர் அவர்களுக்குச் சந்தேகம் உண்டாய்விடும். முடிச்சை அவிழ்த்துப் பார்க்கத் தொடங்குவார்கள். கைகள் அவிழ்க்கும். மனம் பழையபடி வேதாளம் போலே சிந்தனை உலகத்துக்குப் போய்விடும். கைகள் அவிழ்க்கும்; முடியும். பலதரம் இது நடக்கும். கடைசியிற் சந்தேகம் சந்தேகந்தான் "என்ன என்ன பொருள்கள் வைத்து முடிந்தேன்?" என்று மாணவர்களை வினவுவார்கள். சில வேளைகளில்

மாணவர்கள் சொல்வதும் பயன்படாமற் போய் விடும். விஷயம் தெரிந்த மாணவர்கள் செவ்வி யறிந்து சொல்லுவார்கள்.

விஞ்ஞான சாஸ்திரியார் ஒருவர் தமக்குக் கொண்டுவந்து வைத்த உணவை, தமது நண்பர் ஒருவர் உண்டதை அறியாமல் வெறும் பாத்திரத் தைப் பார்த்துவிட்டு முன்னமே தாம் உண்டதாக எண்ணினர் என்று ஒரு கதை சொல்லுவார்கள். விஞ்ஞான சாஸ்திரிகளைப்பற்றி இப்படிப்பட்ட கதைகள் பல உண்டு. புலவர் அவர்களோடு பழகிய வர்களுக்கு அந்தக் கதைகளில் ஒரு புதுமையும் உண்டாகாது.

ஒரு துக்கம். புலவர் அவர்கள் தம்மை யாரா வது அவமதித்தால் அதனை நன்ருகச் சகிப்பார் கள்; தம்மை அறியாதவர்கள் தம்மை மதித்தால், பாராட்டினல் அந்தச் செயலை ஒரு சிறிதும் சகிக்க மாட்டார்கள். இதற்கு அநேக உதாரணங்கள் உண்டு.

1920ஆம் ஆண்டு என்று நினைவு. இலங்கை அரசாங்கத்தார் தமிழை அபிமானித்து, தமிழை அபிவிருத்தி செய்கின்ற தமிழ்ப்புலமை யுடையவர் களுக்குச் சந்மானஞ் செய்வதென்று தீர்மானித் தார்கள். யாழ்ப்பாணத்திலே சேர் பொன். அருணு சலந்துரையின் தலைமையிலுள்ள செந்தமிழ்ப் பரி பாலனசபையார்—இச்சபையில் சேர் அம்பலவாணர் கனகசபை முதலிய பிரமுகர்கள் இருந்தவர்கள் — சந்மானத்துக்குப் புலவர் அவர்களே தக்கவர்க ளென்று சிபார்சு செய்தார்கள். ஒரு தொகைப்

பணம், அரசாங்கத்தாராற் புலவர் அவர்களுக்கு உபகரிக்கப்பட்டது. இதனைப் பலரும் பாராட்டினார்கள். ஆனால், புலவர் அவர்களுக்கு இந்தச் சந்மானம் தம்மையறிந்து செய்ததென்று தோன்றவில்லை. இதனாலே அவர்கள் மனசில் ஆறாத் துயரம் உண்டானது. அதனை ஆற்றுவதற்கு மானேஜர் அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தார்கள். புலவர் அவர்களுக்குப் பிறகும். "அரசாங்கத்தார் அருமையறியாது சந்மானஞ் செய்த விஷயத்திற் புலவர் அவர்களில் ஒரு குற்றமும் இல்லை; குற்றமனைத்தும் செந்தமிழ்ப் பரிபாலன சபையைப் பொறுத்தது" என்று மானேஜர் அவர்கள் சொல்லிவந்தார்கள். தம்மையறியாதவர்களுக்குத் தம்மை விற்காதவர்கள், நாவலர் அவ்ர்களுக்குப் பிறகு புலவர் அவர்களே!

## II

புலவர் அவர்கள் வகுப்பிற் படிப்பிக்கும்போது மானேஜர் அவர்களும் ஒரு மாணவர்போல அடக்கமாக இருந்து கேட்பார்கள்; புலவர் அவர்கள் வகுப்புக்கு வராத சமயங்களிலே தாமும் படிப்பிப்பார்கள். மானேஜர் அவர்கள் படிப்பிப்பது புஸ்தகப் படிப்பன்று; கதைப் படிப்பு, உலகப் படிப்பு, புஸ்தகப் படிப்பு, எல்லாப் படிப்புஞ் சேர்ந்தது அந்தப் படிப்பு. எந்த விஷயத்தை ஆரம்பித்தாலும் அதற்கு ஒரு கதை சொல்லுவார்கள். மானேஜர் அவர்கள் கதா பொக்கிஷம். கதை சொல்லுகிற போது கேட்கிறவர்களுக்கு வயிறு குலுங்கி வயிற்றுநோ உண்டாய்விடும். அவ்வளவு சிரிப்பு.

அவர்கள் ஒரு ஹாஸ்ய பொக்கிஷமாயும் இருந்தார்கள்.

ஒருநாள், கம்பராமாயணத்தைப்பற்றிப் பேச்சு வந்தது; யாழ்ப்பாணத்திற் கம்பராமாயணத்தைப் பற்றிப் பேசுகிறதென்ருல், வித்துவசிரோமணி பொன்னையா (பொன்னம்பலபிள்ளை) உபாத்தியாயரின் கதா சமுத்திரத்தில் ஒரு சிறு திவலையை எடுத்துச் சிந்திவிடுவதாயிருக்கும். பொன்னையா உபாத்தியாயரின் கம்பராமாயண வகுப்பு மானேஜர் அவர்கள் வீட்டுத் தலைவாசலிலும் நடந்தது. பொன்னையா உபாத்தியாயர் ஒரு தூணோடு சாய்ந்துகொண்டிருப்பார். இராமாயணம் படிக்கும் மாணவர்கள்—உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் போன்றவர்கள்—அவர்கள் எதிரிலே அரைவட்டமா யிருப்பார்கள். மற்ருெரு பக்கத்திலே குத்துவிளக்கைச் சுற்றிச் சிறுவர்கள் சிலர் மனனஞ் செய்யவேண்டிய பாடங்களை மனனஞ் செய்துகொண்டிருப்பார்கள். அந்தச் சிறுவர்களில் மானேஜர் அவர்களும் ஒருவர். தர்க்ககுடார தாலுதாரி தம்பு மற்ருெருவர். வேறுஞ் சிலர். இவர்களைப் பொன்னையா உபாத்தியாயர் அடிக்கடி கவனித்து எச்சரிக்கை செய்துகொள்ளுவார். தர்க்ககுடாரத்துக்குப் பொழுதுபடுகிறது தாமதம். கண்ணிறைய நித்திரை வந்துவிடும். ஆள் நிமிர்ந்திருந்து புஸ்தகம் விரித்தபடி மூக்கு நுனியை நோக்கிய பாவனையில் நித்திரையாய்விடும். "என்னடா தம்பு நித்திரையா?" என்பார் பொன்னையா உபாத்தியாயர். "அ அ......நான் விழிச்சபடி படிக்கிறேன்" என்று நிமிராமற் கண்ணை மூடியபடி

தர்க்ககுடாரம் சொல்லும். இது கம்பராமாயணம் நடக்கும்போது இடையிடையே ஒரு பக்கத்தில் அடிக்கடி நடக்கும். சிலவேளைகளில் தர்க்ககுடாரத்தைத் தனியே அழைத்து, தமக்கெதிரில் உள்ள குத்துவிளக்குக்குப் பக்கத்திலே பொன்னேயா உபாத்தியாயர் இருத்திவிடுவார். தர்க்ககுடாரத்துக்கு அப்பொழுதும் நித்திரை தூங்கும். ஒருமுறை பொன்னேயா உபாத்தியாயர் உதைந்த உதையில் தர்க்ககுடாரம் உருண்டு புரண்டு முற்றத்தில் விழுந்தது. ஆனால் விழுந்தது விழமுன் ஓடிவந்து குத்துவிளக்குக்குப் பக்கத்தில் இருந்துவிட்டது. பாவம்! அவ்வளவு பயம்.

இராமாயணத்துக்கு வியாக்கியானம் நடந்துகொண்டிருக்கும். யாராவது "வேருெரு கருத்து முந்திச்சொன்ன ஞாபகம் இருக்கிறது" என்றால் அப்படிச் சொன்ன மனனப் பேர்வழிக்கும் உதை கிடைக்கும். எல்லாரும் வியாக்கியானப் பிரவாகத்தில் அமிழ்ந்திப்போயிருப்பார்கள். இடையிடையே பொன்னேயா உபாத்தியாயர் அடிக்கடி எழுந்து போய்த் திரும்பிவந்திருப்பார். உபாத்தியாயரின் கடன்காரர்கள் அடிக்கடி வந்துகொண்டிருப்பார்கள். ஒவ்வொருவரும் வரவர ஒவ்வொருமுறையும் உபாத்தியாயர் எழுந்துபோய்த் தவணை சொல்லிப் போட்டு வந்திருப்பர். தவணையென்றால் நீளமாகப் போடுகிற வழக்கம் பொன்னேயா உபாத்தியாயருக்கில்லை. பின்னேரமானால் மறுநாட் காலையில் தீர்த்து வைக்கிறதாகச் சொல்லுவார். காலையில் வந்தால் 'பின்னேரம் தீர்த்துவிடுகிறேன்' என்பார். கடன்

காரர்கள் எல்லாரும் ஒவ்வொருவராய் வந்து இராமா யண வகுப்புக்குப் பின்னே ஒரு பெரிய அரைவட்ட மாய் இருப்பார்கள். அதற்கப்பாலும் பல அரை வட்டங்கள் வந்து சேர்ந்து தலைவாசல் நிறைந்து விடும். முற்றத்திலும் இருப்பார்கள். பலர் இராமா யணம் கேட்க வந்தவர்களாயிருந்தாலும், அவர்களும் கடன் கொடுத்தவர்களாயிருப்பார்கள். மற்றொரு பக்கத்தில் வேறொரு பகுதியார் இருப்பார்கள். அவர் களிற் சிலர் தாங்கள் கற்ற வித்தைகளின் திறமை களைக் காட்டிப் பொன்னையா உபாத்தியாயர் கையாற் பரிசில்பெற வந்திருப்பார்கள். சிலர் கோயில்கள் மடங்கள் கட்டப் பணம் வேண்டு மென்றும், சிலர் கன்னிகைகளைக் கரை சேர்க்கக் கையில் ஒன்றும் இல்லை யென்றும் வந்திருப் பார்கள். மாணவர்களிலுஞ் சிலருக்கு அன்னம் வஸ்திரம் முதலியன உதவ வேண்டியும் இருக்கும் எல்லாருக்கும் வேண்டியன செய்து வைத்து விடுவதாக வாக்களித்துவிடுவார். இது பொன்னையா உபாத்தியாயர் இராமாயணவகுப்பு நடத்தும் இலட் சணம்.

ஒரு கிழவனார் பதினைந்து வருஷ காலம்வரையில் தினந்தோறும் தவறாமற் பொன்னையா உபாத்தி யாயரிடங் கொடுத்த கடன் வாங்க வந்து இராமா யணம் கேட்டுக்கொண்டு போயிருக்கிறார். ஒரு நாளும் பொன்னையா உபாத்தியாயரை அவர் கோபித்தது, குறை கூறியது கிடையாது. பிறகும் கடன் கேட் டாலும் அவர் கொடுக்க ஆயத்தம். கடன் கொடுத் தவர்களுக்கெல்லாம் அவர்களை அறியாமற்

பொன்னையா உபாத்தியாயரிடம் ஒரு அன்பு. கடன் கொடுத்ததில் அவர்களுக்குச் சந்தோஷம். திடீரென்று பொன்னையா உபாத்தியாயர் இறந்துவிட்டார். கிழவனுர் இன்னுங் கொடுத்த கடனை வாங்கவில்லை. மானேஜர் அவர்கள் இதனையறிந்து, அந்தக் கடனைக் குறித்த ஒரு தேதியில் தாம் தீர்த்துவைப்பதாகக் கிழவனுருக்கு அறிவித்தார்கள். அந்தத் தேதியிற் கிழவனுர் வந்து சேர்ந்தார். மானேஜர் அவர்களுக்குத் தற்செயலாக அன்று கொடுக்க முடியவில்லை. அடுத்த நாளைக்குத் தருவதாகச் சொன்னுர்கள். கிழவனுருக்கு அளவுகடந்த கோபம் வந்துவிட்டது! "இப்படி மனுஷரை ஏய்க்கலாமா?" என்று மானேஜர் அவர்களைக் கிழவனுர் ஏசிப்போட்டார்!

"இராமாயண வாயினுலே பதினைந்து வருஷம் தவணைபோடப் பொறுத்த கிழவனுர், நான் ஒரு நாள் தவணை சொல்லக் கோபித்துக் கொண்டார்" என்று இந்தக் கதையை மானேஜர் அவர்கள் சொன்னுர்கள். இப்படியே பொன்னையா உபாத்தியாயர் அவர்களைப்பற்றி மாத்திரம் சொன்ன கதைகள் ஆயிரத்துக்குண்டு.

மானேஜர் அவர்களின் ஹாஸ்ய ரசங்களெல்லாம் நாவலர் அவர்களைப்பற்றிக் கதைகள் சொல்லுகிற சமயங்களிலே இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விடும். அந்தச் சமயங்களில் அவர்களுக்கு நாக்குத் தழுதழுக்கும்; கண்கள் கலங்கும்; உரோமஞ் சிலிர்க்கும். கேட்டுக்கொண்டிருப்பவர்களை வியப்புச்சுவை விழுங்கிவிடும். நாவலர் அவர்களே

அவர்களுக்குக் கண்கண்ட தெய்வம். அவர்களையே சதா தியானித்துக்கொண்டிருப்பார்கள். நினைந்து நினைந்து உருகுவார்கள். 'ஐயா அவர்கள்' என்று சொல்லுவார்களேயன்றி, 'நாவலர்' என்று சொல்வது கிடையாது. மரண காலத்தில் மானேஜர் அவர்கள் எழுதிவைத்த ஒரு பத்திரத்தின் இறுதி வசனம் இது; 'நாவலரையாவே என் உயிர்க்கு உற்ற துணை.'

மானேஜர் அவர்கள் குழந்தைப் பருவந் தொட்டு இருபத்துநான்கு வயது வரை நாவலர் அவர்கள் சந்நிதியில் வளர்ந்தவர். அவர்களுக்கு எழுத்து வேலைகள், ஏவல்கள் செய்தவர்கள். நான்காம் பாலபாடம், இரண்டாம் சைவவினாவிடை, சிவாலய தரிசனவிதி, குருசிஷ்யகிரமம் இந்த நான்கு நூல்களும் மானேஜர் அவர்களின் நான்கு வேதங்கள். இந்தக் காலத்துக்கு இவைகள் போதுமானவைகள் என்பார்கள். இந்த நூல்களுக்குப் புறம்பான விரோதமான கொள்கைகளை அவர்கள் அங்கீகரிப்பதில்லை. ஒருநாள் ஒரு கையிற் பொன்னுற் செய்த ஒரு இரக்ஷாபந்தனம் தரித்திருந்தார்கள். அதைப்பற்றி ஒருவர் வினவியபோது இந்தக் காலத்தில் வெளிவருகிற நவீன நூல்களை இனித் தீண்டுவதில்லை யென்று சத்தியஞ்செய்து அதனை அணிந்திருப்பதாகச் சொன்னார்கள்!

வடதேசத்திலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள வித்துவான்களைப் பற்றி விநோதமான அநேக கதைகள் மானேஜர் அவர்கள் சொல்லுவார்கள். நாவலர் அவர்களைப் பற்றியும் பொன்னையா

உபாத்தியாயரைப்பற்றியும் அறிந்த கதைகளை மாத்திரம் வெளியிட்டிருப்பார்களாயின் நூறு புத்தகங்கள் வெளியிட்டிருக்கலாம். நாவலர் அவர்களின் ஒவ்வொரு உரோமத்துக்கும் ஒவ்வொரு கதை சொல்லுவார்கள். உண்மையான கதைகள்; பேச்சு வழக்கில் உள்ள அந்தக் கதைகளை எழுத்திற் கொண்டுவர மானேஜர் அவர்கள் விரும்பவில்லை.

'தரும பரிபாலகர்' என்ற தொடர் இந்தக் காலத்திற் கருத்தின்றிச் சாதாரணமாக வழங்குகின்றது. அந்தத் தொடருக்கு இலக்கியமாய் வாழ்ந்த ஒரே யொருவர் மானேஜர் அவர்கள். நல்லூரில் கைலாச பிள்ளையார் கோயில் தருமங்களையும், வண்ணார்பண்ணையில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமங்களையும் மானேஜர் அவர்கள் பரிபாலித்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு மகன் இருந்து இறந்துபோனார். அந்த மகன் ஒரு நாள் கைலாசபிள்ளையார் கோயிலுக்குப் போனபோது கோயிற் குருக்கள் வெற்றிலையும் அதனோடு இரண்டு வாழைப்பழமுங் கொடுத்து அவரை உபசரித்தார். அவர் அவைகளை வாங்கிக்கொண்டுவந்து வீட்டின் உட்பக்கமுள்ள மேல்வாசற்படியில் அவைகளை வைத்துவிட்டார். மானேஜர் அவர்கள் பூசை முடித்துக்கொண்டு சாப்பிடப் போகும்போது அந்த வாழைப் பழங்களில் ஒன்றை எடுத்துக் கொண்டுபோய்ச் சாப்பிட்டுவிட்டார்கள். சாப்பிட்ட பிறகு கோயில் வாழைப்பழமென்று தெரிந்தது. உடனே பதைபதைத்து மகனைக் கூப்பிட்டுக் கண்டித்துவிட்டு ஒரு சிறு தொகைப் பணம் கோயி

லுக்குச் செலவுசெய்து கோயிற்பொருளை அநுபவித்ததற்குப் பிராயச்சித்தஞ் செய்துகொண்டார்கள்.

நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சமய குரவர் நால்வருக்கும் நாவலர் அவர்களுக்கும் சிறப்பாகக் குருபூசைகள் நடைபெறும். இந்த ஐந்து குருபூசைகளிலும் மானேஜர் அவர்கள் வித்தியாசாலையிற் சாப்பிடுவார்கள். அப்படிச் சாப்பிடுகிறதற்காக ஒவ்வொரு குருபூசைக்கும் ஒவ்வொரு ரூபாவுக்குக் குறையாத பொருள்கள் பாலென்றும், தயிரென்றும், நெய்யென்றும் கொண்டுவந்து சேர்ப்பார்கள். தருமப்பொருளை விஷசர்ப்பமென்று மதித்து நடந்தவர்கள் மானேஜர் அவர்கள்.

காலத்துக்குக் காலம் யாழ்ப்பாணத்தில் வந்து இறங்குகின்ற நவீன நாகரிகங்கள், கொள்கைகளை அவ்வப்போது கண்டித்து மானேஜர் அவர்கள் வெளியிட்ட கடிதங்கள், துண்டுப் புத்தகங்கள் நூற்றுக்கணக்கானவைகள். விஷயங்களெல்லாம் வெகு காரசாரமாயிருக்கும். அவர்களுடைய வசனநடை மற்றவர்கள் தொடரமுடியாத ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. விஷயத்தை வீணுக வளர்க்கும் வழக்கம் அவர்களுக்கில்லை. நேரே விஷயத்தில் இறங்குவார்கள். ஒவ்வொரு வசனமும் எதிரிக்குத் தேள் கொட்டுவது போன்றிருக்கும். ஒரு கூட்டத்தில் சேர் பொன். இராமநாதன் அவர்களின் தமையனுர் ஸ்ரீமாந் குமாரசுவாமி அவர்கள், மானேஜர் அவர்களுக்கு 'நெருப்புக் கொள்ளி' என்று பட்டம் சூட்டிப் பாராட்டினுர்கள். 'எறும்பூரக் கற்குழியும்', 'பாலொடு தேன் கலந்து', 'செந்திருக்கம்'

'தமிழ்த்துரைமார்' என்பன சில துண்டுப் புத்தகங்களின் தலையங்கங்கள். சைவ பரிபாலன சபை மானேஜர் அவர்கள் முயற்சியால் தாபிக்கப்பட்டது. தொடக்க காலத்தில் அவர்களே அதனைப் போஷித்து வளர்த்து வந்தவர்கள்.

சில சமயங்களிலே தமது பழுத்த அனுபவங்களைச் சிறு சிறு துண்டுப் பத்திரிகைகள் வாயிலாக வெளியிடுவது முண்டு; வெளியிடாது அச்சிட்டு வைத்துக்கொள்வது முண்டு. ஒருநாள் எனக்கு ஒரு துண்டுப்பத்திரிகை தந்தார்கள். அது $2\frac{1}{2}$ அங்குல நீளம் $1\frac{1}{2}$ அங்குல அகலமானது. அந்தப் பத்திரம் இது :

> உ
>
> நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
> புல்லறி வாண்மை கடை.
>
> நில்லாதனவாவன: சரீரம், உத்தியோகம், அதிகாரம், செல்வம், வறுமை, கல்வி, ஆண்மை, புகழ், இகழ், குலம், அழகு, ஆரோக்கியம், நோய், சந்தோஷம், துக்கம், சினேகம், கோபம், சுற்றம் முதலானவை.

வித்தியா பகுதியாருக்கும் அரசாங்கத்தாருக்கும் அவர்கள் எழுதுங் கடிதங்கள் ஹாஸ்யரசம் நிறைந்தவைகள். ஹாஸ்யமிகுதியினாற் காரியங்களிற் பிரதிகூலமெய்தியதுமுண்டு. ஒருமுறை அயல் வளவுத் தென்னை ஒன்று வித்தியாசாலைக்கு நட்டம் விளைப்பதால் தறிப்பிக்க வேண்டியிருந்தது. இதனை

மானேஜர் அவர்கள் நகரசங்கத் தலைவருக்குத் தெரிவித்தார்கள். இதற்கிடையில் தென்னைக்காரன் சங்கத் தலைவரைக் கண்டிருக்கவேண்டும். தலைவர் தென்னையின் கொப்புகளைத் தறிப்பிப்பதாகத் தெரிவித்தார்! மானேஜர் அவர்கள் தென்னை தறிப்பிக்கிற விஷயத்தை நிறுத்தி அதற்குக் கொப்புண்டோ இல்லையோ என்ற ஆராய்ச்சியில் இறங்கினார்கள். நகரசங்கத் தலைவர் யாழ்ப்பாணத்தில் ஆள்தான். அவருக்கு ஹாஸ்யரசம் ஒத்துக்கொள்ளவில்லை. அவர் தலைவராயிருந்த காலம்வரையும் அந்தத் தெங்கு அப்படியே தப்பிப் பிழைத்து நின்றது!

நோய் முதிர்ந்துவிட்டது. படுக்கையிற் படுத்திருக்கின்றார்கள். மருந்து கரைத்து வாய்க்குள் வார்க்கிற சமயம், "கொஞ்சம் நிறுத்துங்கள்; ஒரு பகிடி வருகிறது; சொல்லிவிட்டுப் பிறகு மருந்தை விழுங்குவோம்" என்றார்கள். மரணபரியந்தம் மானேஜர் அவர்களின் வாய் ஹாஸ்யரசம் ஒழுகிக் கொண்டிருந்தது. ஆனால் இறுதியிற் சில வருஷ காலம் அவர்கள் அநுபவித்த ஆறாத் துயரத்தை இந்தப் பூமண்டலத்தில் வேறு யாராவது அநுபவித்திருப்பார்களென்று நான் கருதவில்லை. பெரிதும் தர்ம சங்கடப்பட்டார்கள். 'நாவலர் அவர்கள் தர்மங்களை என்ன செய்வது? ஆரை நம்புவது?' என்று தான் எப்பொழுதுங் கேட்டுக்கொண்டிருந்தார்கள். தமது நோக்கங்கள், எண்ணங்களை நம்பிக்கையுள்ள சிலரிடம் அவர்கள் அடிக்கடி சொல்வதுண்டு. ஒரு நாள் "அறுபது வயசுக்கு மேற்பட்டவர்களுக்குத்

திடீரென்று எண்ணங்கள் நோக்கங்கள் மாறிவிடுகின்றன என்று சொல்லுகிறார்கள். என்னிடம் மாற்றங் கண்டால் நீங்கள் அதைத் தெரிவிக்க வேண்டும்" என்றார்கள். நாங்கள் அதனைக் கேட்டுச் சிரித்தோம்.

எண்பது வயசு வரையும் மானேஜர் அவர்களின் எண்ணங்கள் நோக்கங்களில் எவ்வித மாற்றமும் உண்டாகவில்லை. அதன்மேல் அவர்களுக்கு உடம்பு மெலிந்து தளர்ச்சி உண்டாய்விட்டது. நல்ல சூழலும் இல்லாமலிருந்தது. சென்ற 1935ஆம் ஆண்டு ஆவணி மாசத்தில் திடீரென்று அவர்களுடைய எண்ணங்கள் நோக்கங்களெல்லாம் மாறிவிட்டன. எனக்குப் பெரிய ஆச்சரியமாய் இருந்தது. மாற்றங்களை நேரே சொல்லக் கூசி ஒரு காகிதத்தில் எழுதித் தெரிவித்தேன். அவர்கள் என்னைக் கூப்பிட்டுக் காகிதத்தையும் கையில் வைத்துக் கொண்டு, "அப்பா! உனது காகிதம் என்னை உருக்கிவிட்டது. முழுவதையும் வசிக்க என்னால் முடியவில்லை. என்னுடைய நிலைமை மாறியிருக்கிறது எனக்குத் தெரியும். இப்பொழுது இந் நிலையிலேதான் நான் இருக்கவேண்டியிருக்கிறது. என்னுடைய கொள்கைகளை ஐயா அவர்களின் கொள்கைகளோடு மாறுபாடில்லாத அளவில்தான் மற்றவர்கள் அனுசரிக்கலாம்" என்றார்கள். எனக்கு ஒன்றும் சொல்ல வரவில்லை; அழுகைதான் வந்தது.

பிறகு இடையிடையே போய் அவர்கள் சுக க்ஷேமங்களை விசாரித்துக்கொண்டு வந்தேன். இறக்கிறதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்

கண்களில் நீர் பெருகுகிறது. விம்மல் பொருமல்களோடு படுத்திருக்கிறார்கள். நான் எதிரிற் போய் நின்றேன். "அப்பா, நான் ஐயா அவர்களின் திருவடிகளுக்குப் பூசை செய்கிறேன். தெருவிலே கானிலுள்ள ஓர் அற்ப புல்லுப்போன்ற என்பொருட்டும், ஐயா அவர்கள் அந்த அருமந்த நேரங்களில் ஒரு பகுதியைச் செலவு செய்தார்களே என்று அழுகின்றேன்" என்றார்கள். நாவலர் அவர்களைப்பற்றி உருக்கமாக மானேஜர் அவர்கள் அடிக்கடி சொன்ன சில கதைகளை ஞாபகப்படுத்திச் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர்களுக்குண்டான ஆனந்தத்தை எப்படி வர்ணிப்பது? "இன்றைய நாள் பயன்பட்ட நாள்" என்றார்கள். திடீரென்று அவர்களுக்கு ஒரு தெளிவு பிறந்தது. அப்பொழுது ஓர் அருமையான கதை சொன்னார்கள்.

"1872ஆம் ஆண்டு வரையில் ஒரு கொடிய பஞ்சம் உண்டானது. அந்தக் காலத்தில் ஐயா அவர்கள் பொருள் சேகரித்து ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தார்கள். அந்தத் தருமத்துக்குக் 'கஞ்சித் தொட்டித் தருமம்' என்று பெயர். அந்தக் காலத்திற் சென்னை அச்சுக்கூடத்துக்கும் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கும் சதாசிவம்பிள்ளை அதிபதியாயிருந்தார். அவர் சென்னையில் நெல் வியாபாரஞ் செய்தவர்; தொகையாக நெல்லு மூடைகள் அவரிடம் இருந்தன. விலை பதின் மடங்காக ஏறியது. ஐயா அவர்கள், கொள்விலைக்கு விற்கும்படி தந்திமேல் தந்தி அடித்தார்கள். சதாசிவம் பிள்ளை கேட்கவில்லை. பெரும் பொருள் திரண்டது.

சிதம்பர வித்தியாசாலையின் செல்வம் பெருகினது. 'அதர்மத்திலிருந்து தர்மம் விருத்தியாகாது' என்று ஐயா அவர்கள் அந்தக் காலத்தில்தானே சொல்லிப்போட்டார்கள். ஐயா அவர்கள் அடைந்தது 1879ஆம் ஆண்டில். 1872ஆம் ஆண்டு தொடக்கம் 1879ஆம் ஆண்டு வரையும் ஐயா அவர்கள் வடக்கே போக அடியெடுத்து வைக்கவில்லை" என்றார்கள்.

புலவர் அவர்களுக்கும் மானேஜர் அவர்களுக்கும் மாணவர்கள் யாராவது உபகாரஞ் செய்ததை நான் அறியேன். புலவர் அவர்களுக்கு வாதம்; வித்தியா சாலைக்கு நடக்கமாட்டார்கள். நான் அவர்கள் வீட்டுக்குப்போய்ப் பாடங் கேட்டுக்கொண்டு வந் தேன். ஒருநாள் "வண்ணார்பண்ணையில் ஒரு கடை யில் இருப்பை நெய்க்குப் பணங் கொடுத்திருக்கி றேன்; நாளைக்கு வரும்போது அந்த நெய்யை வாங்கி வா" என்றார்கள். எனக்குப் பெரிய சந்தோஷம். உடனே சுன்னாகத்திலிருந்து வண்ணார்பண்ணைக்கு வந்து, இருப்பை நெய்யை வாங்கி, அன்றுதானே பொழுதுபடுகிறநேரம் புலவர் அவர்களிடம் கொண்டு போய்க் கொடுத்தேன். புலவர் அவர்கள் "ஏனப்பா, இப்படி அலைந்தாய்? நாளைக்கு வரும்போது கொண்டு வந்திருக்கலாமே" என்று சொல்லி மெத்த வருத் தப்பட்டு எவ்வளவோ உபசாரங்கள் செய்து இராமா யணம் பாலகாண்டம் அரும்பதவுரை ஒன்றும் வேறு சில புஸ்தகங்களும் உபகரித்தார்கள். எனக்குப் பெரிய தோல்வியாய்ப் போய்விட்டது.

ஒருமுறை மானேஜர் அவர்கள் சுவாமிக்கு அபி ஷேகம் செய்வதற்கு இரண்டு மூன்று சங்குகள்

தேவைப்பட்டார்கள். நான் மறவன்புலோவுக்குப் போனபோது அங்கே நான்கு சங்குகள் வாங்கி வந்து கொடுத்தேன். மானேஜர் அவர்கள் என்னோடு வேறு பல கதைகளைப் பேசிவிட்டு, "அங்கே ஒரு சங்கு என்ன விலைக்கு விற்கிறவர்கள்" என்று கேட்டார்கள். என்ன செய்வது; "மூன்று சதம்" என்றேன். நான்கு சங்குக்கும் பன்னிரண்டு சதமும் தந்து வேறு உபசாரங்களும் செய்தார்கள். அந்த விஷயத்திலும் எனக்குப் பரிபூரணமான தோல்வி.

அந்த இரண்டு பெரிய மகான்களும் மாணவர்களுக்குச் செய்த கருணைகளை நினைக்கும்போதெல்லாம்,

> செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
> வானகமு மாற்ற லரிது.

> பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
> நன்மை கடலிற் பெரிது.

என்ற அருமைத் திருக்குறள்கள் என் வாயில் வந்து கொண்டிருக்கின்றன.

புலவர் அவர்கள் ஒன்றை நினைக்க மானேஜர் அவர்கள் அதனைச் செய்வார்கள். மானேஜர் அவர்கள் ஒன்றை நினைக்கப் புலவர் அவர்கள் அதனைச் செய்வார்கள். இரண்டு மனுஷர்களும் கருத்தொருமித்து வாழ்ந்துவந்தவர்கள்.

1922ஆம் ஆண்டு மாசி மாதம் மானேஜர் அவர்கள் கண்கள் கலங்க நாத் தழுதழுக்க 'தமிழுக்கு வாய்க்கரிசி இடுகிறேன்' என்று உரக்கச் சொல்லிப் புலவர் அவர்களுக்கு வாய்க்கரிசி இட்டார்கள்.

புலவர் அவர்களுக்குப் பிறகு பதினேழு வருஷ காலம் தக்க உசாத்துணையின்றிக் கொழுகொம்பற்ற கொடிபோல் ஒருவாறு காலம் கழித்து வந்தார்கள்.

சென்ற 1939ஆம் ஆண்டு மாசி மாதம் சைவத்துக்கு ஒரேஒரு பற்றுக்கோடா யிருந்தவர்கள், புலவர் அவர்களைத் தொடர்ந்து அவர்களும் போய்விட்டார்கள்.

இனித் தமிழும் சைவமும்.........? ...... ?

# 4. சிந்தனைசக்திப் பயிற்சி – I

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கிரீஸ் தேசத்தில் அரிஸ்டாட்டில் என்று ஒரு பெரிய அறிஞர் இருந்தார். அவர் அறிவுத்துறைகள் அனைத்திலும் அதிக ஆழமாக ஆராய்ச்சிகள் நடத்திவந்தார். அவருடைய நூல்களே ஐரோப்பிய அறிவு வளர்ச்சியின் அடி நிலைகளாகும். அதனாலேயே ஐரோப்பியர்கள் அவரையே தங்கள் ஞானப்பிதாவாகப் போற்றுகிறார்கள். அத்தகைய பெரியார் மற்ற விஷயங்களை ஆராய்ந்தது போலவே மனிதனுடைய சிறப்பியல்பு யாது என்பது பற்றியும் ஆராய்ந்தார். இறுதியில் அவர் மனிதன் என்பவன் சிந்தனை செய்யும் ஒரு மிருகம் என்று முடிவுகட்டினார்.

சிந்தனைசக்தியேதான் மனிதனுடைய சிறப்பியல்பு என்று அரிஸ்டாட்டில் கூறியதையேதான் நாம் தினந்தோறும் உபயோகிக்கும் 'மனிதன்' என்னும் சாதாரண மொழியுங் கூறுகின்றது. மனிதன் என்பதன் வேர்ச்சொல்லான 'மனு' என்பதன் பொருள் சிந்தித்தல் என்பதாகும். ஆகவே சிந்திப்பவனே மனிதன் என்று பெறப்படும்.

அதுதான் உண்மை. ஆதியில் மிருகத்திலிருந்தே மனிதன் உற்பத்தியானான் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். என்று மிருகத்தினிடம் சிந்தனைசக்தி அரும்ப ஆரம்பித்ததோ அன்றுதான் மிருகம் மிருகமாயிருப்பதைவிட்டு மனிதனாக ஆயிற்று. சிந்தனைசக்தி மட்டும் தோன்றாதிருக்குமானால் மிருகம் இன்று

காறும் மிருகமாகவே இருந்திருக்கும். உலகமெங்கும் வனமும் வனந்தரங்களும் காணப்படுமேயன்றி நாடும் நகரமும் தோன்றியிருக்கமாட்டா. காவியங்கள், கதைகள், விஞ்ஞானங்கள், சன்மார்க்கங்கள், இசைகள், விசைகள் போன்ற நாகரிகப்பொருள்கள் எதையும் நாம் கண்டிருக்க முடியாது. சிந்தனைசக்தி தோன்றி வளர்வதன் காரணமாகவே உலகத்தில் காணப்படும் அறிவு வளர்ச்சியும் அற வளர்ச்சியும் பெருகி வருகின்றன.

அதனால் மனிதனாகப் பிறப்பவன் ஒவ்வொருவனுக்கும் சிந்தனைசக்தியானது அளிக்கப்பட்டிருக்கிறது. அதுவே அவனுடைய விசேஷ பண்பு. அதை உபயோகிக்கும் அளவே அவன் மிருகத்தைவிட உயர்ந்தவன் ஆவான். எவன் சிந்திக்கவில்லையோ அவன் மனிதன் ஆகமாட்டான்.

இதைக் கேட்டதும் சிலர், "அதென்ன அப்படிக் கூறுகிறீர்கள். சிந்திப்பதுதானே மனிதனுடைய சிறப்பியல்பு என்று கூறுகிறார்கள். அப்படியானால் மனிதராய்ப் பிறந்தோர் அனைவரும் சிந்திப்பவர்கள்தானே. நாம் உறங்கும்போது இல்லாவிட்டாலும், விழித்துக் கொண்டு இருக்கும் நேரம் முழுவதும் நம்முடைய மனம் வேலை செய்துகொண்டுதானே இருக்கிறது. அப்படியிருக்க நம்மிற் பலர் சிந்தனை செய்யாமல் இருப்பதாகக் கூறுகிறார்களே, அது எப்படி?" என்று கேட்பார்கள்.

இவர்கள் கூறுவது உண்மைதான். நம்முடைய மனமானது சதாகாலமும் வேலைசெய்துகொண்டுதான் இருக்கிறது. உறங்கும்போதுகூட வேலை

செய்வதாகவே உளநூற் புலவர்கள் கூறுகிருர்கள். ஆனல் மனம் வேலைசெய்கிறது என்பதைக்கொண்டு நாம் சிந்திப்பதாகக் கூற முடியுமா ?

காப்பிக்கொட்டை யந்திரத்திற் காப்பிக்கொட்டையைப் போடாமற் கையைப் பிடித்துச் சுற்றினல் காப்பிக்கொட்டை யந்திரம் வேலை செய்யும். ஆனல் அதைக்கொண்டு அது காப்பிக் கொட்டையை அரைப்பதாகக் கூறுவோமா ? கூறமாட்டோம். காப்பிக் கொட்டையை இடாமல் காப்பிக் கொட்டையை அரைப்பது எப்படி? காப்பிக் கொட்டை யந்திரத்தில் காப்பிக் கொட்டையை இட்டால்மட்டும் போதாது. காப்பிக்கொட்டையை அரைக்கும் விதத்தில் அந்த விசைகளை முறுக்கி வைத்துக்கொண்டு கைபிடியைச் சுற்றினல்மட்டுமே காப்பிக் கொட்டை அரைபடும். ஆகவே காப்பிக்கொட்டை யந்திரத்தில் காப்பிக் கொட்டையை அரைப்பதாகக் கூறவேண்டுமானல் அதிற் காப்பிக் கொட்டையைப் போடவும் வேண்டும். அதை அரைக்கத்தக்க முறையில் விசைகளை முறுக்கிவைத்துக்கொண்டு கைபிடியைச் சுற்றவும் வேண்டும். இதுபோல்தான் மனம் சிந்திக்கும் விஷயமும்.

நம்முடைய மனம் சதாகாலமும் வேலை செய்து கொண்டிருக்கிறது உண்மைதான். ஆனல், எத்தகைய வேலை செய்கிறது. அதைச் சிந்திக்கும் வேலை என்று கூற முடியுமா ?

இதோ நாற்காலியில் உட்கார்ந்து வெளியே பார்க்கிறேன். ஒரு மரம் தெரிகிறது. என் மனம் இரண்டொரு கணநேரம் அதைச் சுற்றி வருகிறது.

உடனே அதுமாதிரியான மரத்தைப் 'பார்க்'கில் பார்த்தது ஞாபகம் வருகிறது. என் மனம் அங்கே செல்கிறது. அங்குபோன மனம் அங்குள்ள மரங் களை ஆராயாமல் அங்கே நடைபெறும் 'ரேடியோ' வைச் சுற்றிவர ஆரம்பிக்கிறது. இப்படி எதிலும் அரை நிமிஷமேனும் நிலைத்து நிற்காமல் அலைந்து கொண்டிருக்கிறது. இந்தச் செயலை நாம் சிந்திப்ப தாகக் கூறுவது எங்ஙனம்? இதுதான் நாம் விழித் திருக்கும் நேரத்திற் பெரும் பகுதியான நேரத்தில் நடைபெறுவது.

ஆனல் விழித்திருக்கும் நேரம் முழுவதும் இப் படியே நடைபெறுவதில்லை. இடையிடையே நாம் ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி அறியவேண்டியதும் ஏதேனும் ஒரு காரியத்தைப்பற்றி முடிவுசெய்ய வேண்டியதும் அவசியமாகிறது. அப்பொழுது நாம் அவற்றில் நம்முடைய மனத்தை அந்த நேரத்தில் நிலைத்து நிற்கும்படி செய்யவே செய்கிறோம். ஆனல் நாம் சிந்திக்கும் முறையில் நம்முடைய மனம் அவற்றில் அதிக நேரம் ஆழ்ந்துவிட வேண்டிய அவசியமில்லை. நாம் அறியவேண்டிய பொருளைப்பற்றியோ முடிவு செய்யவேண்டிய காரியத்தைப் பற்றியோ ஆராயப் புகுந்தால் மட்டுமே நம்முடைய மனம் அதிக நேரம் அவற்றில் நிற்கவேண்டிய அவசியம் உண்டாகும். ஆனல் நாமோ ஆராயாமலே முடிவுசெய்துவிடுகிறோம்.

என்னிடம் என் குழந்தை வந்து, "அப்பா, நாளைக்குச் சூரிய கிரகணம் என்று சொல்லுகிறார் களே, அது என்ன? சூரியன் என்றால் தெரிகிறது.

கிரகணம் என்ருல் தெரியவில்லையே. அதைச் சொல்லு அப்பா'' என்று கேட்கிறது. எனக்கு அதைப்பற்றித் தெரியாது. இதுவரை அதைப்பற்றிச் சிந்தித்தது மில்லை. அப்படியானல் நான் செய்யவேண்டியது யாது? "அம்மா, அது எனக்குத் தெரியாது. அறிந்து சொல்கிறேன்'' என்று குழந்தையிடங் கூறிவிட்டு அதைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டியதே சரியான காரியம்.

ஆனல் நான் அப்படிச் செய்வதில்லை. குழந்தை வந்து கேட்டதும் நான் சிறுவனு யிருந்தபொழுது என் பாட்டி இது சம்பந்தமாய்ச் சொன்னது ஞாப கத்துக்கு வருகிறது. ஏதோ கரும்பாம்பு ஒன்று வானத்திலே மறைந்திருப்பதாயும் அதுவே சூரிய னைக் கவ்விக்கொண்டு சூரிய கிரகணத்தை உண் டாக்குவதாயும் என் பாட்டி சொல்லியிருக்கிருள். அதையே நான் என் குழந்தைக்கும் பரம்பரைச் சொத்தாக வழங்கிவிடுகிறேன்.

எனக்குச் சிரங்கு வந்திருக்கிறது. அதற்கான சவுக்காரம் வாங்க விரும்புகிறேன். ஆனல் அதைப் பற்றி நான் சிந்திப்பதில்லை. மருத்துவரிடம் போய் விசாரிப்பதுமில்லை. சோப்பு வாங்கவேண்டு மென்ற எண்ணம் என் மனதில் உதித்ததும் அதே சமயத் தில் என் நண்பர் "'கார்பாலிக் சோப்பு' சிரங்குக்கு நல்லது'' என்று கூறியது ஞாபகத்துக்கு வருகிறது. உடனே 'கார்பாலிக் சோப்பு' வாங்க முடிவுசெய்து விடுகிறேன். 'கார்பாலிக் சோப்' நல்லது என்று நண்பர் எந்தக் காரணத்தைக்கொண்டு சொன்னர்? அந்தச் சோப்பில் என்ன கலந்திருக்கிறது. எந்த

அளவில் என்பது அவருக்குத் தெரியும். அந்த அளவில் அது நலம்தரும் என்பதை எப்படி அறிவது? இதுபோன்ற கேள்விகளை ஆராய்ந்தாலன்றோ நாம் சிந்திப்பதாகக் கூறமுடியும்.

சிரங்குக்கான 'சோப்' வேண்டாம், தேய்த்துக் குளிப்பதற்கான சாதாரண 'சோப்'பே வாங்க விரும்புகிறேன் என்று வைத்துக்கொள்வோம். அப் பொழுதும் நான் அதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. பத்திரிகையில் சினிமா நட்சத்திரம் ஒன்றன் படமும் அவர் 'இதைத் தேய்த்ததால் என் மேனி மிருதுவா யும் மினுமினுப்பாயும் ஆகியிருக்கிறது' என்று கூறியதும் ஞாபகம் வருகிறது. உடனே அந்தச் 'சோப்'பை வாங்க முடிவு செய்துவிடுகிறேன். அந்த அம்மையார் அந்தச் 'சோப்'பை உபயோகித்தார் என்பது உண்மைதானு? அவர் அரிச்சந்திரனுடைய தங்கைதானு? அந்தச் 'சோப்' பினுல்தான் அவ ருடைய மேனி அழகுபெற்றதா? அவர் மேனி அழகு பெற்றது போல் என்னுடைய மேனியும் அழகு பெறும் என்பதற்கு என்ன நிச்சயம்? பெண்ணின் தேகம் மிருதுவானதுபோல் ஆணின் தேகமும் மிருது வாகுமா? என்பன போன்ற கேள்விகள் எழுந்து அவற்றிற்கு விடை கூற முயன்ருல்தானே நான் சிந்திப்பதாகக் கூற முடியும்.

ஆகவே நாம் எதையேனும் அறியவோ, முடிவு செய்யவோ வேண்டிய சந்தர்ப்பங்களிலுங் கூட நாம் பிறர் சொன்ன ஞாபகத்தை வைத்தும், பிறர் கூறும் யோசனைகளைக் கேட்டுமே முடிவு செய்கிருேமே யன்றி நாம், அவற்றைச் சரியா என்று சிந்தித்துப்

பார்ப்பதில்லை. அதனாலேயே பார்ட் என்னும் அமெரிக்கப் பேராசிரியர் சிந்தனை சக்தியை உபயோகிப்பது நாம் எண்ணும் அளவும் விரும்பும் அளவும் மனிதரிடையே காணப்பெறுவதில்லை என்று கூறுகிறார். இந்தக் கருத்தை மனதிற்கொண்டே நாம் சிந்திக்கும் அளவுதான் மனிதர் ஆவோம் என்று தைரியமாகக் கூறினேன். நமது தமிழ்மறை ஆசிரியரான திருவள்ளுவர் ஓர் அழகான உவமை கூறுகிறார்.

"பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்.'

உமியினுள்ளே அரிசி இருக்கிறது. அதை நெல் என்று கூறுகிறோம். ஆனால் அரிசியாகிய உள்ளீடு இல்லாத முழு உமியும் உண்டு. அது நெல் போலவே இருக்கும். ஆயினும் நாம் அதை நெல் என்று கூறுவதில்லை. பதடி என்றே கூறுகிறோம். அதுபோலவே ஒருவன் மனித உருவம் உடையவனாய் இருக்கலாம். ஆயினும் அவன் பயனில்லாத சொற்களையே விரும்புவானாகில் அவனை மனிதன் என்று கூறலாகாது; மனிதப் பதடி என்றே கூறவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். இதுபோல் நாம் மனிதனுடைய சிறப்பியல்பாகச் சிந்தனைசக்தியைப் பெற்றிருந்தும் அதைப் பயன்படுத்தாதிருக்கும் மனிதனையும் மக்கட் பதடி என்றே கூறலாம் அல்லவா?

## 5. சிந்தனைசக்திப் பயிற்சி - II

"கடவுள் சிருஷ்டியிலே சிறந்த பொருள் மனிதன். மனிதனிடம் உள்ளவைகளிற் சிறந்தது மனம்" என்று ஹேமில்டன் என்னும் ஆங்கில அறிஞர் கூறுகிறார். அவர் கூறுவதுடன், மனத்திற் காணப் படும் சக்திகளுள் முதன்மையானது சிந்தனைசக்தி என்று நாம் சேர்த்துக்கொள்ளலாம். அப்படி நாம் சேர்த்துக்கொள்வதற்குரிய காரணம் யாது எனில் இந்தச் சிந்தனைசக்தியின் உதவியைக்கொண்டே நாம் உலகத்திற் பல்வேறு சக்திகள் உள என்பதையும், அவை தொழில் செய்யும் முறைகளையும், அம் முறை களைத் துணையாகக்கொண்டு அவைகளைப் பயன் படுத்திக்கொள்ளும் விதங்களையும் அறிந்துகொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம் என்பதே. சிந்தனைசக்தி மட்டும் மனிதனுக்குக் கொடுக்கப்படாமல் இருந்தால் நாம் வேறு எந்த அற்ப சக்தியையுங்கூட அறிந்து கொண்டிருக்க மாட்டோம். சக்திகளை அறிவதும் அவைகளைப் பயன்படுத்துவதுமே நாகரீகத்தின் உற்பத்தியும் வளர்ச்சியும் ஆகும்.

இப்பொழுது எங்கு பார்த்தாலும் மின்சார சக்தியைப் பற்றிய பேச்சாக இருந்து வருகிறது. எடுத்த காரியத்திற்கெல்லாம் அதையே நாம் உப யோகித்து வருகிறோம். இவ்வளவு வியாபகமானதும் உபயோகமானதுமான இந்த அற்புத சக்தியைக் கண்டுபிடித்த வரலாறு யாது? இத்தாலிய நாட்டில்

ஏறக்குறைய 200 வருஷங்களுக்கு முன் கால்வனி என்று ஓர் அறிஞர் இருந்தார். ஒரு சமயம் அவருடைய மனைவியார் நோயாய்விடவே அவருக்குத் தவளைகளை வேகவைத்துச் சாறு இறக்கிக் கொடுக்க வேண்டுமென்று வைத்தியர் கூறினர். அந்தத் தேசத்திற் பெரிய தவளைகளுமுண்டு. தவளைகளை மக்கள் உண்ணுவதுமுண்டு. மனைவியார்க்குச் சாறு தயாரிப்பதற்காகக் கால்வனி ஒரு பெரிய தவளையைக் கொண்டுவந்து சமையலறையிலிருந்த இருப்புத் தகடு வேய்ந்த மேசையின்மீது வைத்து அறுத்துச் சுத்தப்படுத்திக்கொண் டிருந்தார். அதற்கு அநுகூலமாக அவர் அந்தத் தவளையின் கால்களை ஒரு மெல்லிய செப்புக் கம்பியால் பிணைத்திருந்தார். அவர் சுத்தப்படுத்திக்கொண்டிருந்தபொழுது கால்களைப் பிணைத்திருந்த செப்புக்கம்பி மேசையின் இரும்புத்தகட்டைத் தொட நேர்ந்தது. அப்பொழுது கால்களில் ஒரு அதிர்ச்சி, ஒரு நடுக்கம் காணப்பட்டது. அதைக் கால்வனி கண்டார். அப்படிச் செப்புக்கம்பி இரும்புத்தகட்டைத் தொடும் பொழுதெல்லாம் தவளையின் கால்களில் நடுக்கம் உண்டாவதைக் கவனித்தார். இப்படி நடுக்கம் உண்டாவதற்குக் காரணம் யாது என்று சிந்திக்க ஆரம்பித்தார். சாதாரண மக்களாயிருந்தால் இந்த நடுக்க நிகழ்ச்சி அவர்கள் கண்ணுக்குப் புலனாயிருக்கவே முடியாது. செப்புக்கம்பி இரும்புத் தகட்டைத் தொடுவதையுங் கால்களில் நடுக்கம் உண்டாவதையும் அவர்கள் பார்த்தாலும் அவை இரண்டுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டோ என்ற சந்தேகம் அவர்களுடைய மனத்தில் உண்டாக மாட்டாது.

அவர்கள் என்ன காரணமோ இப்படி நடுக்கமுண்டாகிறது என்று எண்ணிச் சும்மாயிருந்துவிடுவார்கள். அல்லது அம்மையாருக்கு நோயிருப்பதால் ஏதேனும் தேவதையின் கோளாறோ என்று எண்ணிப் பயப்பட ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் 'கால்வனி'யோ அவ்வாறு இருந்துவிடாமல் அதைப் பற்றிச் சிந்திக்கலானார். தவளையின் கால்களில் உண்டான அதிர்ச்சியைப் போன்ற அதிர்ச்சியை மின்சார யந்திரத்திடை அவர் கண்டிருந்தபடியால் தவளையின் கால்களில் உண்டாகிற அதிர்ச்சியும் மின்சார அதிர்ச்சியே யென்றும் அதற்கு வேண்டிய மின்சாரம் அந்தக் கால்களிலேயே உண்டாயிற்றென்றும் முடிவு செய்தார்.

அந்தத் தேசத்தில் வால்ட்டா என்று மற்றோர் அறிஞர் இருந்தார். அவர் இந்த விஷயத்தைக் கேட்டதும் மின்சார சக்தி தவளையின் கால்களில் உண்டாயிற்று என்று எப்படித் துணிந்து கூற முடியும்? செப்புக்கம்பியால் பிணைக்கப்படாமல் இருக்கும்பொழுது அவைகளில் மின்சார சக்தி உண்டாகவில்லையல்லவா? செப்புக்கம்பி இரும்புத் தகட்டில் தொடாதபொழுதும் மின்சார சக்தி உண்டாகவில்லையல்லவா? ஆதலால் தவளையின் கால்கள், செப்புக்கம்பி, இரும்புத்தகடு இம்மூன்றினிடையில் ஏதேனும் ஒருவித சம்பந்தம் இருக்க வேண்டும். அது காரணமாகவே மின்சார அதிர்ச்சி உண்டாயிருக்க வேண்டும் என்று எண்ணினார். அதன் உண்மையை அறியும்பொருட்டுத் தவளைகளைப் பிடித்துவந்து பரிசோதனைகள் செய்துவந்தார். மின்சார அதிர்ச்சி உண்டாவதற்குப் பிரதான

காரணம் செப்புக் கம்பியும் இரும்புத் தகடுமே யன்றித் தவளையின் கால்கள் அல்ல' என்று முடிவு செய்தார். அதன் பயனுக எழுந்ததே வொல்ட்டாவின் ஓட்டமின்சார கடியாகும்.

இங்கிலாந்து தேசத்தில் நியூட்டன் என்ற ஒரு பெரிய விஞ்ஞான மேதாவி இருந்தார். அவர் ஒருநாள் ஒரு தோட்டத்தில் உட்கார்ந்து இயற்கை அற்புதங்களைக் கண்டுகளித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது 'அப்பிள்' மரத்திலிருந்து ஒரு அப்பிள் பழம் கீழே விழுந்தது. அதைக் கண்டதும் அவர் இப்படிப் பழம் கீழே வந்து விழக் காரணம் என்ன? என்று சிந்திக்கலானுர். சாதாரண மக்கள் அதைப்பற்றிச் சிந்திக்கமாட்டார்கள். சிந்திக்க வேண்டிய விஷயம் அதில் என்ன இருக்கிறது; பழம் விழுவதற்குக் காரணம் பழம் பழுத்ததுதான்; பழம் பழுத்துவிட்டால் கீழே விழாமல் என்ன செய்யும்? என்று எண்ணிச் சும்மாயிருந்துவிடுவார்கள். அல்லது யாரேனும் சிந்திக்கவேண்டுமென்று சொன்னுல் இதைச் சொல்லி அவர்களை நகையாடுவார்கள். ஆனுல் நியூட்டனே அதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார். பழம் பழுத்துவிட்டதனுல் மரத்தில் இருந்துகொண்டிருக்க முடியாது. அதை விட்டுப் பிரிந்துவிடவேண்டியதுதான். ஆனுல் அதற்காக அது கீழே பூமியில் விழுவானேன்? மரத்தை விட்டுப் பிரிந்த இடத்திலேயே தங்கி நின்ருல் என்ன? அப்படி நிற்காவிட்டாலும் அது மேலே போகலாம் அல்லவா? கீழேதான் வரவேண்டுமென்ற கட்டாயம் என்ன? என்ற எண்ணங்கள் அவர் மனத்தில் உதித்தன. இப்படி ஆராய்ந்து

ஆராய்ந்து பழத்தைக் கீழே விழும்படி செய்ய வேண்டுமானாற் பூமியினிடம் ஒரு கவர்ச்சிச் சக்தி இருக்க வேண்டும் என்று முடிவுசெய்தார். இந்த முடிவே பௌதிக சாஸ்திர உண்மைகளுக்கெல்லாம் ஆதாரமான உண்மையாகும். இவ்விதம் நியூட்டன் சிந்தனாசக்தியை உபயோகிக்காமல் இருந்திருந்தால் பூமியின் கவர்ச்சிச் சக்தியையும் கண்டிருக்கமாட்டோம். அதன் பயனாக விளைந்துள்ள நாகரீக வளர்ச்சியையுங் கண்டிருக்கமாட்டோம்.

இங்கிலாந்து தேசத்தில் சென்ற நூற்றாண்டில் ஜென்னர் என்ற ஒரு வைத்தியர் இருந்தார். அவர் வைத்திய மாணவராக வைத்தியசாலையில் வேலைபார்த்துக்கொண்டிருந்தபொழுது ஒரு நாள் மருந்து வாங்க வந்தவர்களில் ஒருவர் ஒரு பெண்ணைப் பார்த்து "ஊரில் வைசூரி அதிகமாக நடமாடுகிறது அம்மா! அதனால் ஜாக்கிரதையாக நடந்துகொள்" என்று கூறினார். அப்பொழுது அந்தப் பெண் "எனக்கு வைசூரி நோய் வராது; எனக்கு முன்னமேயே மாட்டுவைசூரி நோய் வந்து போய்விட்டது" என்று பதில் கூறினாள். இந்த வார்த்தைகள் பக்கத்தில் இருந்தவர்களுடைய காதுகளில் விழுந்தபோதிலும் அவர்கள் எதுவுஞ் சிந்திக்கவில்லை. 'மாட்டு வைசூரி நோய் வந்தால் மனித வைசூரி நோய் வராது என்று கூறுவது நமது நாட்டிற் சகஜந்தானே' என்று எண்ணிச் சும்மா இருந்துவிட்டார்கள். இந்த விஷயத்தை இதற்கு முன் கேளாதவர்கள்கூட இதைப்பற்றிச் சிந்திக்காமல் இருந்துவிட்டார்கள். மற்ற வைத்திய மாணவர்களுங்கூட இந்த விஷயத்தில் தங்கள் கருத்தைச் செலுத்தவில்லை. ஜென்னர் மட்டும்தான் அந்தப்

பெண் கூறிய மொழிகள் காதில் விழுந்ததும், 'இந்தப் பெண் கூறுவது உண்மைதானு? மாட்டு வைசூரி வந்தால் மனித வைசூரி வராதா? அப்படியானுல் எல்லோருக்கும் முன்கூட்டி மாட்டு வைசூரியை வரும்படி செய்து மனித வைசூரியை வராமல் தடுத்து விடலாம் அல்லவா? அதற்குரிய முறைகள் யாவை?' என்று யோசிக்க ஆரம்பித்தார். பல பரிசோதனைகள் செய்தார். 18 வருட காலம் சிந்தித்துச் சிந்தித்துக் கடைசியாக இப்பொழுது வைசூரி வராமற் தடுப்ப தற்காக எல்லா நாடுகளிலுங் கையாளப்படும் அம்மைப்பால் குத்தும் முறையைக் கண்டுபிடித்தார். இதன் காரணமாக ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிர்ப் பாதுகாவல் பெற்று வருகிருர்கள்.

இவ்விதமாகச் சாதாரண மக்கள் அற்பமான விஷயங்கள் என்று சிந்திக்காமல் விட்டுவிடுகிற விஷயங்களைக் குறித்து அறிஞர்கள் ஆழ்ந்து சிந்தித்துச் சிந்தித்து அரிய பெரிய உண்மைகளைக் கண்டுபிடித்து மக்கள் எல்லோருக்கும் வழங்கி வருகிருர்கள். நாம் அவர்களைப்போல் அரிய பெரிய உண்மைகளைக் காணும்படியாகச் சிந்திக்க முடியாவிட்டாலும் நம்முடைய தினசரி வாழ்க்கையிற் காணப்படும் விஷயங்களையேனும் சிந்தித்தே காரியங்களைச் செய்யவேண்டுமல்லவா? சிந்தனுசக்தியை உபயோகிக்கும் விதத்தை அறிந்துகொண்டு அதைப் பக்தி சிரத்தையோடு பயின்று வருவோமானுல் அது முடியாத காரியமன்று. அந்தப்படி நாம் சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் நாம் இப்பொழுது தவருகச் செய்துவரும் பல காரியங்களைச் செய்யாமலிருந்து நல்ல பயன்களை அடைவோம்.

# 6. இலங்கை ஆற்றுப்படை

இந்தியாவினின்று இலங்கைக்கு முதன்முறையாக வருபவர்களில் அநேகர், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இதுதானு என்று கேட்பதுண்டு. இந்தியாவில் இராமாயணத்தைப்பற்றி அறியாதார் இல்லையென்றே சொல்லலாம். ஆதலின், அங்கிருந்து இலங்கைக்கு வருபவர்கள், பண்டிதராயினும் சரி, இலங்கையுடன் இராமாயணத்தையும் சேர்த்து நினைப்பது இயற்கையாகும்.

இராமாயணம் முழுவதும் கட்டுக்கதை என்ற கொள்கையுடையோரும் இக்காலத்தில் உளர். அவர்கள் இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையை ஒரு கற்பனை நாடாகக் கருதுவர். இராமாயணத்தைப் பற்றி ஜெர்மன் பாஷையில் ஓர் ஆரரய்ச்சி நூல் எழுதிய ஜக்கோபி (Jacobi) என்பவர், சீதை என்ற சொல் உழவுசால் எனப் பொருள்படுமாதலின், இராமாயணம் உழவுத்தொழிலை உருவகப்படுத்தற்கு எழுந்த காவியம் என்று கூறினர். வேறு சில ஆராய்ச்சியாளர்கள் வட. இந்தியாவிலிருந்த ஆரியர் விந்திய மலைக்குத் தெற்கே பரவிய வரலாற்றை இராமாயணம் விளக்குகிறதென்று கொள்வர்.

இராமாயணத்திற் சொல்லப்பட்ட செய்திகளில் ஓரளவு உண்மை யுண்டென்ற கொள்கையுடைய மேனுட் டறிஞர்களில் பார்ஜிட்டர் (Pargiter) ஒருவ

ராவர். அவர் இந்தியாவிற் பல ஆண்டுகளாக உத்தியோகத்தில் அமர்ந்து, வடமொழி நூல்களிலுள்ள வரலாற்றுப் பகுதிகளைத் துருவி ஆராய்ந்தவர். இராமபிரான் சஞ்சரித்ததாக இராமாயணம் கூறும் இடங்களைப் பற்றி அவர் எழுதிய கட்டுரையில், தென்னிந்தியாவுக்கு அணித்தாயுள்ள இலங்கையே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையாகும் என்று தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினர். இதுவே பல நூற்றுண்டுகளாக இந்தியாவிலுள்ள மக்கள் மனதிற் பதிந்த கொள்கையாக இருப்பினும், சில ஆராய்ச்சியாளர்கள் இதைப்பற்றி ஐயம் நிகழ்த்தி வேறு கொள்கைகளை வெளியிட்டுள்ளார்கள்.

இவ்வாராய்ச்சியாளர்களில் ஒருசாரார், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந்தியாவுக்கப்பால் வெகு தூரத்திலுள்ள ஜாவா, சுமாத்திரா பிரதேசம் என்பர். வேறு சிலர், சர்தார் கிபே (Kibe) என்பவரைப் பின்பற்றி, இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் இலங்கை இருந்ததாகக் கருதுவர். இந்த இரண்டு கொள்கைகளும் பொருத்தமற்றனவாகத் தோன்றுகின்றன. சாவகத்தீவு என்று தமிழிலக்கியம் கூறும் ஜாவா முற்காலத்தில் யவத்வீபம் என்று வடமொழியில் வழங்கியது. வான்மீகி முனிவர் கிஷ்கிந்தா காண்டத்தில் யவத்வீபத்தை இலங்கையினின்று வேறுபட்ட பிரதேசமாகவே காட்டியுள்ளார். சுக்கிரீவன் கிழக்குத் திசையிலுள்ள நாடுகளைக் கூறும்போது யவத்வீபத்தையும், தெற்குத் திசையிலுள்ள நாடுகளைக் கூறும்போது இலங்கையையுங் குறிப்பிடுவதினின்று, இலங்கை

யவத்வீபம் ஆகாதென்று வெள்ளிடைமலைபோல் விளங்கும். இனி, இலங்கை சமுத்ரமத்தியில் உள்ள தென்று வான்மீகி முனிவர் பன்முறையுங் கூறு கின்றார். சமுத்ரமில்லாத இடத்தில் இலங்கை இருந்ததாக சர்தார் கீபே எண்ணுவது வெறும் கற்பிதமாகும்.

இலங்கை என்று இப்பொழுது வழங்கப்படு கின்ற தீவே பல நூற்றாண்டுகளாக இப் பெயருடன் விளங்கிவருகின்றது. இற்றைக்கு ஆயிரத்தெண் ணூறு ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்ட சிலப்பதி காரத்தில் இந்நாடு இலங்கை என்றே வழங்கப்படு வது தமிழறிஞர் நன்கு தெரிந்ததாகும். அக்காலத் தில் இந் நாட்டை ஆண்ட மன்னனைக் 'கடல் சூழிலங்கைக் கயவாகு' என்று சிலப்பதிகாரம் கூறு கின்றது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டினின்று இந் நாட்டின் சரித்திரத்தைத் தொடர்ந்து கூறும் மஹா வம்சம் என்ற பழைய இதிகாசத்தில் இந்நாடு ஆதி முதல் அந்தம் வரையில் இலங்கை என்றே வழங் கப்படுகிறது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவினின்று இலங்கைக்கு வந்த விஜயன் என்ற அரசகுமாரன் அக்காலத்தில் இலங்கையி லிருந்த யக்ஷர்களுக்கு அரசியான குவேனியை மணந்த சரித்திரத்தை மஹாவம்சம் கூறுமிடத்து, இலங்கையின் மலைப்பிரதேசத்தில் யக்ஷர்களின் தலைநகரமாகிய இலங்காபுரி இருந்ததென்று குறிப் பிடுகின்றது. 'திரிகூடபர்வதம் என்கிற மலையின் உச்சியில் விளங்கிய இலங்காபுரியை இராவணன் தனது தலைநகரமாகக் கொண்டிருந்தான்' என்று

இராமாயணம் கூறுவது ஈண்டு நினைவுகொள்ளத் தக்கது.

திரிகூடபர்வதத்தைப்பற்றி, கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டில் வாழ்ந்த வீரபாண்டியன் குறிப்பிடும் ஒரு சாசனம் எமது ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவதாக உள்ளது. இச் சாசனம் சில ஆண்டுகளுக்கு முன் புதுக்கோட்டை சமஸ்தானத்திற் கிடைத்தது. பாண்டியப் பேரரசைத் தென்னிந்தியாவில் நாட்டிய ஜடா வர்மன் சுந்தர பாண்டியனது சகோதரனுகிய வீரபாண்டியன் இலங்கையை வென்றது சரித்திரப் பிரசித்தமான செய்தியாகும். இச் செய்தியை வீரபாண்டியன் தன் சாசனத்திற் கூறும்போது, தனது வெற்றிக்கு அடையாளமாகப் பாண்டிய அரசின் மீன் இலச்சினையை இலங்கையில் திருக்கோணமலையிலும், திரிகூட பர்வதத்திலும் பொறித்ததாக விவரிக்கின்ருன். இலங்கைக்கு அப்பாலுள்ள புதுக்கோட்டையிற் கிடைத்த இச் சாசனத்தின் ஒருபகுதி முற்றும் உண்மையான செய்தியாகும் என்பதற்கு இப்பொழுதும் இலங்கையிற் சான்று இருக்கின்றது. திருக்கோணமலையிலுள்ள கோட்டை வாசலில் இன்றும் இரட்டைமீன் இலச்சினை விளங்குவதைக் காணலாம். மூன்று நூற்ருண்டுகளுக்கு முன் போர்த்துக்கேயர் திருக்கோணமலையிலிருந்த சிவாலயத்தைத் தகர்த்தபோதிலும் பாண்டிய இலச்சினைக் கல்வெட்டு அவர்களது கொடிய செயலினின்று தப்பி, இன்றும் சிதைவுபடாமலிருப்பது பெரிய விந்தையே. வீரபாண்டியன் திருக்கோணமலையில் மீன் இலச்சினை பொறித்தது உண்மையாயின், அவன் சாசனத்திற் கூறியவாறு,

திரிகூடபர்வதத்திலும் அவ்விலச்சினையைப் பொறித்திருக்கவேண்டும். அவன் கூறும் திரிகூடபர்வதம் இலங்கையில் எப்பாகத்தில் உள்ளது? இதை யாம் அறிந்தால், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந் நாடுதான் என்று அறுதியிட்டுத் தீர்மானிக்கலாம்.

இந் நாட்டை இராமாயணத்துடன் சம்பந்தப்படுத்தும் பல ஐதிகங்கள் கர்ண பரம்பரையாக வழங்கிவருகின்றன. சீதாபிராட்டி சிறைவாசமிருந்த அசோகவனம் இந் நாட்டின் உயர்ந்த சிகரங்களில் ஒன்ருகிய ஹக்கலா என்ற இடத்தைச் சார்ந்ததென்று அங்குள்ள சாதாரணமக்கள் வாயினின்று இப்பொழுதுங் கேட்கலாம். இது சீதாதலாவா என்று கூறப்படும். இதற்கப்பால் சிறிது தூரத்திலுள்ள பாலுகமா என்ற இடம் அனுமாஞல் எரியுண்டதென்று சொல்லப்படுகின்றது. பாலுகமா என்பதன் பொருள் பாழடைந்த கிராமம் என்பதாம். இந்த இடத்திற் புற்பூண்டும் முளைப்பதில்லை. ஹக்கலாவிலிருந்து ஹப்புத்தளை என்ற இடத்திற்குப் போகிற வழியில் வெளிமட என்னும் அழகிய கிராமத்தின் பக்கத்தில் இராம லங்கா என்ற ஓரிடம் இருக்கின்றது. இங்கேதான் இராவணன் இறுதியாகப் போர்செய்து வீழ்ந்தான் என்றும், அது முதல் இவ்விடம் இராம லங்கா எனப் பெயர்பெற்றது என்றும் இங்குள்ள புத்த பிக்ஷுக்கள் ஒரு கர்ண பரம்பரையான ஐதிகத்தைக் கூறுகின்ருர்கள். இதற்கருகில், தூரும்வெலா பன்சாலா என்ற இடத்திற் சீதாபிராட்டி தன் கற்புநிலையினின்று தவறவில்லை என்று இராமபிரான் முன்னிலையிற் சத்தியஞ்

செய்ததாக ஓர் ஐதிகம் வழங்கி வந்ததென்று மேஜர் போர்ப்ஸ் (Major Forbes) 1840ஆம் ஆண்டில் வெளியிட்ட 'இலங்கையிற் பதினேராண்டுகள்' (Eleven Years in Ceylon) என்ற தமது புத்தகத்திற் கூறியுள்ளார். இவ் வாங்கிலேயப் படைவீரர் நூறு ஆண்டுகளுக்கு முன் அடர்ந்த காடுகள் செறிந் திருந்த இம் மலைப்பிரதேசத்திற் குதிரைமேற் சென்று பல இடங்களைப் பார்த்து ஆங்காங்கு இருந்த சிங்களமக்கள் வாயிலாக இராமாயண சம்பந்தமான பல ஐதிகங்களைக் கேட்டு, அவற்றைக் குறிப்பிட்டிருக்கின்றார். இம் மலைப்பிரதேசத்தில் இராவண எல்லா என்று ஒரு குன்று இருக்கின்றது. இதில் நீளமான ஒரு குகை உண்டு. இராவணன் தன் தலைநகரிலிருந்து அந்தரங்கமாக வெளிச்செல் வதற்கு இக் குகையை உபயோகித்து வந்தான் என்று சொல்லப்படுகின்றது.

மேற்கூறிய ஹக்கலா என்னும் இடத்தினின்று ஹப்புதலை என்னும் இடம் வரையிலுள்ள மலைப் பிரதேசம் எவருக்கும் வியப்பை உண்டாக்கக்கூடிய காட்சியைத் தருகின்றது. ஹக்கலாவினின்று பாலு கமாவுக்குச் சென்று, இம் மலைப்பிரதேசத்தின் உன் னதக் காட்சியை அங்கிருந்து பார்ப்பவர்களுக்கு, ஒருவித மருட்கை உணர்ச்சி உண்டாகிறது. மூன்று பக்கங்களையுடைய அகன்ற பிரதேசமாக இது காணப்படுகின்றது. மூன்று பக்கங்களிலும் செங்குத்தாக ஏறக்குறைய ஐயாயிரம் அடி உயர முள்ள மலைத்தொடர்கள் பயங்கரத் தோற்றத்துடன் எழுகின்றன. இவற்றிற்கிடையில் முப்பதுமைல் அளவு அகன்று ஒரு பதிந்த வள்ளம்போல் ஏறக்

குறையச் சமபூமியாக இப் பிரதேசம் விரிந்து கிடக்கின்றது. இதன் மத்தியில்தான் இராவணன் போர் செய்து வீழ்ந்த இடமெனப்படும் இராமலங்கா இருக்கின்றது; இதன் எல்லைப்புறத்தில்தான் எரியுண்டதாகச் சொல்லப்படும் பாலுகமா இருக்கின்றது. இராமாயணத்தில் இலங்கையைப் பற்றிய வர்ணனைகளைப் படித்தவர்களுக்கு இதுதான் திரிகூடபர்வதமென்று ஐயமின்றி உடனே தோன்றும்.

திரிகூட பர்வதத்தின் உச்சியில் இராவணனது தலைநகரமாகிய இலங்காபுரி விளங்கிற்றென்றும், இந் நகரம் நிலவில் ஆகாயத்தில் மிதப்பதுபோல் அநுமானுக்குத் தோன்றிற்றென்றும் இராமாயணம் கூறும். திரிகூடபர்வதத்தின் மூன்று பக்கங்களே இந் நகருக்கு இயற்கை மதில்களாக அமைந்திருந்தன. இக் காரணத்தால் இலங்காபுரியைப் பகைவர்கள் எவரும் அணுகமுடியாதென்று இராவணன் இறுமாந்திருந்தது வியப்பன்று. இப் பிரதேசத்தில் இப்பொழுதுள்ள பண்டாரவெலா, தீயத்தலாவா என்ற நகரங்களும் இரவில் ஆகாயத்தில் மிதப்பன போன்ற அழகிய காட்சியைத் தருகின்றன. இப் பிரதேசத்தின் தெற்கெல்லையாகிய ஹப்புத்தளையினின்று பகற்பொழுதில் தென்சமுத்திரத்தையும், அதன் பக்கத்தில் அம்பாந்தோட்டையிலுள்ள உப்பளத்தையும் பார்க்கலாம். இராமருடைய சேனை தென்சமுத்திரத்தின் கரையோரமாக வருவதை இராவணன் தன் தலைநகரிலிருந்து பார்த்தான் என்று இராமாயணம் கூறுவது இப் பிரதேசத்தின் அமைப்புக்குப் பொருத்தமாகவே உள்ளது. இராமருடைய சேனை தென்சமுத்திரக் கரையிலுள்ள

டொண்ட்ரா (தேவேந்திர நுவரா) என்ற இடத்திலிருந்து மலைப்பிரதேசத்திலுள்ள அலுத் நுவரா என்னும் இடத்துக்குத் தேவர்கள் விழாவைப்போல, சூரிய சந்திரக் கொடிகளுடன் அணிவகுத்துச் சென்றதென்று ஹெத்தார கோறளையைப் பற்றிய ஒரு பழைய சாசனங் கூறுகின்றது. இதனின்று இராமர் சேனை இலங்காபுரிக்குச் சென்ற வழியைப் பற்றி இங்கு ஓர் ஐதிகம் இருப்பது புலப்படும். மலைத் தொடர்களை மதில்களாகக்கொண்ட இலங்காபுரியை இவ் வழியினாலேதான் அணுகக்கூடு மென்பதை இராவணனது சகோதரனாகிய விபீஷணனிடமிருந்து உளவறிந்து இராமர் சேனை இவ் வழியாகச் சென்றதென்று யூகிக்கக் கிடக்கின்றது.

அநுமான் இலங்காபுரியை அடைந்து சீதையைக் கண்டு பின் இராமரிடந் திரும்புங் காலத்தில், அரிஷ்ட பர்வதத்திற் சிறிது நேரம் தங்கியதாக வான்மீகிமுனிவர் கூறுகின்றார். இப் பர்வதத்தைப் பற்றிய சான்று இந்நாட்டில் உள்ளது. அசோகன் மகனாகிய மஹிந்தன் தேவநம்பிய திஸ்ஸா என்ற இந்நாட்டு மன்னனைப் புத்த சமயத்துக்குத் திருப்பிய பின், பௌத்த வழிபாட்டிற்குரிய இடங்களாகிய விஹாரங்கள் அனுராதபுரத்திலும் அதன் பக்கத்திலும் கட்டப்பட்டன. அவ் விகாரங்களுள் ஒன்று அரிட்ட விஹாரம் என்று மகாவம்சம் கூறும். இவ் விகாரம் இதற்கருகிலுள்ள ரிட்டிகலா என்ற மலையின் பெயரைத் தழுவியதாகும். கலா என்ற சிங்களச்சொல் மலையைக் குறிக்கும். அரிஷ்டம் என்ற சொல் அரிட்டம் என்று மருவி, பின் முதல்

அகரம் காலகதியில் நழுவி, ரிட்டி என வந்ததென்று கூறப்படுகின்றது. இம்மலை இராமாயணத்துடன் சம்பந்தப்பட்டது என்பதை இங்குள்ளவர் அறியாராயினும், இராமாயணம் கூறும் இலங்கை இந்நாடு தான் என்று நிச்சயித்தற்கு இம் மலையின் பெயர் ஓர் அரிய சான்ருக இருக்கின்றது.

இராவணன் வாழ்ந்த இடம் பாண்டிய நாட்டிற்கு எதிரில் இருந்ததாகச் சுக்கிரீவன் தன் சேனை வீரர்களுக்குக் குறிப்பிட்டதை வான்மீகி ராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் 41ஆம் சர்க்கத்திற் காணலாம். அப்பகுதியின் மொழிபெயர்ப்பை இங்குத் தருகின்ருேம்: "அகஸ்திய முனிவரின் அநுக்கிரகம் பெற்று......மஹாநதியாகிய தாம்ரபர்ணியைக் கடப்பீர்களாக. ......... அங்கிருந்து நடப்பீர்களாயின், பாண்டிய நகர துவாரத்தில் சுவர்ணமயமாகி முத்துக்களால் அலங்காரஞ் செய்யப்பெற்று நன்கு நிர்மிக்கப்பட்ட பொற்கவாடத்தைக் காண்பீர்கள். அங்கிருந்து சமுத்ரதீரஞ் சென்று சீதையைத் தேடும்பொருட்டு சமுத்ரத்தைத் தாண்டும் விஷயத்தை ஆலோசித்து நிச்சயித்துக்கொள்வீர்களாக. அங்கு சமுத்ரத்தினிடையில் அகஸ்தியரால் வைக்கப்பட்ட மகேந்திரம் என்னும் பர்வதம் இருக்கின்றது. ............ அந்தச் சமுத்திர மத்தியில் இக்கரையில் நூறு யோசனை விஸ்தீர்ண முடையதும் மனிதர்களுக்குப் போகமுடியாமல் மிக்க விளக்கமுற்றதுமாகிய ஒரு தீவு இருக்கின்றது. அந்தத் தீவு முழுமையுஞ் சீதாதேவியைத் தேடுங்கள். அந்தப் பிரதேசமே துர்ப்புத்தியும் தேவேந்திரனை நிகர்த்த

தேஜஸுடையவனும் இராக்ஷதர்களுக்குப் பிரபுவும் நம்மால் வதைக்கத் தகுந்தவனுமாகிய இராவண னுக்கு வாசஸ்தானம்.” இங்குப் பாண்டியருக்குப் பழைய தலைநகரமாயிருந்த கபாடபுரமும் அதனோடு தொடர்புற்ற மகேந்திர மலையும் குறிப்பிடப்பட் டுள்ளன. வான்மீகிமுனிவர் இந்தச் சர்க்கத்திற் கூறியதையே தழுவிக் கம்பநாடரும்,

தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன்
தமிழ்ச்சங்கஞ் சேர்கிற்பீரேல்
என்றுமவ னுறைவிடமா மாதலினு
னம்மலையை யிறைஞ்சியேகிப்
பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநையெனுந்
திருநதியின் பொழியநாகக்
கன்றுவளர் தடஞ்சாரல் மகேந்திரமா
நெடுவரையுங் கடலுங்காண்டிர்

என்று செய்யுளியற்றியுள்ளார். கம்பர் காலத்துக்கு ஏறக்குறைய நூறுண்டுகளுக்குமுன் வடமொழியில் இயற்றப்பட்ட சம்புராமாயணம் இலங்கையை ‘சிம்ஹளத்வீபம்’ என்றே வெளிப்படையாகக் கூறு கின்றது.

தமிழ்நாட்டில் மிகப் பழைய காலந் தொட்டு இராமர் சேனை பாண்டிநாட்டைச் சார்ந்த சேதுவழி யாகத்தான் சென்றது என்ற கொள்கை இருந்து வருதற்கு ஒருசான்று சங்க இலக்கியமாகிய அக நானூற்றில் 70ஆம் செய்யுளிற் காணப்படுகின்றது.

அது வருமாறு:

வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறை கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்கல் ஊரே.

இராமர் பாண்டிநாட்டைச் சார்ந்த தனுஷ் கோடியில் ஓர் ஆலமரத்தின் கீழிருந்து இரகசிய ஆலோசனை நடத்திய செய்தி இங்குக் கூறப்படுகின்றது. இச் செய்யுள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள இராமேசுவரத்தில் இராமர், சிவபெருமானை வழிபட்டார் என்ற ஐதிகம் பன்னெடுங் காலமாகப் பரதகண்டம் முற்றிலும் வழங்கிவருகின்றது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த சுவாமிகள் இந்த ஐதிகத்தை இராமேசுவரப் பதிகத்திற் குறிப்பிட்டுள்ளார்கள்.

'சேது' என்ற பெயர் பிரசித்தமானது. இச் சொல் அணையைக் குறிக்கும். தனுஷ்கோடியினின்று இராமரின் சேனை கடலைக் கடந்து இலங்கை செல்வதற்கு அணை கட்டியதாகச் சொல்லப்படுவதால், தனுஷ்கோடிக்கு இப் பெயர் மிகப் பழைய காலந்தொட்டு வழங்கி வருகின்றது. இவ் வணைக்குச் சான்றாக இப்பொழுதும் இவ்விடத்தினின்று இலங்கையைச் சேர்ந்த மன்னார்த் தீவுவரையில், மணல் திட்டுகளால் ஆகிய ஒரு தொடர் முப்பதுமைல் தூரம் கடலிற் காணப்படுகின்றது. இதை ஆங்கிலத்தில்-

ஆதாம் அணை (Adam's Bridge) என்று கூறுவர். இவ் வணையைப்பற்றி 'என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' (Encyclopaedia Britannica) என்ற பல்பொருட் பேரகராதியிற் சில விவரங்களை அறியலாம். சில திட்டுகள் கடல் மட்டத்துக்கு மேலும், சில திட்டுகள் மூன்று அல்லது நாலடி ஆழத்துக்குக் கடலுள் அமிழ்ந்தும் இருக்கின்றன. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இத் திட்டுகள் இடையீடின்றி ஒரே தொடராக இருந்தன என்றும், பின்னர் ஒரு கடுமையான புயல் வீசியபோது இவற்றில் இடையிடையே பிளவு ஏற்பட்டதென்றும் தெரியவருகின்றது. இயற்கையிலேயே அணைபோல் இருந்த இம் மணல் திட்டுத் தொடரை ஒரு சேனை கடக்கத்தக்கதாக இராமரின் படைவீரர்கள் செய்தனரென்று கொள்ளுதல் தகும். இவ் வணை நூறுயோசனை தூரமிருந்தது என்று வான்மீகி முனிவர் கூறுவதைக் கணக்கிட்டு இது நானூறு மைலுக்கு மேற்பட்டதாகையால், இப்பொழுது இலங்கையென்று வழங்கப்படும் நாட்டிற்கு இக் கணக்குப் பொருந்தாது என்று வாதிப்பார் உளர். வான்மீகி வேறுபல சந்தர்ப்பங்களிலும் காவியரீதியில் நூறுயோசனை என்ற பிரயோகத்தை அதிசயோத்தி அலங்காரமாய்ப் பன்முறை உபயோகிக்கின்றபடியால், இங்கு நூறு யோசனையென்பது அதிக நீளத்தைக் குறிக்குமென்றே கொள்ள வேண்டும்.

மேற்கூறிய மணல் திட்டுகள் ஆரம்பிக்கும் இடமாகிய சேதுக் கரையைத்தான் வான்மீகி முனிவர் மஹேந்திரதுவாரம் எனக் கூறினரென்று யூகிக்க இடமுண்டு. மஹேந்திரமலை சேது நாட்டினின்று

திருச்செந்தூர், கன்னியாகுமரி என்னும் இடங்கள் வரையில் பூமியில் அழுந்தியதாகச் செல்லும் கந்த மாதனம் என்கின்ற மலைத்தொடரைக் குறிக்கும் எனக் கொள்வதற்கு ஆதாரமிருக்கிறது. கன்னியா குமரியின் பக்கத்தில் மகேந்திரம் என்ற பெய ருடன் ஒரு மலை இப்பொழுதும் உளது. சேது நாட்டிலுள்ள திருவுத்தரகோசமங்கையில் ஆகமம் வெளிப்படுத்தப்பட்டது என்ற திருவிளையாடல் ஐதி கத்தை மாணிக்கவாசகசுவாமிகள்,

> மன்னு மாமலை மகேந்திர மதனில்
> சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்

என்று குறிப்பிடுவதால், மகேந்திரம் சேது நாட்டில் உள்ளது என்பது தெளிவாகின்றது.

இதுகாறுங் காட்டிய ஏதுக்களால், இப்பொழுது இலங்கை என்று வழங்கும் இந் நாடே இராமா யணத்திற் கூறப்பட்ட இலங்கை எனத் தீர்மானிக்க லாம். கிரேக்க பாஷையில் கிறீஸ்து சகாப்தத்திற்குச் சில நூற்றுண்டுகளுக்குமுன், ஹோமர் (Homer) என்ற மகாகவி இயற்றிய இலியடு (Iliad) என்னும் காவியத்திற் கூறப்பட்ட டிராய் (Troy) என்ற நகரம் அக் கவிஞரின் கற்பனையே அன்றி உண்மையில் இருந்ததில்லை எனப் பல மேதாவிகள் கருதியதுண்டு. ஆனால், சில ஆண்டுகளுக்குமுன், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் (Archaeologists) டிராய் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அந் நகரத்தின் அமைப்பை நிரூபித்தனர். அதுபோல, இலங்காபுரி என்று இரா மாயணத்திற் கூறப்பட்ட தலைநகரம் இந்நாட்டிற் பூர்வீக காலத்தில் இருந்ததென்று வருங்காலத்தில் நிரூபிக்கப்படும் என்று நம்புகின்றோம்.

# 7. எனது யப்பான் யாத்திரை

மகாத்மா காந்தி அடிகளும் அவரது வெள்ளாடும் மேற்கே வட்டமேசை மகாநாட்டிற்குச் சென்ற 'இராசபுதனம்' என்னும் கப்பலிலேயே நானும் என் நண்பர்களும் கிழக்கே சென்றோம். தொக்கியோ நகரில் 1938ஆம் ஆண்டு கூடிய இம் மகாநாட்டிற்குச் சர்வதேச கல்வி மகாநாடு என்று பெயர். இது இரண்டாண்டுக் கொருமுறை கூடும். இதற்கு முன் நடைபெற்றது ஏழாவது மகாநாடு. இது இங்கிலாந்திலே ஆக்ஸ்ட்போர்ட் நகரத்தில் கூடியது.

இலங்கையிலிருந்து ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளாக அறுவர் யப்பானுக்குச் சென்றார்கள். அவர்கள், திருவாளர்கள்: பிலிப்ஸ், வீரமந்திரி, நேசையா, பேரின்பநாயகன், வன்னியசிங்கம், திருவளர்செல்வி இராணி பவுல் என்போர். இவ் வறுவரில் நால்வர் யாழ்ப்பாணத்தவர்.

எம்மிற் சிலருக்கு இதே முதல்முதற் கடற் பிரயாணம். எல்லோரும் யப்பானுக்கு முதற் பிரயாணம். யப்பான் கீழைத் தேசத்தவரின் சுயமரியாதைக்கும், வீரத்திற்கும், முன்னேற்றத்திற்கும் ஓர் இருப்பிடமாயும் அறிகுறியாயும் இருந்த நாடு. ஆகையால் எமக்குப் பிரயாணத்தைப்பற்றி எத்துணை உற்சாகமும் ஆரவாரமும் இருந்திருக்குமென்று நாம் சொல்லாமலே விளங்கும்.

நாங்கள் யொக்ககாமாவிற்குப் போகும் வரையிலும் எங்கள் கப்பல் தங்கின ஒவ்வொரு துறைமுகத்திலும் எம் யாழ்ப்பாண மக்களை நாம் கண்ணுரக் கண்டு அவருடன் எம்மூர்ப் புதினங்களைப்பற்றிக் கலந்து பேசியதை இன்று நினைத்தாலும் எம் உரோமம் சிலிர்க்கும். அவருக்கும் எமக்கும் எம் இனிய தமிழ் மொழியில் வார்த்தையாடவிருந்த ஆவலை வர்ணிக்க எனக்கு ஆற்றல் இல்லை. பினுங்கு, சிங்கப்பூரிலே எம்மவரை நாம் கண்டதும் அவர் எம்மை வரவேற்று எமக்கு வேண்டிய செய்ததும் நூதனமன்று.

நாங்கள் ஹொங்கொங்கிலே இறங்கி எங்கள் பாட்டிலே ஊரைப் பார்த்துவரும்போது எங்களிற் சிலர் அணிந்திருந்த நவீன உடையின் பெறுபேருய் அநேகர் எம்மைச் சூழ்ந்து எம்மைப் பார்த்துக் கொண்டு நின்றனர். நாங்கள் இந்த ஊரில் எங்கு சென்றுலும் இம்மாதிரியே நடந்தது. நாங்கள் அங்கிறங்கின நாட் பின்னேரம் எம்மைச் சுற்றி அநேகர் நின்று எங்களைப் பார்த்தனர். அப்போது எங்கள் நிறமுடையவரும், ஐரோப்பிய ஆடை அணிந்தவருமான ஒருவர் எங்களை அணுகி என்னை நோக்கி "ஐயா! எந்த ஊரோ?" என்று கேட்டார். இவ்வளவு தூரமான ஊரிலே ஒருவர் வந்து எம்முடன் தமிழிற் பேசியதைக் கேட்டு நாம் பிரமித்து விட்டோம். மறுமொழி கூற நா எழவில்லை. சிறிது நேரம் ஒருவரை ஒருவர் உற்று நோக்கினேம். பின் நாம் யாழ்ப்பாணத்தவரென்று சொன்னேம். அப்போது அவர் "நானும் இலங்கையர்தான்.

நான் காலியிலுள்ள முஸ்லீம் ஆள். நகை வியா பாரத்திற்காக இங்குவந்து இருபது வருஷமாயிற்று" என்று தம்மைப்பற்றிய விஷயங்களைக் கூறினர்.

மேலும் "ஐயா, உங்களூரவர் ஒருவர் இங்கே வைத்தியக் கல்லூரியிற் படிக்கிறர். இதோ உங் களை அவரிடம் சேர்க்கிறேன்" என்று ஒரு மோட் டார் இரதம் ஒழுங்குசெய்து எங்களை அம்பலவாணர் என்னும் யாழ்ப்பாண வாலிபரிடம் கொண்டுபோய் விட்டார். இவர் மலாய் நாட்டிலிருந்து ஹொங் கொங்குக்குச் சென்றிருந்தார். இவரைச் சந்தித் ததும் எம்மைக் கண்டது தமக்குப் பேருவகை என்று சொன்னர். இவரது சொந்த ஊர் சுழி புரம். இதற்குப் பின் நாம் ஹொங்கொங்கில் இருந்த நேரத்தில் இவ் விருவரும் எமக்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்தார்கள். இவர்களைவிட, உவின்சர் என்னும் பெயருடைய இரு சகோதரர் அங்கே நகை வியாபாரம் நடத்துகின்றனர். அவர் கள் சிங்களர்கள். அவர்களும் எம்மை நன்கு உபசரித்து எம்மைப் பெரிதும் மகிழ்வித்தனர்.

இதுபோலவே, ஷங்காயிலும் பொங்குநீர்க் கிணற்று வீதி (Bubbling Well Road) என்ற பிரபல வீதி மார்க்கமாக மோட்டார் ரதத்திற் போய்க் கொண்டிருக்கும்போது, 'இலங்கை இரத்தினங்கள்' என்ற விலாசம் எங்களுக்குத் தென்பட்டது. உடனே இரதத்தை நிறுத்தி உள்ளே போய் விசாரித்தோம். அங்கிருந்த சீன வாலிபக் கணக்கப்பிள்ளையிடம் அவ் வியாபார நிலையத்துக்கு முதலாளி யாரென்று வினவினேம். அவர் வேலுப்பிள்ளை என்று மறு

மொழி சொன்னார். வேலுப்பிள்ளை! வேலுப்பிள்ளையைக் கட்டாயம் நாம் பார்க்கவேண்டு மென்றோம். வேலுப்பிள்ளை தோற்றச் சிறிது நேரஞ் சென்றது. அவரைக் காத்துக்கொண்டு நிற்கையில் இந்த வேலுப்பிள்ளை யாராயிருக்கக்கூடு மென்று எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. ஒருவர் இந்த வேலுப்பிள்ளை காரைதீவிலிருந்து வந்திருக்கவேண்டு மென்று நிரூபித்தார். இன்னொருவர் அவர் சொந்த ஊர் உடுவில் என்றார். இப்படி வாக்குவாதம் நடக்கும்போதே வேலுப்பிள்ளையும் வந்துவிட்டார். ஆனால் அவர் பெயரோ வேலுப்பிள்ளையல்ல; அவர் யாழ்ப்பாணத்தவருமல்லர்; தமிழருமல்லர். அவர் கண்டியிலிருந்து வியாபார நோக்கமாய் அங்கு சென்றிருந்த வீரப்புலி என்னும் சிங்களவர். உண்மை என்னவென்றால் மங்கோலியவருக்கத்தைச் சேர்ந்த சீனர் யப்பானியர்களுக்கு 'ரகர' 'றகர'ங்களை உச்சரிப்பது முடியாததொன்று. அவ்வொலிகளை அவர்கள் எப்பொழுதும் லகரமாகத் திரித்தே உச்சரிப்பார்கள்.

எம்மவரிற் சிலரும், இதேமாதிரி உச்சரிப்பது கவனிக்கற்பாலது. சண்டிருப்பாயைச் சண்டிலிப்பாயென்றும், இரத்தத்தை இலத்த மென்றும் உச்சரிப்பது காணற்பாலது. ஆகையால் அவர் 'வீரப்புலி'யை 'வீலப்புலி' என்று உச்சரிக்க எமக்கு அது வேலுப்பிள்ளை என்று கேட்டது. திரு. வீரப்புலி எம்மைக் கண்டதும் ஆர்வத்துடன் வரவேற்று, யாழ்ப்பாணத்தவரும் ஒருவர் அவ்விடம் இருக்கிறாரென்று எமக்கறிவித்தார். அவர் பெயர் சிங்கமென்றுஞ் சொன்னார். அவர் தெல்லிப்பழை

யைச் சார்ந்த பன்னாலையைத் தம் சொந்த ஊராக உடையவர். சுகநோக்கமாய் அங்கு சென்றிருக்கிறார். இவ்விருவரும் எங்களுக்கு ஒரு விருந்தளித்து எங்களை அழைத்துச் சென்று முக்கிய காட்சிகள் எல்லாவற்றையுங் காட்டினர்.

யப்பான் தேசத்தின் தென்பாகத்திலிருக்கும் முக்கிய துறைமுகம் கோபை. இலங்கை, இந்தியா. மலாய்நாடு முதலிய இடங்களுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களெல்லாம் இங்கிருந்தே ஏற்றுமதியாகும். அவ்வூரில் யாழ்ப்பாணத்தவர் ஒருவர் தமது மனைவியுடன் வசித்து வருகிறாரெனவும் வர்த்தக முயற்சியில் ஈடுபட்டிருக்கிறாரெனவும் நாம் அறிந்திருந்தோம். அவருக்கு எமது பிரயாணத்தைப்பற்றிச் செய்தி அறிவிக்கப் பட்டிருந்தது. எம்மை வரவேற்க அவர் கப்பலுக்கு வந்தார். அவருடன் அவர் இல்லம் செல்லப் புறப்பட்டோம்.

நாங்கள் கோபை நகரில் இறங்கினபோது இரவு 8 மணியிருக்கும். அன்று அரசினர் கட்டளைப்படி அந்நகரில் விமானங்கள் ஆகாயத்தில் நின்று குண்டுகள் போடும்போது அநுசரிக்க வேண்டிய முறைகள் பயிற்றுவதற்காகக் குறிக்கப்பட்டிருந்தது. இற்றைக்கு முன் போர்க்களத்தில் ஆயுதபாணிகளாய் அணிவகுத்து நிற்கும் வீரருக்கிடையே தான் அமர் நடந்தது. இப்போது ஆயுதபாணி நிராயுதபாணி என்ற வேற்றுமை அற்றுப் போயிற்று. நிராயுதபாணிகள்மீது ஆயுதப் பிரயோகஞ் செய்வது அநாகரிகம் என்ற கொள்கை மாறிவிட்டது. ஆகையால் ஓர் ஊரிலுள்ள ஒவ்

வொருவரும் தாக்கப்படும் சந்தர்ப்பம் நேரிடும். நேரிடும்போது தேவையான பரிகரண முறைகளைக் கையாளப் பயிற்றுவது அரசினர் கடனென்று ஒவ்வொரு அரசினருந் தங் குடிகளுக்கு வேண்டிய பயிற்சி ஒழுங்குகள் செய்கிறார்கள். குண்டுமாரி பொழியும்போது ஒழுகவேண்டிய ஒழுங்குகள் எல்லா நாடுகளிலும் பயிற்றப்படுகின்றன. அன்று யப்பானில் அப்படிப்பட்ட ஒழுங்குகள் கற்பிக்கப்படும் நாளாயிருந்தது. வீதிகளில் வெளிச்சமொன்றும் எரியவில்லை. மோட்டார் இரதங்களின் பக்க வெளிச்சங்கள்தான் எரிக்க உத்தரவு இருந்தது. எந்த வீட்டிலும் ஒரு வெளிச்சந்தானும் எரிக்கக்கூடாதென்று கட்டளை செய்யப்பட்டிருந்தது. கோயையிலே எங்களை வரவேற்ற யாழ்ப்பாண வாசியான திரு. நடராசா அவர்களது இல்லத்திற்கும் துறைமுகத்திற்கும் இடையில் 6 அல்லது 7 மைல் தூரமிருக்கும். நாங்கள் ஒரு மோட்டார் இரதத்தில் அவர் வீட்டிற்குச் செல்லும்போது ஒரு பொலீஸ்காரன் வந்து எங்களை வழிமறித்துக் காரிலிருந்து எங்களை இறங்கும்படி கட்டளையிட்டான். எங்களுடைய நல்லகாலம் இது திரு. நடராசா வீட்டுக்குக் கிட்டத்தான் நடைபெற்றது. பின்னர் நாங்கள் எல்லோரும் நடந்து அவர் வீட்டுக்குப் போனோம். அவரது மனைவியார் எங்களுக்காக ஆக்கிவைத்திருந்த யாழ்ப்பாணச் சோறு கறியைக் கண்ணாரக் கண்டு இன்புற வெளிச்சமில்லை. திரைச்சீலைகளை நன்றாக இழுத்துவிட்டு யன்னல் கதவு எல்லாவற்றையுங் கெட்டியாய்ப் பூட்டியபின் ஒரு சிறு மெழுகுதிரியைக் கொழுத்தி அந்த வெளிச்சத்திலேயே நாம் சாப்பிட்டோம். பல நாட்களாய்ச்

சுவையற்ற மேலைநாட்டுணவை உட்கொண்ட நாங்கள் அன்றிரவு எமது தமிழுணவைக் கண்டதும் எமக்குண்டான இன்பம் சொல்லிமுடியாது. மாங்காய் ஊறுகாய், வெந்தயக்குழம்பு ஆகிய யாழ்ப்பாண உணவுப் பொருள்களை நாம் முன்னொருபோதும் அவ்வளவு சுவையுள்ளன என்று மதித்ததில்லை. அன்று அவர்கள் ஆக்கின சோற்றில் ஒரு அவிழ் தானும் மிஞ்சவில்லை எனல் மிகையாகாது.

இனி, யப்பானில் எங்களுடைய அனுபவங்கள் சிலவற்றைப்பற்றிச் சொல்லுமுன் கப்பலிலே சந்தித்த சிலரைப்பற்றிச் சிறிது சொல்லலாமென்று நினைக்கிறேன். ஹொங்கொங்கிலே பிலிப்பைன் தீவுகளிலிருந்து கல்வி மகாநாட்டிற்குச் செல்லும் ஐம்பது பிரதிநிதிகள் எங்கள் கப்பலில் ஏறினார்கள்.

அன்றுதொட்டு எங்கள் கப்பலே கல்வி மகாநாடாய் மாறிவிட்டது. எல்லாம் கல்வி மயந்தான். எந்தநேரம் பார்த்தாலும் எங்கே பார்த்தாலும் கல்வியைப்பற்றிய பேச்சுத்தான்.

இராச் சாப்பாட்டிற்குப் பிறகு பொழுதுபோக்குக்காக ஆடல் பாடல்கள் கப்பல்களில் நடப்பது எல்லோரும் அறிந்ததொன்றே. இந்தப் பிலிப்பீனியர் கப்பலுக்கு வரமுன் அங்கே நடந்த ஆடல் பாடல் எல்லாம் மேலை நாட்டனவே. இவர்கள் வந்ததும், இவர்களின் பெண்கள் வண்ணத்திப் பூச்சிகளுடைய சட்டை போன்ற தங்கள் நாட்டு உடைகளுடன் செய்த நடனங்கள், எல்லோர் மனதையுங் கொள்ளை கொண்டன. எங்கள் நாட்டில் வழங்கும் கோலாட்டம் போன்ற ஒரு நடனம் யாழ்ப்பாணத்தவராகிய எமக்

கின்பம் பயந்தது. நம்மூர்ச் சிறுவர் கோல்களைக் கொண்டு தாளம்போடுவதுபோல், அவர்கள் இதற்கென்று கொண்டுவந்த சிரட்டைகளை ஒன்ருேடொன்று அடித்துத் தாளம்போட்டார்கள். நடிகர்களுடைய ஆடல் பாடல் எல்லாம் எமக்கு எம்மூர்க் கோலாட்டத்தையே நினைவுக்குக் கொண்டுவந்தன.

யப்பானிலே நடந்த கல்வி மகாநாட்டின் நடவடிக்கைகளைப்பற்றி இக் கட்டுரையில் அதிகம் சொல்லுவது என் நோக்கமல்ல. யப்பானில் நாம் பெற்ற அனுபவங்கள் சிலவற்றைப் பற்றிச் சிறிது சொல்வதே எனது எண்ணம்.

யப்பானியர் பிறரை மரியாதைபண்ணுவதிற் சிறப்புற்றவர் என்பது உலகப் பிரசித்தம். உலகத்திலே பல ஊர்களிலிருந்து வந்த பிரதிநிதிகளெல்லோரும் ஒரு மனதுடன் ஒத்துக்கொண்ட ஒருண்மை என்னவென்ருல், அது யப்பானியர் எவ்வளவு நுட்பமாய் இப் பிரதிநிதிகளுக்கு என்னென்ன தேவை வருமென்பதை முன்னமே உணர்ந்து வேண்டிய ஒழுங்குகளை ஏற்கனவே செய்து வைத்ததுதான். யப்பானைப்பற்றி அறிய விரும்பியவர்களுக்கு வேண்டிய நூல்கள் உதவப்பெற்றன. கடைகளிலே பொருள் வாங்குவதற்கோ அல்லது காட்சிகள் பார்ப்பதற்குப் போக விரும்பினவர்களுக்கோ அல்லது என்ன நியாயம்பற்றியோ அவர்களுடைய உதவியை விரும்பினவர்களுக்கெல்லாம் வழிகாட்டிகள் எவ்விடத்திலும் பெறக்கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

யப்பானிலே ஆங்கிலங் கற்பிக்கப்படுகிறதென்று நாங்களுங் கேள்விப்பட்டிருந்தோம். மொங்கோலிய

வருக்கத்தைச் சேர்ந்த மக்கள் பொதுவாகப் பிற மொழிகளைக் கற்கும் ஆற்றல் மிகக் குறைந்தவர்கள். அதிலும் யப்பானிய ரென்றால் மிகமிகக் குறைந் தவர்களென்பது உலகத்தின் எண்ணம். மேலும் வயிற்றுப்பாட்டுக்கு உழைப்பதற்கும் புகழ் பெறுவ தற்கும் எம் நாட்டவர்க்கு ஆங்கிலப் பயிற்சி இன்றி யமையாத ஒன்று. யப்பானியருக்கு அப்படியல்ல. ஆகையால், அங்கே ஆங்கிலம் பேசத் தெரிந்தவர் கள் மிகச் சிலரே. அவர்களும் அதிக கஷ்டப் பட்டே சொற்களை உச்சரிப்பார்கள். பிற நாடுகளி லிருந்து அங்கே செல்பவர்களுக்கு உதவி புரியும்படி தெரிந்தெடுக்கப்பட்டவர்களி லநேகருக்கே ஆங்கிலம் பேசுவதென்றால் மிகக் கஷ்டம். என்றாலும் தங் களா லியன்றமட்டும் எங்கள் கருத்தை அவர்கள் மட்டிட்டுத் தம்மாற் கூடிய அளவு எங்களுக்கு உதவி புரிந்தார்கள். கியோற்றோ என்ற யப்பானியருடைய பழைய இராசதானிக்கு நாங்கள் சென்றிருந்தோம். யப்பானிய சத்திரமொன்றில் இரண்டு நாட் தங்கி அந்த அனுபவத்தையும் பார்ப்போமென் றெண்ணி ஒரு சத்திரத்தில் தங்கினோம். நாங்கள் அங்கு செல்லு முன்னரே சத்திரகாரருக்கு ஆங்கிலம் தெரியுமோ என்று உசாவினோம். நன்றாகத் தெரியுமென்று கூறினார்கள். நாங்கள் நம்பிப் போனோம். அவர்க ளிடம் பிரயாணிகளுக்குப் பொதுவாகத் தேவை வரும் பொருள்களுடைய ஆங்கிலப் பெயர்களை யப் பானிய எழுத்துக்களில் எழுதிய ஒரு புஸ்தக மிருந் தது. நாங்கள் எதைச் சொன்னாலும் உடனே சத்திர காரன் ஓடிப்போய்ப் புத்தகத்தைக் கொண்டுவந்து ஒற்றைகளைப் புரட்டுவார். புரட்டிவிட்டு ஒன்றும்

விளங்காது நின்று சைகை காட்டுவர். நாமும் சைகை காட்டுவோம். இரு பகுதியாரும் சைகை காட்டிவிட்டு இனி இதனாற் பெறுவது யாதுமில்லை யென்று உணர்ந்து வேறு கருமங்களைப் பார்ப்போம். ஒருநாள் எங்களிலொருவர்க்குத் தண்ணீர்த் தாகம் ஏற்பட்டது. அதை ஆங்கிலத்திற் சொல்ல அவருக்குப் புலப்படவில்லை. நாங்கள் அண்ணாந்து தண்ணீர் குடிப்பது வழக்கமாகையால் நாங்கள் அண்ணாந்து வாயை ஆவென்றபடி சைகைகள் காட்டினோம். அப்போதும் அவர்களுக்குச் சங்கதி புலப்படவில்லை. தண்ணீரைவிட வாயோடு சம்பந்தப்பட்ட சுருட்டு, சாப்பாடு முதலிய பொருள்களெல்லாம் கொண்டு வந்தார்கள். கடைசியாய் ஒருபடி தண்ணீரும் வந்தது. எங்கள் சத்திரகாரன் சிறிது நகைச் சுவையுள்ளவர். எங்கள் படுக்கைகளை ஆயத்தப்படுத்திவிட்டு வந்து 'எல்லாம் ஒழுங்காயிற்று; இனிப் படுக்கலாம்' என்று தெரிவிப்பதற்குத் தமது கையை மடக்கித் தலையை ஒருபக்கம் சரித்து உரத்த தொனியிற் குறட்டையிடுவார். நாமும் அவர் முறையையே கைக்கொண்டு நித்திரைக்குப்போக நேரமாய்விட்டதென்று தெரிவிப்போம்.

நாங்கள் யப்பானுக்குச் செல்லு முன்னரே உலகப் பிரசித்தி பெற்ற யப்பானியப் புலவராகிய யேனெஜிரோ நோகுச்சி என்னும் புலவரைப்பற்றி அறிந்திருந்தோம். அவர் இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன் இலங்கைக்கு வந்துபோனவர். இந்திய கவி தாகூருடன் நட்புரிமை பூண்டவர். அவரைக் காண விரும்பி எங்களுடைய வழிகாட்டி ஒருவரை

அழைத்து அவரது இல்லத்தைத் தேடிப் புறப்பட் டோம். அவர் வீடு தொகியோ நகரிலிருந்து 12 மைல் இருக்கும். புனிதமான வீடு; அழகான தோட்டம். ஆழ்ந்த கண்களும் நீண்ட மயிருமுடைய மெலிந்த மனுஷன். வெள்ளைச் சுருட்டுப் புகைத்துக்கொண் டிருந்தார். உடலமைப்பிலும் கண்ணின் நோக்கி லுமே கவித்திறம் தோற்றும். மரத்தன்மை, மிருகத் தன்மை, தெய்வத்தன்மை முதலியன ஓரளவில் உடலமைப்பிலும் முகத் தோற்றத்திலும் வெளிப் படும். இவர் உள்ளம் எப்போதும் பரவசமான நிலையிலுள தென்பது அவர் உடலைப் பார்க்கப் புலப்படும். நாங்கள் அவர் வீட்டுவாயிலை அடைந் ததும் அவரது பணிப்பெண் ஒருத்தி நாம் வீட்டுக்குட் போடவேண்டிய பாதரட்சைகளை வாயிற்படியில் வைத்து, நாம் அணிந்திருந்த பாதரட்சைகளைக் களைந்துவிடவேண்டு மென்றும், வாயிற்படியில் வைத்த பாதரட்சைகளை அணியவேண்டு மென்றும் சைகை காட்டினுள்.

நாங்கள் இலங்கையிலிருந்து யப்பானுக்குப் புறப்பட முன்னமே, எங்களுக்கனுப்பிய விளம்ப ரங்கள், துண்டுப்பத்திரங்கள் முதலியவற்றில் நாங் கள் யப்பானி லிருக்கும்போது ஒழுகவேண்டிய முறைகள் பல குறிக்கப்பட்டிருந்தன. முக்கியமாக யப்பானிய வீடொன்றுக்குள், தெருவீதிகளில் அணி யும் பாதரட்சைகளுடன் செல்லக்கூடா தென்றும், அது அந்த வீட்டுக்காரருக்கு ஒரு மரியாதைக் குறை வான செயலென்றும் வற்புறுத்தப்பட்டிருந்தது. இந்த ஒழுங்கு சத்திரகாரரரற்கூட அதி சிரத்தை

யுடன் அனுட்டிக்கப்படுகிறதொன்று. ஆகையால் இப் பணிப்பெண் காட்டிய சைகைகளின் பொருள் எங்களுக்கு இலகுவாய் விளங்கிவிட்டது.

நாங்கள் உள்ளே செல்ல அவர் எழும்பி எங்களைத் தலைவணங்கி வரவேற்றார். மற்ற நாட்டு மக்களைப் போல யப்பானியர் ஒருமுறை தலையசைப்பதுடன் நின்றுவிடமாட்டார்கள். மூன்று நான்கு தரம் அவர்கள் தலையையும் முழு உடம்பையும் அரை வரை வளைத்து வணங்கி உபசரிப்பார்கள். நமக்கு, அவர்கள் ஒருவரை ஒருவர் உபசரிக்கும்போது பார்த்தால் அவர்கள் ஓயாது வணங்குவதுபோலவே தோன்றும். அவர்கள் எங்களை உபசரிக்கும்போதெல்லாம் எப்பொழுது வணக்கத்தை நிறுத்துவதென்று தெரியாமல் நாம் கஷ்டப்பட நேர்ந்தது.

நிற்க, புலவர் அவர்கள் எங்களை ஆசனங்களில் அமரச்செய்து சிற்றுண்டி பரிமாறினர். பின் இலங்கை, இந்தியா, சீன - யப்பானிய யுத்தம் ஆகிய விஷயங்களைப்பற்றி வார்த்தையாடினோம். வார்த்தையாடும்போது 'ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாய'. 'வேங்கடாசலம்' என்னும் இரு இந்தியப் பெரியாரைப்பற்றி எனக்குத் தெரியுமோ என்று அவர் வினவினார். நான் அவர்கள் இருபேரையும் நன்குயறிவேனென்றும் அவ்விருவரும் எங்கள் நாட்டிற்கு வந்தபோது என்னுடன் தங்கினார்களென்றுஞ் சொல்லித் திரு. வேங்கடாசலம் எழுதிய ஒரு கட்டுரை அடங்கிய யாழ்ப்பாணக் கல்லூரிப் பத்திரிகை ஒன்றை அவரிடம் கொடுத்தேன். பின் அவருடைய மனைவியாரையும் பிள்ளைகளையும்

காண விருப்பமுடையோமென்று தெரிவித்தோம். அவர் தமது மனைவியையும் வீட்டிலிருந்த தமது மகளையும் அழைத்து நாம் ஆங்கிலத்திற் சொன்ன எல்லாவற்றையும் தமது மொழியிற் பெயர்த்துக் கூறினர். இப்படியே ஏறக்குறைய இரண்டு மணி வரையில் எம்முடன் காலங்கழித்தனர். தம்முடைய அழகிய தோட்டத்திற்கு எம்மை அழைத்துச்சென்று அங்குள்ள பூமரங்கள் ஒவ்வொன்றையும்பற்றி எங்களோடு ஆர்வத்துடன் பேசி ஒவ்வொன்றின் சிறப்பையும் அதி இன்பத்துடன் எமக்கெடுத்துக்காட்டி மகிழ்ந்தார். வீட்டிலிருந்து நாங்கள் புறப்பட அவரும் அவருடைய மனைவியாரும் மகளும் வாயிற்படி வரைக்கும் வந்து நிலம் வரைக்கும் குனிந்து வணங்கி வழியனுப்பினர்கள். இவரை நாம் சந்திக்கக் கிடைத்தது பெரியதோர் பேறென்றே எண்ணினேம்.

நாம் கண்ட காட்சிகளில் இன்னும் ஒன்றை மாத்திரம் கூறி இக் கட்டுரையை முடிப்பாம். இலங்கையில் நுவரெலியா இருப்பது போல் யப்பானில் 'நிக்கோ' என்னும் குளிர்ந்த இடம் உண்டு. அது குளிருக்காகமாத்திரம் பெயர்பெற்ற ஓர் இடமன்று; இயற்கை வனப்பு நிறைந்த இடம். மலைகளும் பல வர்ணமான பூக்களும், நீர் வீழ்ச்சிகளும் நிறைந்த ஓர் இடம். 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்று பண்டைத் தமிழ்ப் புலவர் கூறிய வனப்பு அங்கே நிறைந்திருப்பதுபோல், யாண்டுங் காண்டல் அரிது. இலங்கையில் வதுளைக்கு அண்மையில் 'துங்கிந்தா' என்று வழங்கப்படும் ஒரு நீர் வீழ்ச்சியுண்டு. அப் பெயரிலே 'துங்' என்னும் சிங்களச்

சொல்லுக்குப் புகை என்பது பொருள். இந்த நீர் வீழ்ச்சியைப் பார்த்தவர்களுக்கு இந்தப் பெயரின் பொருத்தம் நன்கு புலப்படும். அதி உயரமான மலையிலிருந்து நீர் பள்ளத்தாக்கில் விழும்போது கற் பாறையுடன் மோதி நீர்த்துளிகள் புகைபோலச் சிதறிப் பறக்கும். நீரோ புகையோ என்று ஐயந் தோன்றக்கூடியமாதிரியில் நீர் பறக்கும். இலங்கையிலே இருக்கும் துங்கிந்தாவைப்போற் பன்மடங்கு சிறப்புள்ள நீர்வீழ்ச்சி நிக்கோ என்னும் ஊருக்கு அணித்தாய் உண்டு. எம் அரசினரைப்போலல்லாது யப்பானிய அரசினர், இவ் வழகுத் தெய்வத்தின் கோயிலைப் பிரயாணிகள் யாவரும் பார்த்து இன்புற்று, யப்பான் நாட்டு வியாபாரத்துறையிலும் ஊதிபம் கிடைக்குமாறு வேண்டிய வசதிகளெல்லாஞ் செய்து வைத்திருக்கிறார்கள்.

உலகத்திலே இயற்கை அழகு நிறைந்த காட்சிகள் பலவுள; அவை எல்லாவற்றிலும் நீர்வீழ்ச்சிகளைப் போல் என் மனதைக் கொள்ளைகொள்ளக்கூடியது வேறொன்றுமில்லை. அவற்றின் கெம்பீர கெதியும், ஓங்கார ஒலிபோன்ற இரைச்சலும், மின்னல் ஒளியை ஒக்கும் காந்தியும் எப்போதும் என்னுள்ளத்தை அடிமை கொள்ளும் ஆற்றல் படைத்தவை.

---

## 8. இமயம் சேர்ந்த காக்கை

சிறு குழந்தை, ‘குறு குறு நடந்து, சிறு கை நீட்டிக்’ காக்கையைப் பிடிக்கப்போகிறது. குழந்தையின் கை தனது முதுகிற் படும்வரையும் அசையாமலிருந்த காக்கை மெல்லென எழுந்து, ஒரு பாகம் தள்ளி உட்காருகிறது. குழந்தை மீட்டுந் தொடர்ந்து தொடப்போகும் சமயத்திலே, இன்னும் ஒரு பாகம் தள்ளி உட்காருகிறது. குழந்தையும் காக்கையும் நண்பர்கள். ‘காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா!’ என்று குழந்தை பாடுகிறது. இலகுவாக எழுந்து பறந்து மெல்லென அமருவதனுலே பஞ்சதந்திர நூலாசிரியர் முன்னொரு காக்கைக்கு, ‘இலகுபதனன்’ என்று பெயரிட்டு வழங்கினுரோ, வேறேதாவது காரணம் இருக்குமோ தெரியவில்லை.

*　　　*　　　*　　　*

இவை ஒருபாலாக காக்கைக் குலத்துக்கே ஒரு பெரும் பழிச்சொல் ஏற்பட்டிருக்கிறது. இந்திரன் சிறுவன் சயந்தன் காக்கை வடிவாக வந்து சீதா பிராட்டியாரது திருமேனியைத் தீண்ட முயன்ருனம். இராமபிரான் ‘வல்லவன் கையிற் புல்லும் ஆயுதம்’ என்றபடி ஓர் அறுகம் புல்லினைக் கிள்ளி அவ் வஞ்சகக் காக்கைமீது எறிந்தாராம். இராமபாணந் தப்புவதே கிடையாது. காக்கை மேலேழுலகும் கீழேழுலகும் எங்கும் பறந்து பல தேவர்களிடம் முறையிட்டதாம். ஒன்றும் முடியாமற் கடைசியிலே இராகவனையே சரண்புகுந்ததாம். அடைக்கலம் புகுந்

தோரைக் காப்பாற்றும் அவ் வண்ணல் வஞ்சகக் காக்கையினது ஒரு கண்ணைக் கொண்டுபோகும்படி இராமபாணத்துக்குக் கட்டளையிட்டாராம். அன்று முதலாகக் காக்கைக் குலம் அனைத்துக்குமே இரு கண்ணுள் ஒரு மணியாயிற்றாம். சயந்தன் செய்த பிழைக்குக் காக்கைக் குலம் ஈடு. இது என்ன நீதி? நமது முதற் தாய் தந்தையரை வஞ்சித்த சாத்தான் ஏதேன் தோட்டத்திலே பாம்பு வடிவமாகப் புகுந்தானும். பாம்பு செய்த பிழைக்காக யேகோவா பாம்புக் குலம் முழுவதும் மண்ணிலே நகர்ந்துசெல்ல வேண்டுமென்று சாபமிட்டாராம். பாம்புக் குலம் மண்ணில் நகரும் நீதியும், காக்கைக் குலத்திற்கு ஒரு கண்மணி போன நீதியும் ஒரே நீதிதான்.

மேலும், அகத்திய முனிவரது கமண்டலத்திலிருந்த காவிரி நீரைச் சிவகுமாரன், காக்கையாகச் சென்று கவிழ்த்துவிட்டாராம். 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா' மலைத்தலைய கடற் காவிரி, சோழநாட்டிற்கு வளந்தரும் காவிரி, பெருகுவதற்குக் காக்கை காரணமாக இருந்ததென்றால் அது காக்கைக் குலத்துக்கே ஒரு பெரும் பேறாகுமல்லவா? 'கங்கைகொண்ட சோழன்' என்பது போல 'காவிரி கொண்ட காக்கையர்' குலம் என்று காக்கைகளுக்கு ஒரு விருது எழுதிவிடலாம்!

* * * *

இது இங்ஙனமாக, யாப்பருங்கலக்காரிகை ஆசிரியர் இமயம் சேர்ந்த காக்கை பொன்னிறமாகுமென்று சொன்னாரே; இந்த உண்மையை இமயத்திலே ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டுமென

இமயத்திற்கு வருமுன் என்னுள்ளத்திலே ஓர் ஆசை பிறந்தது.

* * * *

நான் இவ்விடம் வந்து சேர்ந்தது கார்காலமும் கூதிர்காலமும் ஒருங்கியைந்த இலையுதிர் காலத்தில். அக் காலத்திலே, ஆச்சிரமத்துப் பாதையின் இரு மருங்கிலும் ஓங்கி வளர்ந்து நிற்கும் தேவதாரு மரங்கள் நிரம்பப் பூத்திருந்தன. பூக்களிலிருந்து சிந்திய மகரந்தப் பொடியானது பாதையினையும், பாதையோரத்தி லிருந்த கற்பாவிய குடிசையினையும் பொன்னிறமாக்கி விட்டது. சில பூக்களைப் பறித்துப் புறங்கையிலே பூசினேன். கருமை பொன்மையாயிற்று. இக் காரணத்தினாலேதான் இம் மலைக்குப் பொன்மலை என்று பெயர் எய்தியதா யிருக்கலாம் என்று நினைத்தேன்.

'தேவதரு மலர்விரிந்து சிந்தியபூந் துகள்செறிந்து
மேவியபொன் வண்ணத்த வீதியெலாம்'

என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன். வந்து இரண்டு தினங்களுக்குள்ளே கூதிர்காலம் வந்து தடுத்தது. தண்ணீருறைகின்ற கடுங்குளிர்; நாங்கள் எல்லோரும் விறகுகட்டைகளை அடுக்கி நெருப்பினை வளர்த்துக் கை கால்களைக் காய்ச்சிக்கொள்வோம். கம்பிளிக் கால்மேசு, கம்பிளிக் கைமேசு, கம்பிளிச்சட்டை, போர்வை இவையெல்லாம் அணிந்திருக்கும்போதுகூடப் பல்லுக் கொடுகும். இப்படியிருக்க, ஒரு நாள் வானம் இருண்டு ஆலங்கட்டி பெய்தது. மிளகுப் பரிமாணம் முதற் கொட்டைப் பாக்குப் பரிமாணம் வரையுமுள்ள பனிக் கட்டிகள்

பேரிரைச்சலோடு பொழியும்போது, வானத்தி லிருந்து விழும் செருமானியர் குண்டுக்கு அஞ்சி ஒதுக்கிடம் தேடிய இலண்டன் மாநகர மக்களைப் போல நாங்களும் வீட்டினுள்ளே நுழைந்துகொண் டோம். சிறிது நேரத்திலே ஆலங்கட்டி மழையும் இரைச்சலும் நின்றுவிட ஓர் அமைதி ஏற்பட்டது. ஞாயிற்றினது மெல்லென்ற கதிர்கள் வீசின; பற வைகள் ஒதுக்கிடத்தி லிருந்து புறப்பட்டன. நாங் களும் வெளியே வந்தோம். காலை ஒன்பது மணி இருக்கும்; காற்றுச் சிறிதேனும் இல்லை. நந்தியா வர்த்த மலர்களையும், முல்லை முகைகளையும், மல்லிகை மெல்லரும்புகளையும், நறுக்கிய வெள்ளிச் சரிகையை யும், பாலின் நுரையையும், அன்னத்தின் தூவியை யும் வானவர் வாரி வாரி இறைப்பது போல மழை வீழ்ந்தது. செங்கதிர்ப் பரிதி தண்கதிர் மதியம்போல் விளங்கியது. நிலவுக் கதிர் விழுவது போல மரங்க ளின் இலைகள்மீது பனி பொழிந்தது. நிலத்திலே நான்கு அங்குலத்திற்குப் பனி மூடியது. பாற்கடல் போலப் பார்த்தவிட மெங்கும் தூய வெள்ளை நிறம்; மலைகளெல்லாம் வெள்ளிக்குன்றங்களாக மாறிவிட் டன. மணற் சீனிபோல நிலத்தின்மேற் கிடந்த பனி யின்மேல் நாங்கள் வெறுங்காலோடு நடக்க, அது வும் மணல் போலச் சொரு சொரு என்று விட்டுக் கொடுத்தது. இரண்டுநாட் கழித்து மீட்டும் இம் மழை. கூரையிலிருந்து வடிகின்ற பனி, பளிங்குப் பிளவுபோல அழகு காலும். மொத்தம் முப்பது அங்குலத்துக்கு மேல் பனிமழை பெய்யக் கண்டேன். தேவதாரு மலர்களைக் குறித்து எடுத்த பாட்டு நிறை வெய்தியது.

தேவதரு மலர்விரிந்து சிந்தியபூந் துகள்செறிந்து
மேவியபொன் வண்ணத்த வீதியெலாம் அன்னத்தின்
தூவியெனப் பால்நுரையின் தோற்றமென இமம்வீழத்
தாவில்புகழ் வெள்ளிவெற்பின் தவளநிறம் பெறுவனவே.

இப்படித் தோற்றிய வெள்ளி மலைகளைச் சூரிய தேவன், தனது இரசவாத வித்தையினாலே, பொன்னாக்கும் வித்தையினைக் காண, அதிகாலையிலே விழித்தெழ வேண்டும். நான் வசிக்கும் அறையிலிருந்து பார்க்க நேரே தெரிவது திருக்கேதாரமலை. அதற்கணித்தாகத் திரிசூலி; அதற்கப்பால் நந்தாதேவி— இது இந்தியாவிலே ஆக உயர்ந்த கொடுமுடி; எவரெஸ்ட் — திபேத்து நாட்டிற் குரியது.

ஞாயிறு தோற்றுவதற்கு முன்னே, இருளிலே காரிரும்பு போலத் தோற்றிய மலைச் சிகரங்கள், இளங்கதிர் பட்டவுடனே பொன்னாகின்ற காட்சி விந்தையாயிருக்கும். கால்மணி நேரத்துக்குள்ளே, பொன்னெல்லாம் வெள்ளியாய்ப் போய்விடும். மீட்டும் மாலையிலே செங்கதிர்க் கிரணங்கள் செறியக் கால் மணி நேரத்துக்கு இமயம் பொற்கோட்டிமயமாகும்.

* * * *

கூதிர்க்காலம் கழிந்தது. இளவேனிற்காலம் வந்தது. செடி கொடிகள் தளிரீன்று, முகையரும்பிப் பூமலர்ந்தன. உச்சிப்பொழுதிலே ஒரு நாள் எங்கேயோ இருந்து ஒரு காக்கை வந்தது. மெலிந்த தோற்றம். நமது காக்கைகளைப் போல உள்ளக் கிளர்ச்சியுடன் கரையாமல் ‘இங்குவா’, ‘இங்குவா’ ‘இங்குவா’ என்று நலிந்த குரலிலே கரைந்தது.

பொன்னிறமோ என்று பார்த்தேன்; இல்லை. உருக்கிறைற் செய்த அரத்தினது தோற்றமாக இருந்தது. ஏது, புலவர் சொல் பொய்த்துவிட்டதோ என்று எண்ணினேன். புலவர் சொல் பொய்க்கவில்லை. காலை எழுந்திருத்தலும், மாலை குளித்து மனைபுகுதலும் மேலான காக்கைக்குரிய குணம். இந்த மூடக் காக்கை, காலை யிளங்கதிரிலோ மாலைச் செங்கதிரிலோ தனது குலவொழுக்கம் குன்றாது வந்திருக்குமாயின், செங்கதிர்ச் செல்வன் இரசவாதம் செய்து ஒரு நாழிகைப் பொழுது பொற்காக்கை யாக்கியிருப்பான். உச்சிக்காலத்திலே இது வந்ததுதான் தவறு என்று நினைத்தேன். காக்கையும் பறந்து போய் விட்டது.

# 9. கம்பர் காட்டும் பெண்கள்

இராமாயணக் கதை தமிழ் மக்கள் யாவருக்கும் நன்கு தெரிந்த ஒரு கதை. இந்தக் கதையின் நிகழ்ச்சிகளுக்குப் பெரும்பாலும் பெண்களின் சூழ்ச்சிகளே காரணங்களாக விருக்கின்றன. கூனியும் சூர்ப்பணகையும் சூழ்ச்சி செய்யாவிட்டால் இராமர் காட்டுக்குப் போனதும் இராவணன் சீதையைச் சிறை வைத்ததும் நிகழ்ந்திருக்க முடியாது. துர்க்குணங்கள் நிறைந்த பெண்களுடைய சூழ்ச்சிகளால் அவர்களைச் சேர்ந்தோர்க்கும் நாட்டு மக்களுக்கும் பல தீமைகள் உண்டாகும் என்பதை இராமாயணம் சிறப்பாகக் காட்டுகிறது. தமிழ் இராமாயணத்தின் ஆசிரியராகிய கம்பர் பெண்களுடைய சிறப்பியல்புகளை யெல்லாம் பலவகையான நிகழ்ச்சிகளோடு தொடர்புபடுத்திக் காட்டியிருக்கிறார்.

சீதை, கோசலை முதலியோரையும், தாடகை, சூர்ப்பணகை, கூனி என்போரையும் தமிழ் மக்கள் நன்கறிவர். சிறந்த பெண்களைச் சீதை என்று போற்றுவதும், துர்க்குணமுள்ள பெண்களைத் தாடகை, சூர்ப்பணகை, கூனி என்று பழிப்பதும் தமிழ் நாட்டுக் கிராமங்களில் இன்றும் நிகழ்ந்து வருகின்றன.

கம்பன் அழகுறத் தீட்டிய பெண் பாத்திரங்களுள் சீதை, கைகேசி, கோசலை, கூனி, தாடகை,

சூர்ப்பணகை, மண்டோதரி, திரிசடை, தாரை முதலி யோரை விசேடமாகக் குறிப்பிடலாம். இவர்களின் இயல்பைச் சுருக்கமாக அறிவோம்.

முதலிற் சீதையைப் பார்ப்போம். இராமா யணத்தின் கதாநாயகி சீதாபிராட்டியாரே. இராமா யணம், சிறையிலிருந்த செல்வியின் ஏற்றத்தைக் கூறுகிற தென்று அறிஞர் உரைப்பர். இலங்கை யில் அசோக வனத்திற் சீதாபிராட்டியார் சிறை யிருந்து பெருந்தவஞ் செய்தார். அதனுல் தர்மம் தழைத்தது ; அதர்மம் அழிந்தது. இன்பம் பெருகியது ; துன்பம் தொலேந்தது. அன்றியும் நாட்டுமக்களின் நல்வாழ்வுக்குப் பெண்களின் நல்லொழுக்கமும் தியாகமுமே இன்றியமையாதன என்பதும் நிலேநாட்டப்பட்டது. பெண்களிடத்து அமையவேண்டிய பெருங் குணங்களே யெல்லாம் கம்பர் சீதாபிராட்டியாரிடம் வைத்து அவரை ஒரு இலட்சியப் பெண்ணுகச் சிருட்டித்துள்ளார். சுருங் கக் கூறின், கற்பினுக்கு அரசாகவும், அழகினுக்கு அழகாகவும், புகழின் எல்லேயாகவும், நாணம் மடம் முதலிய பெண்மைக் குணங்களுக்கு இருப்பிடமாக வும் பிராட்டியார் விளங்குகிருர் எனலாம்.

அழகிலே சீதாபிராட்டியாருக்கு நிகரான வர்கள் இந்த உலகில் இல்லே. அகத்தழகும் நல் லுணர்வும் இல்லாத சூர்ப்பணகைகூடச் சீதா பிராட்டியாரின் அழகைக் கண்டு அதிசயப்பட்டு விட்டாள். தண்டகாரணியத்திலே சீதையைக் கண்ட சூர்ப்பணகை தன் கண்களே அப்புறப்படுத்தாமல் அவருடைய அழகினே நெடுநேரம் பருகினுள் ;

அழகினுக்கு எல்லையில்லை என்றுணர்ந்தாள். ஆண்களை அன்றிப் பெண்களையும் மயக்கும் பேரழகுடைய பிராட்டியார், நற்குணங்கள் யாவும் உடையவர் எனினும், அவரிடத்தும் பெண்பாலார்க்குத் தனிமையாகவுள்ள சில குறைகள் இல்லாமல் இல்லை. இக் குறைகளே அவரை நமது அனுதாபத்துக்குரிய பாத்திரமாக ஆக்குகின்றன என்பதையும் நாம் உணரவேண்டும். இராமர் பதினான்கு வருடம் காட்டுக்குப் போகவேண்டி வந்தபோது, 'காட்டுக்கு நானும் கட்டாயம் வருவேன்' என்று அவர் இராமரோடு வாதாடினர்; பிடிவாதம் செய்தார்; பெண்களின் இயல்பினைக் காட்டினர். காட்டிலே இராவணனால் அனுப்பப்பட்ட மாரீசனாகிய மாயப் பொன் மானைக் கண்டவுடன் பிடித்துத் தரும்படி கேட்டதும், வீட்டிலே அழகிய கிளிகளை அவர் வளர்த்ததும் அவருக்கு அழகான பொருள்களில் இருந்த ஆசையைக் காட்டுகின்றன. மாரீசனாகிய மாய மானின் பின் சென்ற இராமர் திரும்பி வராமையால் இலக்குவனைப் போய்ப் பார்க்கும்படி கேட்டார். இலக்குவன் உடனே போக விரும்பாதது கண்டு அவனைத் திட்டிய கோபாவேசம் 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பதை மாத்திரமன்று, பெண்களுக்கு இயல்பாகவுள்ள சபல குணத்தையுங் காட்டுகிறது. இலக்குவனை அச்சமயத்துக் கடிந்து பேசிய பிராட்டியார், தாம் அப்படிச் செய்தமையாற்றான் இலக்குவன் பிரிந்து செல்ல, இராவணன் தம்மைத் தூக்கிச் சென்றான் என்பதைப் பின்னர் உணர்ந்தார்; தம் மதியீனத்தை நினைந்து நினைந்து வருந்தினர்; அசோக

வனத்தில் அனுமானைக் கண்டபோது தாம் இலக்கு வனைக் கடிந்து பேசியதற்குக் காரணம் தமது ‘பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையே’ என்று வெளிப்படையாகவுங் கூறினர்.

இராமர் எப்போது வருவார் என்று இலங்கையில் இருக்கும்போது ஏங்கித் தவித்தார்; கடைசியில் உயிர்விடவுந் தீர்மானித்தார். இப்படி விரைவில் மனம் அழிந்த பிராட்டியார் இராவணனைத் திட்டும்பொழுதும், அவனை நாய் என்று பழிக்கும் பொழுதும், தமது கற்பின் திண்மையைக் காட்டி வீரப் பெண்ணாகவும் விளங்கினர். எவ்வித இடர் வந்துற்றபோதும் இராமரையே நினைந்து நினைந்து உறுதியுடன் தம் கற்பினைக் காத்து நின்ற அவர், கற்புடைப் பெண்களுக்கு ஒரு பேரொளியாகும். அசோகவனத்திலே பிராட்டியாரைக் கண்டுவந்த இராமதூதன், ‘இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும், கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்’ என்று அவருடைய அரும் பெருங் குணங்களை அழகாக எடுத்துக் கூறியுளன்.

இனிக் கோசலையின் இயல்புகள் ஆராயத் தக்கன. கோசலை, இராமனைப் பெற்ற தாய், பொறுமை, கற்பு, தாய்மை முதலிய பண்புகளுக்கு இருப்பிடமாக அவள் விளங்குகிருள். தன் மகனுகிய இராமன் முடிசூடப்போகிருனென்று பெருமிதமோ, தன் சக்களத்தியாகிய கைகேசியின் மகன் அரசுரிமையைத் தாயின் சூழ்ச்சியாற் பெற்றுவிட்டானென்று பொருமையோ கொள்ளாத நல்லா

ளாகவும் அவள் மிளிர்கிருள். தாராளமான மனம் படைத்தவளாகிய கோசலை இராமனிடங் கொண்ட அன்பினலே தானும் காட்டுக்குப் போக விரும்பியது அவளுடைய புத்திர வாஞ்சையைக் காட்டுகிறது. இராமன், 'தங்கள் கடன் தங்கள் கணவனை ஓம்புதலே' என்று கூறியதும், உண்மையை உணர்ந்து நாட்டிலிருந்து நாயகனைத் தேற்றியது அவளது கடமை உணர்ச்சியைப் புலனாக்குகின்றது. கங்கை வேடனாகிய குகன் தாழ்ந்த சாதியினனாயினும் அவன் காட்டிய பேரன்பு காரணமாக அவனைத் தன் மக்களுள் ஒருவனாகக்கொண்டு பாராட்டிய பெருஞ்செயல் தாழ்ந்த சாதியினரையும் சமமாக மதிக்கும் அவருடைய பெருந்தன்மைக்குச் சான்று பகர்கின்றது.

கைகேசி தசரதச் சக்கரவர்த்தியின் இளைய மனைவி; பரதனைப் பெற்ற தாய்; அரச குடும்பத்திற் பிறந்து சக்கரவர்த்தியின் காதல் நாயகியாக இருக்கிறேன் என்னும் பெருமிதம் உடையவள்; ஆடம்பர வாழ்விலும் பிறருக்குக் கொஞ்சமுங் குறையாத நிலைமையிலும் ஆசைகொண்டவள்; பட்டம், பதவி, மண், பொன் முதலியவற்றில் மோகங்கொண்டவள். தன் பெருமைக்கு — செல்வாக்குக்கு — ஏதம் வருமாயின் அதனை நீக்க எதனையுஞ் செய்யத் துணிபவள். இராமனைத் தன் மகன் போலவே மதித்து அளவிலாத அன்பு கொண்டிருந்த அவளுக்கு, 'இராமன் முடிசூடுதலால் கோசலை சக்கரவர்த்தியின் தாயாக, நீ முடியிழந்த ஒரு மன்னனின் மனைவியாகத்தானே வாழ்வாய்' என்று கூனி உபதேசித்தாள். உடனே கோசலையை

விடத் தான் மதிப்படைய எண்ணி இராமன் காடாளவும் தன் மகன் பரதன் நாடாளவும் சூழ்ச்சி செய்தாள் இக் கொடியாள். இராமன்பாற் கொண்ட அன்பை மாத்திரமா துறந்தாள்! காதலுடன் கைப்பிடித்த கணவன், தன் சூழ்ச்சியால் இறப்பான் என்பதையும் இவள் பொருட்படுத்தவில்லை. 'இராமனைக் காட்டுக்கு அனுப்பாதே; அனுப்பினுல் நான் மாள்வேன்; எனக்கு உயிர்ப் பிச்சை தா!' என்று தன் நாயகன் இரக்கவும் இரங்காத கூற்றம் ஆனுள் அவள். தோற்றத்தில் நல்லவர்களாக இருக்கும் பெண்கள் தம் நலம் கருதி நீலிகளாக மாறும் இயல்பைத்தான் கைகேசி கடைசியிற் காட்டினுள்.

இந்தக் கைகேசிகூட நல்லவளாக இருந்திருப்பாள், கூனி என்னுங் கொடியவள் அவளின் மனத்தை மாற்ருவிட்டால். கூனி கைகேசியின் தோழி; காரணமின்றியும் பிறர்மேல் அழுக்காறு கொள்ளும் இயல்புடையவள். பாரதத்தில் துன்மதிக்கும் சூழ்ச்சிக்கும் எவ்வாறு சகுனி மாமா விளங்குகிருரோ அவ்வாறே இராமாயணத்தில் கூனி விளங்குகிருள். பெண் இனத்துக்கே வசையீட்டி விளங்கும் இக்கூனியைக் கம்பர் மிக நுட்பமாகப் படைத்திருக்கிருர். அடுத்துக் கெடுக்கும் குணமும், பிறர் நன்ருய் வாழப் பொருத தன்மையும் அவளின் இயல்புகள். கைகேசி போன்ற அன்பும் அறிவும் நிரம்பிய பெண்களையும் மனம் மாறச் செய்யுஞ் சூட்சித் திறனும், சொல்வன்மையும் அவளிடம் காணப்பட்டன. நடிப்பும், பழிக்கு அஞ்சாமையும், எடுத்த காரியத்தை முடிக்கும் திண்மையும்

கூனியின் தனிப் பெருமைகள். நாம் வெறுக்கும் பாத்திரங்களுள் கூனியைப் போன்ற தொன்றினைக் காண முடியாது. சின்னஞ் சிறு கூனி தன் சூழ்ச்சியால் நாடு முழுவதையுங் கலக்கி வைத்துவிடுகிருளென்பதை உணரும்பொழுது கூனியைத் திட்டவே யாரும் எண்ணுவர்.

இனி, இலங்கையில் வாழ்ந்த அரக்கர் குடியிலுள்ள பெண்களிற் சிலரைப் பார்ப்போம். இராமன் குடியை முடித்த கூனி போல இராவணனுடைய குடிக்கு அழிவு தேடினவள் சூர்ப்பணகையே. இராவணன் தங்கையாகிய இவள் இராமனைக் காட்டிலே கண்டவுடன் காதல் கொண்டாள்; 'அஞ்சொல் இள மஞ்ஞையென அன்னமென' அசைந்து காதல் மொழிகளைப் பிதற்றினாள். ஆனால், அருகிலே சீதையைக் கண்டவுடனே அவளுக்குப் பொருமையும் கோபமும் உண்டாயின. சீதையைச் சக்களத்தியாக அவள் எண்ணினாள். இராமனிடங் கொண்ட விருப்பும், அதற்கிடையூருக விருக்கும் சீதையின்மேற் கொண்ட வெறுப்பும் சீதையைத் தொலைத்து விடும்படி அவளைத் தூண்டின. சீதையின் அழகைப் பழித்து அவளைத் தூற்றினாள்; எடுத்துச் செல்ல முயன்றாள். கடைசியில் இலக்குவனால் மூக்கரியுண்டு தமையனை அடைந்து புலம்பினாள். தான் செய்த கொடுஞ் செயல்களை அவனுக்குச் சொல்லாது அவன் பொருட்டுச் சீதையைக் கொண்டுவர முயன்றதாலேயே தனக்கு மானபங்கம் ஏற்பட்டதென்று பொய்சொல்லிப் பாசாங்கு செய்தாள்; சீதையின் அழகை வருணித்து அவனை அவளிடம்

காதல்கொள்ளுமாறு செய்தாள்; அரக்கர் குலம் அழிவதற்கே அடிகோலினுள். இராவணன் முதலி யோர் அழிந்ததற்குச் சூர்ப்பணகை இராமன் மேற் கொண்ட காமமே காரணமாயிற்று. பெண்கள் தகாத ஆசை கொண்டால் அவ்வாசை குடி குலம் முழுவதையுமே அழித்துவிடும் என்பதை அவளின் காம விளையாட்டு நன்கு காட்டுகிறது.

சூர்ப்பணகையின் பாட்டியாகிய தாடகையைப் பற்றி இரண்டொரு வார்த்தை. தாடகையிடம் பெண்மைக் குணமேயில்லை. உருவம் மாத்திரந் தான் பெண். அந்த உருவத்தில் ஆண்மையும் கொடுமையுமே குடியிருந்தன. பெண்ணுருவத்தில் ஆண்மைக் குணம் கொண்டவர்களை நாம் 'ஆண் மாரிகள்' என்கிறோம். இந்த ஆண்மாரிகளுக்குள் 'ஆண்மாரி' தாடகை.

இராவணனுடைய குடும்பத்தில் சூர்ப்பணகை, தாடகை போன்ற கொடிய பெண்கள் இருந்தாலும் விபீடணன் மகளாகிய திரிசடையும், இராவணன் மனைவியாகிய மண்டோதரியும் போன்ற குணச் செல்விகளும் இருந்திருக்கிறார்கள். இளம் அரக்கிக ளுள்ளே திரிசடை ஒரு ஞானசூரியன் போலத் திகழ்ந்தாள்; அன்பும் அறிவும் தியாக குணமும் படைத்தவள் அவள். சீதையின் காவலாளர்களுள் ஒருத்தியாக அசோக வனத்திலிருந்த திரிசடை, சீதையிடம் மெய்யன்பும் உண்மை நட்பும் கொண்டு, புலிகளுக்கிடையில் வாழ்ந்த மான்போல் இலங்கையில் அரக்கியருக்கிடையில் விளங்கினுள்.

இராவணன் மனைவி மண்டோதரியின் மாண்பு இணையற்றது. இராவணன் உயிர் நீத்தவுடன் தானும் உயிர்நீத்த தலைக் கற்புடைய நங்கை அவள். தன் நாயகன் எவ்வளவு கெட்டவனாயிருப்பினும் அவனைத் தூற்றாது போற்றி உயிரென மதித்து வாழ்ந்த அவள் பெண்ணினத்துக்கு ஓர் அணி. இப் பெருந் திண்மை நிலையினாலே — கற்பினாலே — மூவுலகப் பெண்டிரும் அவளைப் போற்றினார்கள்; மணிவாசகரும் அவளுடைய புகழைப் பாடினார். சிறந்த கற்புடைய பெண்டிரை உயர்ந்தோர் போற்றுவர் என்று இளங்கோவடிகள் இயம்பினார். இராமாயணத்திலே சீதையும் மண்டோதரியும் யாவருடைய போற்றுதலுக்கும் உரிமையுடைய கற்பரசிகளாக என்றும் விளங்குவர்.

---

# 10. யூலியஸ் சீசர்

**யூ**லியஸ் சீசர் இத்தாலியின் சர்வாதிகாரியா யிருந்தவர். இத்தாலி ஒரு குடியரசு நாடாய் இருந்த தாயினும் அங்கே உயர்குடிமக்களின் ஆட்சியே நடைபெற்றுவந்தது. சாதாரண மக்கள் அரசியல் உரிமை பெற முயலும்போ தெல்லாம் அங்கே அடிக்கடி போட்டியும் கலகமும் நிகழ்ந்துவந்தன.

யூலியஸ் சீசர் தனது படைகளுடன் இத்தாலியை விட்டு சென்று பத்து வருட காலம் யுத்தஞ் செய்து பிரான்ஸ், பிரித்தானியா முதலிய நாடுகளை வென்று, அந் நாட்டு அரசர்களைச் சிறையாக்கிப் பெரும் பொருளைத் திறையாகப் பெற்று இத்தாலியின் தலைநகரான உரோமாபுரியில் வெற்றிவீரராக மீண்டு வந்தார்.

உரோமாபுரியில் ஆண்டுதோறும் நடைபெறும் நகரவிழா, யூலியஸ் சீசரின் வெற்றி காரணமாக அவ் வருடஞ் சிறப்பாக நடைபெற ஒழுங்குசெய்யப் பட்டது. சீசர் அவ் விழாவிற்கு ஊர்வலமாகப் பெருமிதத்துடன் சென்றார். அவ் வூர்வலத்திற் சீச ரின் மனைவியாகிய கல்பூர்ணியாவும் சீசரின் நண்ப னை மார்க் அந்தோனியும் அநேக பெருங்குடி மக்களுங் கலந்து சென்றுகொண்டிருந்தனர்.

“ஏ! சீசரே! யூலியஸ் சீசரே!” என ஒரு சத்தம் கேட்டது. சீசர் அதனை அவதானித்தார். “மார்ச் மாதத்து நடுநாளில் நின் பெருமிதம் என்ன ஆகிறது பார்!!” என்ற எச்சரிக்கை முந்திய சத்தத் தைத் தொடர்ந்துவந்தது. அதனைக் கூறியவனைச்

சீசர் அறிவார். 'ஏதோ பைத்தியம்' என்று மனதில் எண்ணிக்கொண்டு சீசர் ஊர்வலத்தை மேற்கொண்டார்.

அவ் விழா மண்டபத்தில், சீசர், அந்தோனியுடன் கூடிப் பெருமிதமாக நடந்துவந்துகொண்டிருந்தார். அந்தோனி ஒருவனே அன்று அவருடன் நெருங்கி உறவாட முடிந்தது. மற்றையோரை யெல்லாம் காஸ்கா என்னும் ஒருவன் சீசர் பக்கம் வாராதபடி தடுத்தான். அன்றைய விழாவில் சீசருக்கு முடி சூட்டி அவரை மன்னன் ஆக்கும் முயற்சியில் அந்தோனியும் அவனது நண்பர்கள் சிலரும் முயன்றனர். அதனல் காஸியஸ் என்பான் சீசரிற் பொருமை கொண்டான். வேறும் பலர் சீசரில் வெறுப்புக் கொண்டமையைக் காஸியஸ் அவ்வவர்கள் முகக்குறி மூலம் அறிந்துகொண்டான். அவன் பார்வை சிறப்பாக மார்க்கஸ் புரூட்டஸ் என்பவன் மீதே சென்றது.

மார்க்கஸ் புரூட்டஸ், உரோமின் மிகப் பழைய பெருங்குடி ஒன்றைச் சேர்ந்தவன். இந்தப் புரூட்டஸ் என்பவன் உரோமில் முடியாட்சியை வீழ்த்திக் குடியாட்சியை ஏற்படுத்திய பெருந் தலைவனுகிய ஜூனியஸ் லூசியஸ் புரூட்டஸ் என்பவனின் வழி வந்தவன். சீசரும் புரூட்டஸும் ஒருவரில் ஒருவர் அன்பும் மதிப்பும் உடையவர்கள். அப்படி யிருந்தும் சீசருடைய அரசியற் போக்கில் புரூட்டஸ் வெறுப்படைந்தான். ஏழு நூற்றுண்டுகளாக நிலை பெற்றிருந்த குடியாட்சியை அழித்து சீசர் முடியாட்சியை நிறுவ முயல்வது புரூட்டஸுக்குத் தாங்க

முடியாத துயரைக் கொடுத்தது. எனவே நட்பு ஒரு புறமுங் கொள்கை ஒருபுறமுமாக அவர் மனத்திற் போராடின.

விழா நாளன்று புரூட்டஸ், சீசரது தற் பெருமையையும், சீசரது நண்பர்களின் சிறுமையை யும் பார்த்து முகத்தில் வெறுப்பும் ஏளனமும் பிரதி பலிக்க ஒருபுறத்தே நின்றான். இதனைக் கூர்ந்து அவதானித்த காஸியஸ், புரூட்டஸை அடைந்து அவன் மன நிலையை நன்கு அறிந்து புரூட்டஸை நோக்கி, "உரோமைநகர மக்கள் சீசரின் முடியாட் சியை வெறுக்கிறார்கள். அவரது கொடுங்கோன் மையைத் தாங்கமுடியாது வருந்துகிறார்கள். குடி யாட்சிக்கு ஒரு குல தெய்வமாகிய ஜூலியஸ் புரூட் டஸின் வழிவந்த நீதான் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்" என்று நயவஞ்சகமாகத் தன் கருத்தைத் தெரி வித்தான்.

புரூட்டஸ் தனக்குள் சிந்திக்கத் தொடங்கினான். 'நான் எங்ஙனம் வழிகாட்டுவேன். சீசர் பெருந் தன்மையும் வீரமும் உடையவர். அவரே இங்ஙனம் செய்யின் என் செய்வது' என்று சிந்திக்கும் பொழுது விழாமண்டபத்திலிருந்து வந்த ஒரு பேராரவாரச் சத்தம் புரூட்டஸின் சிந்தனையைக் கலைத்தது. அது கேட்ட புரூட்டஸ் "நான் கேள்விப் பட்டபடியே சீசருக்கு அந்தோனியின் முயற்சியால் முடிசூட்டப்பட்டிருக்கவேண்டும்" என்று சிறிது உரக்கச் சொன்னான். இதனையே சந்தர்ப்பமாக்கி காஸியஸ், "இதோ பார் புரூட்டஸ்! நீதான் இருக்

கிருய். நீ புரூட்டஸ்; அவர் சீசர். சீசருக்கும் புரூட்டஸுக்கும் என்ன வேற்றுமை? ஆனுல் நீ புரூட்டஸாக நடந்துகொள்ளவில்லையே!" என்று புரூட்டஸுக்குக் கூறினுன். இவ் வார்த்தைகள் புரூட்டஸுக்குச் சிறிது உற்சாகமூட்டின.

"சரி, காஸியஸ், நீ கூறியதை மறவேன். அதைக் குறித்து மீண்டுங் கலந்து ஆராய்வோம்; இதோ சீசரும் கூட்டத்தினரும் வருகிருர்கள்" என்று கூறிவிட்டுப் புரூட்டஸ் அப்பாற் சென்ருன். காஸியஸ் மாத்திரம் அங்கே நின்ருன்.

சீசர் திரும்பி வரும்போது அவர் அந்தோனியின் தோள்களின்மேல் கைபோட்டுப் பேசிக்கொண்டே வந்தார். அச்சமயம் அவரது உடை பேரரசர்க்குரிய கருஞ்சிவப்பு உடை; அவர் பார்வை உலகெலாம் தனதெனப் பார்க்கும் பார்வை! "இனி, சீசர் முடிசூட்டப்படுவது நிச்சயம். அதுவும் மார்ச் மாதத்து நடுநாளிற் கூட இருக்கும் அரசியல் மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும்" என்று அவரது நண்பர்கள் கூறிக்கொண்டனர். ஆயின்! விதி வேறுவிதம் இருந்தது.

சீசரும் கூட்டத்தினரும் காஸியஸைக் கடந்து செல்லும் நேரத்தில், காஸியஸ், முன்போல எழுச்சியின்றி ஒதுங்கி வந்துகொண்டிருந்த காஸ்காவின் மேலுடையைப் பிடித்து இழுத்து நிறுத்தி, அன்று கூட்டத்தில் நடைபெற்ற அனைத்தையும் அறிந்துகொண்டான். அன்று மூன்று முறை அந்தோனி, சீசருக்கு முடிசூட்ட முற்பட்டதையும், சீசர் வேண்டா வெறுப்பாய் அதைத் தடுத்ததையும் காஸ்கா

விளக்கிக் கூறினன். அவனிடம் காஸியஸ் தன் எண்ணங்களைப் பக்குவமாகத் தெரிவித்து அவனையும் தன் சதிக்கு உடந்தையாக்கிக்கொண்டான். இவ் விருவர் முயற்சியாலும் திரெளபோனியஸ், தெஸிமஸ், மெதெலஸ் சிம்பர், ஸின்ன முதலிய இளைஞர் பலர் இச் சதித் திட்டத்திற் கலந்துகொண்டனர். ஆயினும் இவர்கள் பொதுமக்கள் அன்பையும் மதிப்பையும் பெருதவர்கள். ஆகவே எவ்விதமாயினும் பொதுஜன அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான மார்க்கஸ் புரூட்டஸைத் தங்கள் தலைவனுக்கிக் கொள்ள விரும்பினர்கள். பலவித சூழ்ச்சிகள் செய்து மார்க்கஸ் புரூட்டஸைத் தங்கள் தலைவனுக்கிக் கொண்டனர். அவர்கள் மார்க்கஸ் புரூட்டஸின் வீட்டுக்குப் பின்புறமுள்ள தோட்டத்தில் இரவிற் கடையாமத்திற் கூடி 'சீசரை மார்ச் மாதத்து நடு நாளில் நிகழவிருக்கும் அரசியல்மன்றக் கூட்டத்திற் கொல்லவேண்டு' மென்னுஞ் சதித் திட்டத்தை உருவாக்கினர்.

மார்ச் மாதத்து நடுப்பகுதி; மறுநாள் அரசியல் மன்றக் கூட்டம் நிகழப்போகிறது. அன்றிரவு கல்பூர்ணியா தன் கணவன் இறப்பது போன்ற பல தீக் கனுக்களைக் கண்டாள். அதனுல் மறுநாள் அரசியல் மன்றத்துக்குப் போகப் புறப்பட்ட சீசரை அன்று எங்கும் வெளியே போக வேண்டாமெனத் தடுத்தாள். ஆயின் சீசர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதற்கிடையிற் சதிகாரருள் ஒருவனுகிய தெஸிமஸ் அங்கே வந்து சீசர் வெளியே போவதைக் கல்பூர்ணியா தடுப்பதையும் அவர்

சிறிது தயங்குவதையும் கண்டான். உடனே அவன் "பாராளும் சீசர் ஒரு பாவை சொல்லுக் கிணங்கி அரசியல் மன்றத்திற் கடமை செய்யப் பின்வாங்கி ஞல் உலகஞ் சிரிக்கும்" என்று கூறினன். உடனே சீசர், கல்பூர்ணியாவின் பிடியை உதறிக்கொண்டு அவளைத் திரும்பிப் பாராமலே புறப்பட்டார்.

சீசர் போகும்போது, நகர விழாவன்று அவரை எச்சரித்த அம் மனிதன் வழியிற் காணப்பட்டான். சீசர் அவனைப் பார்த்து "உன் நடுநாள் வந்துவிட்டதே, உன் எச்சரிக்கை என்ன ஆயிற்று" என்று கேட்டார். அப்பொழுது அவன் அமைதியுடன், "ஆம்; நடுநாள் வந்துவிட்டதுதான்! ஆனல் அது போய்விடவில்லையே!" என்ருன்.

சீசரின் நண்பர் அவரை முடி மன்னராக்கக் குறித்து வைத்திருந்த நேரமும் இடமுமே, அவரின் எதிரிகள் அவரைக் கொலைசெய்து உரோமக் குடியரசை ஸ்தாபிக்க முடிவுசெய்த நேரமும் இடமுமாகும். இதனை எப்படியோ சீசரின் நண்பர்களுள் ஒருவரான ஒரு வழக்கறிஞர் அறிந்திருந்தார். இதை அவர் சீசருக்குத் தெரிவிக்கச் சமயம் வாய்க்காமையால் ஒரு கடித மூலம் தெரிவிக்க எண்ணினர். ஆயின் அக் கடிதத்தைப் பெறச் சீசர் மறுத்துவிட்டார். சதிகாரரின் சூழ்ச்சியால் அந்தோனி வேருேரிடத்துக்கு அகற்றப்பட்டுவிட்டான்.

சீசர் அரசியல் மன்றத்தின் வாயிலை அடைந்துவிட்டார். அவ் வாயிலில் இருந்த சிலையின் பக்கத்தில் அவர் வந்தார். சதிகாரர் அனைவரும் சீசரைச் சுற்றி நின்றனர். சீசரால் நாடுகடத்தப்பட்ட

ஒருவனின் உறவினன் ஒருவன், அவனை நாட்டுக்குத் திரும்ப அழைக்கும் வேண்டுகோளைச் சீசரிடம் நீட்டினான். அப்பொழுது சீசர், "வேண்டாம், வேண்டாம்; நீ கேட்க வேண்டுவதில்லை. உன் வேண்டுகோள் செல்லாது" என்றார். அவ் வேண்டுகோளுக்குத் துணைபுரிவார் போன்று காஸியஸும், புரூட்டஸும் முன்வந்தனர். அப்போது புரூட்டஸ் கூட "இச் சிறு செய்கைக்குத் துணையா? ஆயினும் என்ன? சீசர் தீமை செய்வதுமில்லை, செய்தபின் பின்வாங்குவதுமில்லை; அவர் செய்தது செய்தது தான்" என்றார்.

அதன்பின் ஸின்னா என்பவன் வந்து பணிந்தான். சீசர் பொறுமை இழந்து "சீசரை யாராலும் அசைக்க முடியாது; புரூட்டஸால் அசைக்க முடியாததை நீ காணவில்லையா?" என்றார்.

இதுவே தக்க சமயமெனக் கண்ட காஸ்கா, "ஆயின் இதனால் அசைக்கமுடியும்" என்று கூறிக் கொண்டு தனது உடைவாளால் சீசரின் முதுகிற் குத்தினான். சீசர் திடுக்கிட்டுப் பின்னால் திரும்புமுன் மற்றக் குத்துக்கள் விழுந்தன. மார்க்கஸ் புரூட்டஸ் அமைதியுடன் சீசரின் முன்சென்று நின்று, உடைவாளை ஓங்கி, "உரோமின் பகைவன் வீழ்க; விடுதலையின் விரோதி அழிக;" என்று கூறிக்கொண்டு சீசரின் மார்பிற் குத்தினான்.

இதனைக் கண்ட சீசர் திகைத்து "என்ன...... நீயுமா? புரூட்டஸ்?" என்றார். உடனே நிலத்தில்—அச் சிலையின் பக்கத்தில்—வீழ்ந்தார். அந்தக் காயத்தினால் சீசர் சில நொடிக்குள் உயிர் நீத்தார். சதிகாரரின் திட்டம் நிறைவேறிவிட்டது. ஆயின் !!?

## II

சீசர் இறந்துவிட்டார் என்பதைச் சதிகாரர் கண்டவுடன் ‘ சுதந்திரம் வாழ்க ! சமத்துவம் வாழ்க ! கொடுங்கோன்மை வீழ்க !’ என்று உரத்துச் சத்த மிட்டுக் குதூகலித்தனர்.

தமது திட்டம் நிறைவேறியவுடன் அரசியல் மன்றத்தினர்க்குத் தன் கட்சியின் கொள்கைகளை விளக்கிக் குடியரசை ஏற்படுத்த வேண்டுமென்பது புரூட்டஸின் ஏற்பாடு. இதற்குரிய ஆயத்தங்கள் நிகழ்ந்தன. ஆயின் நகரில் ஏற்பட்ட பரபரப்பு இன்னும் அடங்கவில்லை.

இச் சமயத்து ஒரு வேலையாள் அரசியல் மன் றத்துள் பிரவேசித்தான். அவன் அந்தோனியின் வேலைக்காரன். அவன் நேராகப் புரூட்டஸ் இருக்கு மிடம் சென்றான் ; முழந்தாளில் நின்று பணிந்தான். பிறகு அவன் கூறியதாவது :

“ மார்க் அந்தோனி முதலில் தங்களை முழந் தாளில் நின்று பணியுமாறு எனக்குக் கட்டளையிட் டார். பிறகு அவர் பின்வருவனவற்றைத் தெரி விக்குமாறு சொன்னார். அது இது : ‘ புரூட்டஸ் பெருந்தன்மை வாய்ந்தவர் ; புத்திமான் ; நேர்மை யாளன். சீசர் வலியவர் ; துணிவாளி ; பெருமை யுடையவர் ; நட்பைப் பேணி வளர்ப்பவர் !’

“ ‘ நான் புரூட்டஸை அன்பினாற் கௌரவித் தேன் ; சீசரைப் பயத்தினாற் கௌரவித்தேன். ஆயின் சீசருடைய நட்பு என்னைக் கவர்ந்தது. நட்பு ஓர் உயர்தரமான குணம். ஆகவே, நான் அபாய

மின்றிப் புரூட்டஸ் இருக்குமிடத்தை அடைய முடியு மாயின் சீசருடைய நண்பன் என்ற முறையில் நட்புக் கடனாற்றிச் சீசரின் உடலை அடக்கஞ் செய்ய மட்டும் விரும்புகிறேன். புரூட்டஸின் உத்தரவுக்குக் காத்திருக்கிறேன்' '' என்று அவ் வேலையாள் கூறும் போது, காஸியஸ் "அந்தோனி பசுப்போலிருந்து புலிபோற் பாய்பவன்; அவனுக்கு இடங் கொடுக்க வேண்டாம்" என்று புரூட்டஸிடம் கூறினான்.

"காஸியஸ், நீ ஏன் இப்படி அஞ்சுகிறாய்; சீசரின் உடலை அடக்கஞ் செய்யும் உரிமையைத்தானே அவன் கேட்கிறான். செத்த உடலுமா நமக்குப் பகை" என்று கூறி, "அந்தோனி சீசரின் உடலை அடக்கஞ் செய்ய வரலாம்" என்று வேலைக்காரனிடம் புரூட்டஸ் தெரிவித்தான்.

சிறிது நேரத்தில் அந்தோனி அங்கே வந்தான். நேரே சீசரின் உடலம் கிடந்த இடத்துக்குச் சென்றான். அவ்வுடலை மூடிய திரையை நீக்கிவிட்டுச் சிறிது நேரம் கதறி அழுதான். பிறகு கண்களைத் துடைத்துக்கொண்டு கிளர்ச்சிக்காரர் முன் சென்று தன் மேலுடையை நீக்கி மார்பைக் காட்டி, "நண்பர்களே! சீசரின் இரத்தத்தால் உங்கள் உடைவாள்களின் விடாய் தீராவிட்டால், இதோ! என் நெஞ்சையும் பிளந்து அவற்றின் விடாயைத் தீர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் அவரிடம் நட்புக் கொண்ட குற்றம் என்னிடமும் உண்டு" என்றான். அவனது நடிப்பைக் கண்டு கிளர்ச்சிக்காரர் கூட அவனிடம் இரக்கம் கொண்டனர். அப்போது புரூட்டஸ் "சகோதரனே! சீசரை நேசிப்பது குற்றமாயின் அதில் எனக்கும் பங்குண்டு. நான்

அவருடைய ஆட்சி முறையையே பகைத்தேன். உன்னிடம் எங்களுக்கு ஒருவித பகையும் இல்லை" என்று கூறினன்.

பின்பு, "முதலில் என் கட்சியின் நிலையை யாவரும் அறிய நானே விளக்கிக் கூறுவேன். அதன்பின் நீ உனது நட்புக் கடனை ஆற்றிச் சீசரின் உடலை அடக்கஞ் செய்யலாம்" என்று புருட்டஸ் அந்தோனியிடம் தெரிவித்தான்.

புருட்டஸ் முதலில் மேடைக்கு வந்தான்; நகர மக்களைப் பார்த்துப் பேசத் தொடங்கினன். அவன் சொன்னது இது: "புருட்டஸ் எதற்காகச் சீசரின் விரோதியானன் என்று என்னை யாராவது கேட்டால், அதற்கு நான் கூறும் விடை இதுதான். அதன் காரணம், நான் சீசரை நேசிக்கவில்லை என்பதன்று; நான் உரோமாபுரியைச் சீசரைவிட அதிகமாக நேசித்தேன் என்பதுதான். எதை நீங்கள் அதிகம் விரும்புகிறீர்கள்? சீசர் உயிருடன் வாழ உரோமாபுரி மக்கள் அடிமைகளாக மாள்வதையா? அல்லது, சீசர் இறக்க, உரோமநகர வாசிகள் சுதந்திர மனிதர்களாக விளங்குவதையா?

"சீசர் என்னை மிகவும் நேசித்தார்; அதற்காக நான் கண்ணீர் விடுகிறேன். சீசர் நாட்டுக்கு மிகுந்த செல்வத்தைத் தேடிவைத்தார்; அதற்காக நான் அவரைப் போற்றுகிறேன். அவர் மிகுந்த தைரியம் வாய்ந்தவர்; அதற்காக நான் அவரைக் கௌரவிக்கிறேன். ஆனல் அவர் மிகுந்த பேராசையுடையவர்; அதற்காக நான் அவரைக் கொன்றேன். அன்புக்கு அழுகை; செல்வத்திற்கு மகிழ்ச்சி; வலிமைக்குப் பெருமை; ஆசைக்கு மரணம்.

"இங்கே, 'விடுதலை வேண்டாம்: அடிமையே வேண்டும்' என்று கூறுபவர் யாராவது இருந்தால் அவர்கள் பேசட்டும்: இதோ இடந் தருகிறேன்.

"நான் உரோமன், என்று இறுமாப்புடன் கூறிக்கொள்ள விரும்பாதவர் யாராவது இருந்தால் அவர்கள் இங்கே வரட்டும். அவர்கள் பதிலுக்குக் காத்திருக்கிறேன்.

"நாட்டின் பகைவர் யாராவது இருந்தால் அவர்கள் இங்கே வரட்டும்" என்று புரூட்டஸ் கூறும்போது "யாருமில்லை; நீரே தலைவர்" என்ற ஒலிகள் கூட்டத்திலிருந்து கிளம்பின.

புரூட்டஸ் மேடையை விட்டுக் கீழே இறங்கினான். சில வேலைக்காரர்களின் உதவியுடன் சீசரின் உடலை எடுத்துக்கொண்டு வந்து அங்கே வைத்த அந்தோனி, மேடையினின்று இறங்கி வரும் புரூட்டஸைத் தழுவிக் கொண்டு மேடைமீதேறினான். புரூட்டஸ் அவ்விடம் விட்டகன்றான்.

அந்தோனி பேசத் தொடங்கினான். அங்கிருக்கும் பொதுமக்கள் தன்னையுந் தன் சொற்பொழிவையும் வெறுப்பார்கள் என்பது அந்தோனிக்குத் தெரியும். ஆகவே அந்தோனி தன் பேச்சை மிகப் பணிவாக ஆரம்பித்தான்.

"நான் சீசரைப் புகழ்வதற்காக இங்கு வரவில்லை; நான் சீசரின் உடலை அடக்கம் பண்ணவே வந்திருக்கிறேன். ஒருவர் செய்த தீமைகள் அவருக்குப் பிறகும் இவ்வுலகில் நிற்கும். ஆனால் அவர் செய்த நன்மைகள் அவர் சடலத்

துடன் புதைக்கப்படும். சீசர் பேராசையுடையவர் என்று பெருமைவாய்ந்த புரூட்டஸ் உங்களுக்குச் சொன்னார். அது உண்மையானல், அது மிகப் பெரிய தவறு; சீசர் அதன் பலனை அநுபவித்து விட்டார்.

"புரூட்டஸும் மற்றையோர்களும் பெருந் தன்மை வாய்ந்தவர்கள். பெரியோர்களே! நான் சீசரின் உடலை அடக்கஞ் செய்ய வந்திருக்கிறேன், என்னுடைய நண்பர்; எனது நம்பிக்கைக்குச் சீசர் பாத்திரமானவர்; நீதிவாய்ந்தவர்; ஆனல் அவர் பேராசையுடையவ ரென்று புரூட்டஸ் கூறுகிருர். புரூட்டஸ் பெருந்தன்மையும் கௌரவமும் உடையவர்.

"சீசர் பல பகை அரசர்களைக் கைதிகளாக உரோமாபுரிக்குக் கொண்டுவந்தார். அவ்வரசர்க ளது பெருந்தொகைப் பணமெல்லாம் உரோமாபுரிப் பொதுமக்களது பொக்கிஷசாலையை நிரப்பின. இது சீசரது பேராசையின் அடையாளமா?

"வறியவர்கள் அழ நேர்ந்தபோது சீசர் கண் ணீர் விட்டார். பேராசை யென்பது ஒரு கடின மான வஸ்து; ஆயின் சீசர் பேராசையுடையவ ரென்று புரூட்டஸ் சொல்லுகிருர். புரூட்டஸ் மிகவும் உயர்தர மனிதர். நீங்கள் எல்லோரும் அறி வீர்கள்; நகரவிழாவின்போது நான் மும்முறை முடியைச் சீசருக்கு அளித்தேன்; அவர் மும்முறையும் மறுத்தார்; இது பேராசையின் அறிகுறியா?

"நான் புரூட்டஸ் பேசியதை மறுத்துப் பேச வரவில்லை. அவர் மிகப் பெருந்தன்மை வாய்ந்தவர்.

எனக்குத் தெரிந்தவற்றை மாத்திரம் நான் இங்கே பேசுகிறேன். நீங்கள் முன்பு சீசரை மிகவும் நேசித்தீர்கள். காரணமின்றி நீங்கள் அப்படிச் செய்திருக்கமாட்டீர்கள். ஆனால் இன்று நீங்கள் அவருக்காகக் கண்ணீர்விடாதபடி உங்களைத் தடுப்பது என்ன ?"

இச் சமயத்தில் அந்தோனி உணர்ச்சியுடன் பேசினான். அவன் கண்கள் கலங்கின. உணர்ச்சி பிரவாகித்தது. பொதுமக்கள் அவ்வுணர்ச்சியினால் நிலைதளம்பினார்கள். அவர்களது மனம் மாறுபட ஆரம்பித்தது.

அந்தோனி மறுபடியும் பேச ஆரம்பித்தான்.

"நேற்று, சீசரின் ஒரு வார்த்தையே இந்த உலகத்தை எதிர்த்து நிற்கப் போதிய வலியுடையதா யிருந்தது. ஆயின், இன்று!......அவரை மதிப் பார் யாருமில்லை" என்று கூறிய அந்தோனி, அப்பால் இன்னும் அமைதியாகப் பேசினான்.

"நான் உங்கள் இருதயத்துக்கும் மனத்துக்கும் எழுச்சி உண்டாக்குவேனானால் எனக்கு இங்கே பேச அனுமதி யளித்த புரூட்டஸுக்கும் காஸியஸ் முதலாயினோர்க்குங் குற்றஞ் செய்தவனாவேன். அவர்கள் எனது கௌரவத்துக்குரியவர்கள். நான் அவர்களுக்குக் குற்றஞ் செய்யமாட்டேன்" என்று அந்தோனி கூறிக்கொண்டு சுருட்டப்பட்ட ஒரு காகிதத்தை அவர்களுக்குத் தெரியும்படி காட்டி, "இதோ! சீசரின் முத்திரை யிடப்பட்ட மரண சாதன உறுதி யிருக்கிறது. இதுவே சீசரின் இறுதி வேண்டுகோள். இதை நான் அவருடைய

அந்தரங்க மண்டபத்திற் கண்டு எடுத்தேன். இந்த மரணசாதனத்தில் எழுதப்பட்டிருப்பதை உங்களில் யாராவது அறிந்தால் (நான் இதை வாசிக்க விரும்பவில்லை) அவர்கள் ஓடிவந்து சீசரின் உடலிலுள்ள காயங்களை முத்தமிடுவார்கள். தங்களுடைய கைக் குட்டைகளைச் சீசருடைய இரத்தத்தில் நனைத்து ஞாபகப் பொருளாகப் பாதுகாப்பார்கள்.

"ஆம்; அவருடைய உரோமங்களில் ஒன்றையாவது இரந்து வாங்கி அதை அவருடைய ஞாபகச் சின்னமாகப் போற்றுவார்கள். அவருடைய இறப்பைப் பொறுக்கமாட்டாது வருந்துவார்கள்" என்று அந்தோனி கூறும்போது, பொதுமக்கள் அந்த உறுதியை வாசிக்கும்படி சத்தமிட்டார்கள்.

"பெருமையுள்ள நண்பர்களே! தயவுசெய்து அமைதியாயிருங்கள்; நான் இதை வாசிக்க விரும்பவில்லை. ஏனென்றால் சீசர் உங்களை எவ்வளவு நேசித்தார் என்பதை நீங்கள் அறியக்கூடாது. நீங்கள் மரக்கட்டைகள் அல்லர்; கற்களும் அல்லர்; நீங்கள் மனிதர்கள். ஆனபடியால் சீசரின் மரணசாதனம் உங்களுக்குச் சதிகாரரின்மேற் கோபத்தை மூட்டிவிடும். உங்களைப் பைத்தியக்காரர்கள் ஆக்கிவிடும். நீங்கள் சீசருடைய வாரிசுகள் என்பதை, நீங்கள் அறிவது நல்லதல்ல. அங்ஙனம் நீவிர் அறியின், என்ன சம்பவிக்குமோ என நான் அஞ்சுகிறேன்" என்று அந்தோனி கூறப் பொதுமக்கள் மேலுஞ் சத்தமிட்டு "அந்த உறுதியை வாசி" எனக் கூக்குரலிட்டனர்.

அப்பொழுது அந்தோனி "தயவுசெய்து அமைதியாய் இருப்பீர்களா? ஒரு சிறிது தாமதிப்பீர்களா? நான் மிகவுந் தூரத்துக்குப் போய்விட்டேன். சீசரைக் கொன்ற பெருந்தன்மையாளருக்கு நான் தீங்கு செய்கிறேனோ என்று பயப்படுகிறேன்" என்று கூற, பொதுமக்கள் "அவர்கள் கொலையாளிகள்; துஷ்டர்கள்; வஞ்சகர்கள்; துரோகிகள்; நீ உறுதியை வாசி" என்று சத்தமிட்டார்கள்.

"நீங்கள் என்னை வற்புறுத்துவதால் நான் அதை வாசிக்கிறேன்" என்று கூறிச் சீசரின் உடல் வைக்கப்பட்டிருந்த இடத்தை ஒரு முறை பார்த்து, பின்பு அவர்களை நோக்கி "மரணசாதனத்தை வாசிப்பதற்குமுன் இதனை எழுதியவரை நான் ஒரு முறை உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன். நான் ஒருமுறை கீழே வரலாமா? நீங்கள் எனக்குச் சிறிது இடந் தருவீர்களா?" என்று கேட்டான்.

"ஆம்; கீழே வாருங்கள்! கீழே வாருங்கள்!!" என்று கூறிச் சீசரின் உடல் வைக்கப்பட்ட பெட்டியின் பக்கத்தே நின்றோர் அந்தோனிக்கு இடம் விட்டனர்.

அந்தோனி மேடையினின்று கீழே வந்து சீசரின் சடலம் வைக்கப்பட்ட பெட்டியின் பக்கத்தே நின்றான். அப்போது அங்கே ஒரு பயங்கர அமைதி குடிகொண்டிருந்தது. அந்தோனி மறுபடியும் பேசத் தொடங்கினான்.

"உங்களிடங் கண்ணீர் இருக்குமானல் அவற்றைச் சொரிய ஆயத்தஞ் செய்யுங்கள்!" என்று அந்தோனி கூறிக்கொண்டு சீசரின் உடலை மூடியிருந்த அழகிய போர்வையை எடுத்து அவர்களுக்குக் காட்டி "நீங்கள் எல்லோரும் இந்தப் போர்வையை அறிந்திருப்பீர்கள். சீசர் இதனை முதன் முதல் அணிந்த சமயம் எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது! அது வேனிற் காலத்துப் பிற்பகல்! பகை நாட்டினர்மேற் படையெடுத்த சமயம் அது!" என்று கூறி, சீசரின் உடலிலுள்ள காயங்களையும் கிழிவுகளையும் ஒவ்வொன்ருகக் காட்டி, "இதோ பாருங்கள்! இந்த இடத்தைக் காஷியஸின் குத்துவாள் பிளந்திருக்கிறது! இங்கே பாருங்கள்! இதுதான், காஸ்காவின் உடைவாள் செய்த காயம். இந்தப் பிளப்பினூடேதான் சீசரால் மிகவும் நேசிக்கப்பட்ட புருட்டஸின் உடைவாள் புகுந்தது. புருட்டஸ் அந்த வாளை வெளியே இழுத்தபோது சீசரின் குருதி குபீரிட்டுப் பாய்ந்த மாதிரியைப் பாருங்கள்! புருட்டஸ் ஏன் இவ்வாறு சீசரின் இருதயத்தைப் பிளந்தார். சீசர் புருட்டஸை எவ்விதம் நேசித்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். இதுதானே, அதற்காகப் புருட்டஸ் செய்த கைம்மாறு!

"நீதிபதிகளே! ஓ, தேவதைகளே! சீசர் இவர்களை எவ்வளவு அன்புடன் நேசித்தார். அதன் பதிலுபகாரங்கள்தான் சீசரின் உடலின்மீது கிடக்கும் இக் காயங்கள்! இரக்கமற்ற வெட்டுக்கள்!"

இச் சமயத்து பொதுமக்கள் கதறலும் கண்ணீருமாய் நின்றனர். அப்பொழுது அந்தோனி,

"இந்தச் செயலைச் செய்தவர்கள் மிகவும் விவேகிகள். அவர்கள் மனதில் வேறு ஏதோ அந்தரங்கமான காரணம் இருக்கவேண்டும்! அது என்ன என்று எனக்குத் தெரியாது! அவர்கள் மிகவும் புத்திசாலிகள். நீங்கள் சந்தேகப்படாமல் தங்கள் செயலுக்கு அவர்கள் தக்க காரணங் காட்டுவார்கள்! நான் புரூட்டஸைப் போல ஒரு நாவலன் அல்லன்; உங்கள் எல்லோருக்கும் என்னைத் தெரியும். நான் ஒரு சாதாரண மனிதன். நான் சீசரை நேசித்தேன். அவரைப்பற்றி நான் அறிந்ததைச் சொல்லுகிறேன். நான் புரூட்டஸ் ஆகவும், புரூட்டஸ் அந்தோனியாகவும் இருந்திருந்தால், அந்த அந்தோனி உங்கள் உயிருக்கே அழைப்பு விட்டிருப்பான்; சீசரின் உடலிலுள்ள ஒவ்வொரு காயமுஞ் சீசருக்காக வாய்விட்டுப் பேசும்படி செய்திருப்பான். அக் காயங்கள் ஒவ்வொன்றும் உங்களைப் பார்த்துப் பேசும். அப் பேச்சு ரோமாபுரியிலுள்ள கற்களைக்கூட உயிருள்ளனவாக — உணர்ச்சியுள்ளனவாக மாற்றும்! ஆயின் இப்பொழுது அப்படியான நிலைமை இல்லையே!" என்று கூறி இரங்கினன்.

பொதுமக்கள் இப்பொழுது மிகவும் கோபமுடையவர்களாய்ப் புரூட்டஸின் வீட்டுக்குத் தீ மூட்டக் கிளம்பினர். ஆயின் அந்தோனி அவர்களை மேலும் கோபமடையச் செய்ய விரும்பி அவர்களைப் பார்த்து,

"தயவுசெய்து ஒருமுறை எனக்குச் செவிசாயுங்கள்! நீங்கள் ஏன் இப்படிக் கோபம்

அடைந்தீர்கள்? சீசருக்காக நீங்கள் ஏன் இப்படிக் கண்ணீர் விடுகிறீர்கள்? அது உங்களுக்குத் தெரியாது; எனக்குத் தெரியும்; அதை நான் உங்களுக்குச் சொல்லவேண்டும். நீங்கள் அந்த மரணசாசனத்தை மறந்துவிட்டீர்களே!" என்று கூறினான்.

பொதுமக்கள் அதை வாசிக்குமாறு தூண்டினார்கள். அந்தோனி அதனை விரித்து, "இது தான் அந்த உறுதி; இதில் சீசரின் முத்திரை இடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு உரோமாபுரி வாசியும், குழந்தையுங்கூட, இந்த மரணசாசனத்தின் மூலம் எழுபத்தைந்து *டிருச்சம்ஸ் பெறச் சந்தர்ப்பமளித்திருக்கிறார் சீசர். அதுமாத்திரமா? தைபர் நதிக் கரையிலுள்ள தமது பூஞ்சோலைகளையும் பழமரத் தோட்டங்களையும் சீசர் உங்களதும் உங்கள் சந்ததியினரதுஞ் சொத்தாக்கியிருக்கிறார். இவ்வாறு சுயநலங் கருதாது உங்களுக்காகவே வாழ்ந்தார் சீசர்! இப்படிப்பட்ட சீசர்! ஆ! அத்தகைய சீசர் இங்கே வீழ்ந்து கிடக்கிறார்! மற்றொரு சீசர் இனி எப்பொழுது வரப்போகிறாரோ!" என்று அந்தோனி கூற, பொதுமக்கள் "ஒரு பொழுதும் வரப்போவதில்லை; ஒரு பொழுதும் வரப்போவதில்லை" என்று சத்தமிட்டுக்கொண்டு கட்டுக்கடங்காமற் சீசரின் உடலையுந் தூக்கிக் கொண்டு சந்தைகூடும் இடத்துக்கு ஓடினார்கள். அங்கே கூடி, அகப்பட்ட யன்னல், கதவு முதலிய பொருள்களை எல்லாம் எடுத்து அடுக்கி அதில்

---

*டிருச்சம்ஸ் என்பது உரோமாபுரியில் வழங்கும் நாணயம்.

சீசரின் ஈமத்தை எரித்தார்கள். அதில் எரிந்த குறங்கொள்ளிகளை எடுத்துக்கொண்டு சதிகாரர்களுடைய வீடுகளை நோக்கி ஓடினார்கள். அவ் வீடுகளுக்கு எரியூட்டினார்கள்.

உரோமாபுரியின் அரசியற் கொந்தளிப்பு இவ்வாறிருந்து பல வருடங்களின் பின் சாந்தியடைந்தது. இறுதியில் புருட்டஸ் தற்கொலை செய்து உயிர் விட்டான்.

# URAINADAI VIRUNTHU

Approved by the Educational Publications Board as a Text Book for use in Schools and Colleges in Ceylon on 30-7-53.

North-Ceylon Tamil Works Publishing House
CHUNNAKAM :: PRICE: Rs. 1-50

Printed at the Thirumakal Press, Chunnakam